SRI A. A. RASHEED : Why did the police pitch upon these two clubs in the city when there are so many clubs in the city which derive the income from the card game?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member can kindly give information as to the other clubs which indulge in such activities, I shall certainly take action.

Polytechnic School for Salem

* 18 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Polytechnic School in Salem; and

(*b*) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes, Sir. Final decision will be taken shortly.

SRI M. P. SUBRAMANIAM : சேலத்தில் இந்த பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் அமைப்பதற்கு 1952-ல் இருந்து மூன்று வருடங்களாக, டோக்கனாக ப்ரொவிஷன் செய்திருந்தார்கள். ஆனால் இதுவரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஏன் ? சமீபத்தில் சேலத்தைச் சேர்ந்த ஒருவர் இதற்கென இரண்டரை லட்சம் ரூபாய் இனாமாக கொடுக்க முன்வந்தும் அஃதைப் பயன்படுத்தாது இன்னும் கூடுதல் தொகை வேண்டும் என்று கூறி அதை ஒத்தி வைப்பதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே, தனிப் பட்டவர்கள் இந்த பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த வேண்டுமென்று முன் வந்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு மத்திய சர்க்காருக்கு அதை சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிலிருந்து முடிவு வந்தவுடன் அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI T. SAMPATH : தஞ்சை ஜில்லாவில் ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் அமைப்பதற்காக தஞ்சை பிரமுகர் ஒருவர் இரண்டரை லட்சம் ரூபாய் நன்கொடையாக கொடுத்திருக்கிறார்களா ? அப்படியிருந்தால் தஞ்சையில் ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : The hon. Member must put a separate question. This relates to Salem. How can he ask about Kumbakonam? (Laughter.) No member can ask about other places.

SRI T. KARIA GOUNDER : அதே கேள்வியை கேட்க உத்தேசித்திருந்தேன்.

10th February 1958]

MR. SPEAKER : அப்படியானுல் கேட்கவேண்டாம். தயவு செய்து சேலத்தைப் பற்றி கேளுங்கள்.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட திட்டத்தின் விவரம் என்ன ? அதில், தனிப்பட்டவர் யார் ? எவ்வளவு தொகை கொடுக்க அவர் வாக்களித்திருக்கிருர்கள். அதில் அரசாங்கத்தின் பங்கீடு என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கரிமுத்து தியாக ராஜன் அவர்கள் சேலத்தில் இந்த பாலிடெக்னிக் ஏற்படுத்த முன் வந் திருக்கிருர்கள். அப்படி தனிப்பட்டவர்கள் ஏற்படுத்துவதில் எந்த விதத் தில் அரசாங்க உதவி செய்வது என்பதைப் பற்றி ஒரு கொள்கையை அனுசரித்து வருகிருர்கள். மத்திய அரசாங்கத்தில் இருந்து பாதி கொடுக்கிருர்கள். பாக்கி பாதியில் பாதி சென்னை அரசாங்கமும், பாதி தனிப்பட்டவர்களும் போட்டு நடத்தவேண்டியது. வருஷா வருஷம் ஆகவேண்டிய செலவைப்பற்றி இப்பொழுது இருக்கக்கூடிய முறையில் தனிப்பட்டவர்கள்தான் பூராச் செலவையும் போட்டு வரவேண்டும். அதைப் பற்றி முடிவாக ஒரு கொள்கையும் வரையறுக்கப்படவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : ஏற்கனவே இருக்கிற பாலிடெக்னிக் பள்ளிக்கூடம், திராவிட பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் என்று இருந்தது. இப்பொழுது அதை தமிழ் நாடு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் என்று மாற்றியிருக்கிருர்கள். இதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோரும் தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று சொல்கிருர்களே, ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்திற்காவது இருக்கட்டுமே என்று அப்பெயர் வைக்கப்பட் டிருக்கிறது.

Madras Cultivating Tenants Protection Act

* 19 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any landlords have been fined under the Madras Cultivating Tenants Protection (Amendment) Act, 1956, since the passing of the Act?

THE HON. SRI M. A. MANICKAVELU : If the member wants to know the number of landlords on whom a penalty was imposed for refusal to sign or for failure to lodge the lease deed in accordance with the provisions of section 4-B (1) of the Madras Cultivating Tenants Protection Act, 1955, the answer is ' nil '.

SRI N. K. PALANISAMI : மாகாணத்தின் பல பகுதிகளிலும் இம் மாதிரி பிரச்னைதான் இருக்கிறது. சட்டப்பிரகாரம் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய காலத்தில் எந்த மிராசுதாரும் கையெழுத்து போடுவதில்லை. ஆகவே, இம்மாகாணம் பூராவிலும் உடனடியாக, அப்படி கையெழுத்து போடச்செய்ய இந்தச் சட்டத்தை அதற்கு ஏற்றபடி இம்ப்ரூவ் செய்ய என்ன கஷ்டம் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : என்ன இம்ப்ரூவ் பண்ணுவது என்று தெரியவில்லை. எல்லோரும் கையெழுத்து போட்டு கொடுக்கிருர்கள். மூன்று எடுத்து ஒன்றை தான் வைத்துக்கொண்டு, ஒன்றை விவசாயினிடமும், இன்னொன்றை தாசில்தார் ஆபீஸிலும் கொடுக் கிருர்கள். அங்கத்தினர் அவர்கள் வேறு எதாவது சொன்னுல் அதைப் பற்றி கவனிக்கிறேன்.

[10th February 1958

Sri N. K. PALANISAMI : கையெழுத்து போடுவதில்லை என்ற பிரச்னைதான் மாகாணம் பூராவிலும் இருக்கிறது. ஆகவே ஒருசில மிராசுதார்கள் மீதாவது நடவடிக்கை எடுத்தால், அவர்கள் உடனடி கையெழுத்து போடுவார்கள். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : அப்படிச் செய்யவில்லை என்றால் 50 ரூபாய்வரையில் தண்டப்பணம் கொடுக்கவேண்டியதாய் வரும். அப்படி ஒரு புகாரும் இல்லை.

Cement factories

* 20 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tripartite Enquiry Committee constituted in 1954 has submitted its report regarding the wages, dearness allowance, leave facilities, bonus, working conditions, welfare measures for the workers employed in the cement factories in the State; and

(*b*) if so, the steps taken by the Government to implement its recommendations?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A copy of the report has been forwarded to the Government of India for consideration by the Central Wages Standardization Board and the report of the Board is awaited. I may add in this connection that the recommendations of the Tripartite Enquiry Committee cannot be enforced as the Committee was not constituted under any statutory requirements.

9-30 a.m. Sri N. K. PALANISAMI : அதில் குறிப்பாக வீடு கட்டி கொடுப்பது இல்லாவிட்டால் அவர்களுடைய வீட்டுக்கு வாடகை கொடுப்பது போன்ற திட்டங்களை கொண்டு வருவதற்கு சர்க்கார் சிபார்சு செய்வார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : நான் ஆரம்பத்திலே சொன்னேன். முக்கூட்டு கமிட்டியின் முடிவு மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் மத்திய சர்க்காரின் அபிப்பிராயங்களை தெரிவிப்பது வரையில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை.

Backward Classes

* 21 *Q*.—Sri M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the Sholia Vellala Community for its inclusion in the list of Backward Classes appended to the Madras Educational Rules; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have decided that there is no case for the inclusion of "Sholia Vellala" community in the list of Backward Classes.

10th February 1958]

Hand-made paper

* 22 *Q*.—Sri A. VEDARATNAM PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether hand-made paper is used in Government offices;

(*b*) if so, wherefrom it is obtained; and

(*c*) the cost of hand-made paper purchased last year?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Pulp Making Unit, Vennar Bank, Tanjore and the Model Centre for Village Industries, T. Kallupatti.

(*c*) Rs. 7,582·98 naye Paise during the year 1956–57.

* Sri A. VEDARATNAM PILLAI : கையினுல் செய்யப்பட்டு வரும் காகிதத்தின் தரத்தை உயர்த்தி அதை கூடுதல் அளவு கிடைக்கச்செய்து, அதை அரசாங்கத்தினுடைய எல்லா இலாகாக்களிலும் உபயோகிப்பதற்கு அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை விவரமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : Mr. Speaker, Sir, this is totally a different question.

Mr. SPEAKER : The Hon. Minister can ask for notice.

The Hon. Sri V. RAMAIAH : Not only notice, Sir. It relates to my Hon. Colleague, the Hon. Minister for Industries.

Mr. SPEAKER : The hon. Member may put a separate question to the other Minister.

Sri S. LAZAR : Sir, how does the price of the hand-made paper compare with the mill-made paper?

The Hon. Sri V. RAMAIAH : Sir, I do not have information on that point.

Sri A. V. P. ASAITHAMBI : ஸார், இந்த கையினுல் செய்யப்பட்டு வரும் காகிதத்தைக் கொண்டு சென்னை சர்க்காரினுல் நடத்தப்பட்டு வரும் "சென்னைச் செய்தி" என்கிற பத்திரிகைக்கு உபயோகப்படுத்தினுல் என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : I will consider his suggestion.

Mr. SPEAKER : இப்போது கேள்விகள் 23, 24, 25 (ஷி) இம்மூன்றும் ஒன்ருக எடுத்துக்கொள்ளலாம். இம்மூன்றிலும் சேர்த்து உப கேள்விகள் கேட்கலாம்.

Gramasevaks

* 23 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any amount has been allotted during the financial year for the construction of houses for Gramasevaks employed under the Community Development Programme;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether any cycle allowance has been given to them?

[10th February 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) There is a schematic loan provision of Rs. 1 lakh and Rs. 60,000 for Rural and Staff Housing in each Community Development and National Extension Service block respectively. This provision is equally apportioned between rural and staff housing. Consequently, there is a provision of Rs. 50,000 in a Community Development Block and Rs. 30,000 in a National Extension Service Block for construction of quarters for the block staff including Gramasevaks. There is a proposal to set apart a sum of Rs. 2,250 for construction of quarters-*cum*-godown for each village-level worker out of the provision made for rural housing in each block, and orders have since been issued in this respect.

(c) No cycle allowance is given to the Gramasevaks. They are eligible for advances for purchase of bicycles up to a maximum of Rs. 200 in each case.

Grama Sevaks, Grades I and II, are however paid a fixed travelling allowance of Rs. 15 and Rs. 7–8–0 per mensem respectively.

* 24 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Gramasevaks recruited during the year 1957 ; and

(b) their pay and allowances?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) 600.

(b) After recruitment, the candidates are sent for training for a period of 18 months in one of the Rural Extension Training Centres located in this State. During the first period of one year, they are paid a stipend of Rs. 30 per mensem and for the remaining period of six months, they are paid a stipend of Rs. 45 per mensem.

On the completion of training they are appointed in the scale of Rs. 45—3—60—5—90 plus the usual dearness allowances.

* 25-*C Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Gramasevaks Training Centres in the State and the places where they are located;

(b) the number of acres of land allotted for farm work to the Centres in Bhavanisagar; and

(c) the number of Agriculture Graduates working therein?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) There are 10 Rural Extension Training Centres for training the Gramasevaks. They are located at the following places :—

Places.	*Number of Centres.*
Aduthurai	1
Pattukottai	1
Kovilpatti	1
S.V. Nagaram (Arni)	1

10th February 1958]

Places.				*Number of Centres.*
Bhavanisagar	...	...	...	2
T. Kallupatti	...	...	...	2
Gandhigram	...	...	...	2

One of the two Centres from T. Kallupatti and Gandhigram will be shortly shifted to Krishnagiri and Avadi respectively.

(*b*) 50 acres.

(*c*) One.

SRI N. K. PALANISAMI : கிராம சேவக்குகளுக்கு பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸ் இருக்கக்கூடிய இடங்களிலேயே வசதி செய்து கொடுத்திருப்பதாக சொன்னார்கள். அதற்கு பதிலாக அந்த கிராம சேவக்குகளை எந்தெந்த கிராமங்களில் வேலைகள் செய்ய அனுப்பப்படுகிறார்களோ அந்தந்த கிராமங்களில் அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் வசதி செய்து கொடுக்க சர்க்கார் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் முதலாவது சொன்னது மாதிரி நான் பதிலில் சொல்லவில்லை. அந்தந்த கிராமங்களில் கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்லி இருக்கிறேன்.

There is a proposal to set apart a sum of Rs. 2,250 for construction of quarters-*cum*-godown for each village level worker out of the provision made for rural housing in each block.

அதே மாதிரி பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர் இருக்கிற இடத்தில் அங்கிருக்கிற கிராம சேவக்குகளுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : பவானி சாகரில் இரண்டு அக்ரிகல்ச்சரல் டெமாண்ட்ஸ்ட்ரேட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை குறைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கே இரண்டு ஸெண்டர்கள் இருக்கின்றன. அதனால் தான் அங்கு இரண்டு அக்ரிகல்ச்சர் கிராஜுயட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : What is the basis on which these selections are made? Are these people selected by the Public Service Commission or by any other body?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, the selection is now made by the Public Service Commission.

SRI S. PAKKIRISWAMY PILLAI : கிராம சேவக்குகள் பயிற்சி பெற்றபிறகு அதாவது அதில் அவர்கள் தேர்வு அடைந்த பிறகு அவர்கள் வேலையில்லாமல் கொஞ்ச நாள் காத்திருக்க வேண்டும் என்று அரசாங்கம் எண்ணியிருப்பதாக தெரிகிறது. ஆகவே அவர்கள் பயிற்சியில் தேர்ச்சியடைந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுக்க தடை என்ன இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்விதம் தடை எதுவுமில்லை. பயிற்சி முடிவடைந்தவுடன் அவர்களுக்கும்வேலை கொடுக்கப்படுகிறது. மேலும் பயிற்சி பெற்ற ஆட்கள் இல்லாததினால் சில இடங்களில் வேலைகள் ஆரம்பிப்பதற்கு கூட தாமதம் ஏற்படுகின்றது.

[10th February 1958

SRI K. PERIYANNAN : ஸார், அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிளாக்குகளுக்கு அதிகாரிகள் சரியாக இன்னும் வந்து சேரவில்லே. இதனால் இந்த வருஷத்தில் அதாவது மார்ச் மாதத்திற்குள் இதற்கென ஒதுக்கப்பட்ட பணம் செலவு செய்யமுடியாமல் ஆகிறது. ஆகவே இதை இன்னும் இரண்டு மாதத்திற்கு ஒத்தி வைக்க அரசாங்கம் அனுமதிக்குமா என்பதை கேட்க ஆசைப்படுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விஷயத்தில் நிதி ஒதுக்குவதை மூன்று வருஷத்திற்குள்தான் செலவு செய்யவேண்டுமென்றிருக்கிறது.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்களில் எத்தனை பேர்கள் கிராம சேவக்குகளாக பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க வேண்டுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு தனி கேள்வி வேண்டும்.

SRI S. LAZAR : Sir, is there any prescribed dress and mode of living for these Grama Sevaks.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think they have any prescribed dress.

SRI A. GOVINDASAMY : இந்த கிராம சேவக்குகள் சர்விஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதாக சொல்லப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு போதிய கல்வி இல்லாதிருந்தும் அவர்களுக்கு வேலே கொடுக்கப்பட்டிருப்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அவ்விதமிருந்தால் இப்போது அவர்கள் வேலேயிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா ?

THE HON SRI C. SUBRAMANIAM : இந்த விதிகளில் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும் சுதந்திர இயக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கு மேலும் சலுகைகள் அளிக்க வேண்டும் என்று பலர் வற்புறுத்தியும் வருகிறார்கள்.

SRI P. S. SANTHANAM : தலேவர் அவர்களே, கிராம சேவக்குகள் பயிற்சி பெறுவதற்கு எவ்வளவு படித்திருக்க வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எஸ். எஸ். எல். ஸி. வரை படித்திருக்க வேண்டும்.

SRI A. V. P. ASAITHAMBI : சுதந்திர இயக்கத்தில் பங்கெடுத்தவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டதாக சொன்னார்கள். சுதந்திர இயக்கத்தில் பங்கெடுப்பவர்கள் என்று குறிப்பிடுவது காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் மாத்திரம் தானா? அல்லது சுதந்திர இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட மற்ற கட்சியிலுள்ளவர்களுக்கும் சலுகைகள் அளிப்பதற்கு அரசாங்கத்தினர் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இருக்கக்கூடிய கட்சியைப் பற்றி கவலேயில்லே. சுதந்திர இயக்கத்தில் யாரெல்லாம் பங்கெடுத்தார்களோ அவர்களுக்கெல்லாம் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எந்த கட்சியாய் இருந்தாலும் சரி, அவர்கள் வேலேயில் சேர்ந்த பிறகு அந்த கட்சிகளிருந்து விலகி சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக வேலே செய்ய வேண்டுமென்ற விதி இருக்கிறது.

10th February 1958]

Prohibition

* 25 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Centre during the year 1957, seeking their opinion in regard to the setting up of a Central Committee to review the working of Prohibition in this State; and

(*b*) if so, whether any reply has been sent?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : மதுவிலக்கை அமுல் செய்வதில் புதிய முறைகளைப்பற்றி மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் பதில் அனுப்பியிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சர்க்கார் மத்திய சர்க்காரின் யோசனைகளுக்கு ஒன்றும் அனுப்பவேண்டிய அவசியமில்லை. அப்படி ஒன்றும் அனுப்பப்படவும் இல்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER : Under rule 14 (1) of the Madras Assembly Rules, I nominate the following hon. Members to be the panel of Chairmen for the current session :— 9-40 a.m.

1. Sri T. T. Daniel.
2. Sri M. D. Ramasami.
3. Dr. Srimathi Sathiyavanimuthu.
4. Sri K. Sattanatha Karayalar.

I have also to announce to the House that the amendments to the Motion of Thanks to the Governor's Address will be received not later than 1 p.m. to-day.

I have also to make a statement with regard to the remarks of the hon. Member, Sri Asaithambi about English. I would like to remind this House that this House has the privilege and pride of having transacted its business in Tamil from the very first day. We are now issuing all leaflets in English and Tamil. We are also issuing list of questions both in English and in Tamil. The main question is answered in English but the supplementary questions are asked and answered mostly in Tamil. I have really no objection to the main question being answered in Tamil but the progress in this direction has to be slow in view of the limited knowledge of the Chair in Tamil. I hope hon. Members will bear

with me and perhaps in the course of a few months, I shall be able to satisfy them. I am saying this because I am going to give the next two rulings in English (laughter).

IV.—NOTICE OF ADJOURNMENT MOTION *RE*: POLICE ACTIVITIES ON 3RD AND 6TH JANUARY 1958.

MR. SPEAKER: I have received notices of adjournment motion from three hon. Members, Sri Anbazhagan, Sri Annamalai and Sri M. P. Subramaniam. They all want to adjourn the business of the House to discuss a matter of public importance, viz., police activities on 3rd and 6th January 1958 against black flag demonstration held by the Dravida Munnetra Khazhagam in the City and in the mofussil and against the alleged ill-treatment given to those put in prison.

I rule these Motions out of order for the following reasons :—

Firstly, the matter must be urgent. I am afraid this is more than a month old and there may be difference of opinion as to the urgency of the matter. Secondly, the matter raised involves no more than ordinary administration of law. I am not satisfied that it is not covered by the ordinary process of law. Lastly, parliamentary opportunity will occur shortly during the discussion on the Governor's Address to enable hon. Members to speak about those matters. They can, if they like, give amendments to the Motion of Thanks that is proposed to the Governor's Address with reference to such matters. For these three reasons, I do not give permission to move the Adjournment Motions and under rule 49 of the Assembly Rules, I rule them out of order.

V.—PRIVILEGE MOTION *RE* PAMPHLET PUBLISHED BY THE DIRECTOR AND MINISTER IN CHARGE OF INFORMATION AND PUBLICITY.

MR. SPEAKER: The House will remember that at the meeting of the Legislative Assembly on the 16th November 1957, the last day of the sittings of the Assembly in November 1957, Sri M. Kalyanasundaram, M.L.A., gave notice of a Privilege Motion that the action of the Director of Information and Publicity and the Minister-in-charge of Publicity and Information in publishing the pamphlet under the title "முதுகளத்தூரில் நடந்தது என்ன" in Tamil constituted a breach of privilege of the House as that pamphlet contained a lot of distortions and wilful misrepresentations calculated to scandalise the opposition parties. I promised to look into the allegations and give my decision at this meeting.

2. The pamphlet consists of three parts, viz., (1) a Preface by the Director of Information and Publicity, (2) the Statement made by the Hon. Sri M. Bhakthavatsalam, Minister for Home, on the Ramanathapuram district disturbances translated into Tamil from English, and (3) the speech of the Hon. Sri C. Subramaniam, Leader of the House replying to the debate on the No-confidence motion. A Tamil translation of the statement by the Minister for Home was also circulated to the Members already.

10th February 1958] [Mr. Speaker]

3. Under Article 194 of the Constitution, the privileges conferred on the State Legislature are as follows :—

(1) Subject to the provisions of this Constitution and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State.

(2) No member of the Legislature of a State shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the Legislature or any committee thereof, and no person shall be so liable in respect of the publication by or under the authority of a House of such a Legislature of any report, paper, votes or proceedings.

(3) In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of a State, and of the members and the committees of the House of such Legislature shall be such as may from time to time be defined by the Legislature by law, and until so defined, shall be those of the House of Commons of the Parliament of the United Kingdom and of its members and committees, at the commencement of this Constitution.

In so far as the privileges of the State Legislature have not been defined by law, its privileges shall be those of the House of Commons in the Parliament of the United Kingdom. Even in the United Kingdom they have not been defined by statute and the question of privileges is decided with reference to conventions and precedents evolved over centuries.

4. In the Madras Legislative Assembly in October 1950–51, some Members requested the permission of the then Chair to print their own speeches for election purposes.

In England a practice is obtaining according to which—

"Reprints of particular speeches in leaflet forms may be obtained by members on application to the Editor on payment to Her Majesty's Stationery Office of a fee based on the cost of production."

The inner cover of each *Hansard* pamphlet contains the following sentence :—

"Members may obtain experts of their speeches from the Official Report (within one month from the date of publication), on application to the Controller of Her Majesty's Stationery Office."

But when the members got their speeches printed, they do so at their own risk. As pointed out by May—

"Although the privilege of freedom of speech protects what is said in debate in either House, this privilege does not protect the publication of debate outside Parliament. Nor does an order of the House for their printing and publication confer parliamentary privileges on proceedings published outside Parliament. A Member who publishes his speech made in either House *separately*

from the rest of the debate is responsible for any libellous matter it may contain under the common law rules as to defamation of character. But the publication, whether by order of the House or not, of a fair and faithful account of a debate in either House of Parliament is protected by the same principle as that which protects fair receipts of proceedings in courts of justice, namely, that the advantage to the public negatives the presumption of malice and outweighs any disadvantage to individuals."

The Speaker of this House, therefore, informed the House that the publication of excerpts of speeches by the Members themselves did not require the permission of Chair but such publication would not have the privilege of freedom of speech which the Member had in respect of his speech within the House.

5. Even this privilege is offered to the publication of parliamentary proceedings on the same principle as is applied to the case of reports of judicial proceedings and is, accordingly, subject to the same limitations as applied to reports of judicial proceedings. It follows, therefore, that a garbled or partial report or a report of detached parts of proceedings, published with intent to injure individuals will, as in the case of reports of judicial proceedings, be disentitled to protection.

On the same principle, a *bona fide* publication of a defamatory speech by a member for the information of his constituents is privileged, but the publication by a member in a newspaper of a single defamatory speech in Parliament, for the purpose of injuring an individual, would not be entitled to any privilege.

6. I would draw the attention of this House to the following quotations in this connection :—

" The English Courts draw a short line between the speech within the House and its publication without. In 1798, it was held by the Court of King's Bench in the case of *Rex* v. *Abingdon* that a member of Parliament might have a right to publish his speech but that the speech must not be made the vehicle of slander against any individual; if this was done an action of libel would lie for its publication. A similar judgment was pronounced in 1813 in the case of a well-known member of Parliament, Mr. Creevy. On this occasion the House absolutely refused to interfere or to treat the matter as a question of privilege."

(Robert Luce—' Legis. Procedure ' page 327, Also May page 55.)

" It is now sound doctrine that a publication by a Member of the House of Commons of a report of his speech, *bona fide* addressed to his constituents, would be privileged. The privilege in such a case would arise because the publication is a communication between a member and his constituents, and not because it is a true report of what took place in Parliament.

Also it is now laid down that the reprinting of a speech which reflects upon the character of any person, without, adding the rest of the debate, is not 'fair' and is therefore unprotected; no doubt it would be otherwise if the whole debate were given." 9-50 a.m.

(Robert Duce—" Legis. Procedure "—page 328.)

" If a member publishes his own speech, reflecting upon the character of another person, and omits to publish the rest of the debates, the publication would not be fair and so would not be privileged, but a fair and faithful report of the whole debate would not be actionable.

" There is obviously a material difference between the publication of a speech made in Parliament for the express purpose of attacking the conduct of an individual, and afterwards published with a like purpose or effect, and the faithfull publication of Parliamentary reports in their entirety, with a view to afford information to the public, and with a total absence of hostile intention or malicious motive towards any one."

[Watson v. Walter (1868) C.B.]

7. So long, therefore, as the debates are correctly and faithfully reported the privilege which protects their publication is waived but when they are reported *mala fide* the publishers of newspapers are liable to censure.

Similarly, an article founded on proceedings in Parliament would be privileged, if it is an honest and fair comment on the facts. Fair and accurate extracts, from authorised publications, would also be similarly privileged, but the case is different when they are reported *mala fide*. Reflections upon Members, even where individuals are not named, may be so framed as to bring into disrepute the body to which they belong, and such reflections have, therefore, been treated as equivalent to reflections on the House itself.

These are broadly the principles governing the publications of debates outside the House.

8. Coming to the question of privilege at issue, I have compared the speeches as printed in the pamphlet in question with the verbatim reports as given by the Official Reporters. All the interruptions and certain portions of the Finance Minister's reply have been omitted and there are also certain changes of a minor nature. Besides, ' Preface ' has been defined in Websters International Dictionary as ' something spoken as introductory to a discourse or written as introductory to a book or the like, usually by way of explanation of the object, scope, etc., of the discourse or literary composition.

The preface to the pamphlet runs as follows. I shall read the preface in Tamil as it is and I hope Members will excuse me if I commit any mistakes.

[Mr. Speaker] [10th February 1958

" முதுகுளத்தூரில் நடந்தது என்ன? " என்பதுபற்றி பலரும் பலவிதமாக பேசுகிறார்கள்—எழுதுகிறார்கள். தனிப்பட்ட நோக்கங்களைக் குறிக்கோளாகக் கொண்டு உண்மையைத் திரித்துக்கூறி பொதுமக்களின் உள்ளத்திலே பற்பல பொய்யான எண்ணங்களை விதைத்து விடுகின்றனர் சிலர். எனவே உண்மையான நிலைமையைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்நூல் வெளியிடப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூரிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் அண்மையில் நடந்த வகுப்பு கலவரங்கள், போலீஸ் நடவடிக்கைகள்பற்றி உள்நாட்டுதுறை அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் சட்ட மன்றத்தில் வெளியிட்ட அறிக்கையும் அதன் மீது நடைப்பெற்ற விவாதத்திற்கு விடை அளித்த நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்களின் சொற்பொழிவும் இவ்வெளியீட்டில் அடங்கியுள்ளன.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, may I say the House gives you 60 per cent of marks for your reading? (Laughter.)

MR. SPEAKER : Thanks. To put it in English, it is stated that, for personal ends, some people misrepresent the facts about what happened in Mudukalathur and create wrong impressions in the minds of the public and that the pamphlet, which contains the statement of the Hon. Sri M. Bhakatavatsalam on "What happened in Mudukalathur" and the reply to the debate thereon by the Hon. Sri C. Subramaniam, is issued with a view to acquainting the public with the true facts of the situation.

A possible inference from the Preface might be that only the Ministers' speeches represent facts and speeches by others do not. It may be contended, no doubt, that it does not refer specifically to the speeches by Members of the Legislature, but in so far as they contain replies to the points raised by them in their speeches, the Preface could be held to reflect on the Members of the Assembly, though not named, who made those speeches.

It is presumably on these facts that it has been alleged that the publication is intended to scandalise the Opposition parties, but it is difficult to decide whether this was really so without a detailed examination of the portions omitted and the circumstances leading to this publication.

I do not wish to discuss the matter further at this stage. But *prima facie* I think this is a case which should go to the Privileges Committee. I have, therefore, preferred to refer this matter to the Committee of Privileges instead of deciding it myself. The Committee will, I am sure, go into the question as to how far the speech as contained in the pamphlet is a faithful report of the proceedings of the House and whether this publication constitutes a breach of privilege and if so, what steps this House should take in this matter.

VI.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE YEAR 1954-55.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I rise to present the statement of Demands for grants for excess expenditure in the year 1954-55[a]. The appropriations originally provided for

[a] Printed as Appendix II on pages 95-99 infra.

10th February 1958] [Sri C. Subramaniam]

in the Budget Estimates cannot in the nature of things be expected to tally entirely with the actuals and excesses under some grants are inevitable. The total of the expenditure excesses which is now sought to be covered by Legislative approval is Rs. 19 lakhs roundly against a total final appropriation of Rs. 9,192 lakhs. The explanatory note appended to the statement of demands gives the reasons for the excesses in each case. The Public Accounts Committee constituted for the year 1957–58 at its meetings held during the course of the year examined the reasons for the excesses and have recommended in their report published in October 1957 that demands for grants to cover the excess expenditure over the final sanctioned appropriation under each grant might be presented to the Legislative Assembly.

I commend for the acceptance of the House the statement of Demands for Grants for Excess Expenditure in the year 1954–55.

VII.—DISCUSSION ON GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER : We shall now take up discussion on the Governor's Address. Four days have been allotted for discussion on the Governor's Address, that is, 10th to 13th February 1958.

* SRI R. KRISHNASWAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாதம் 8-ம் தேதியன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் இச்சபையின் முன் நிகழ்த்திய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையிலே நான் அனுப்பியுள்ள தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன். அந்தத் தீர்மானத்தை ஒட்டி சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

"That an humble address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 8th February 1958."

கவர்னர் அவர்களுடைய பேருரையிலே பொதுவாக நம் நாட்டிலும் இந்த ராஜ்யத்திலும் நடைபெறவேண்டிய பல்வேறு விஷயங்களைக் குறித்து அவர்கள் பேசியுள்ளார்கள். நம் மாகாண கவர்னர் அவர்கள் பாரத கண்டத்தின் ஒரு கோடியிலுள்ள அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து இங்கு வந்தவர். அவர்களுடைய பேருரையிலேயே கூறியிருக்கிறார்கள் : "உங்கள் மாகாணத்தைப் போன்று டில்லியில் இருந்து நெடும் தூரத்திலுள்ள ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவன் நான்" என்று கூறியிருக்கிறார். அதோடுகூட அவர்களுடைய பிரசங்க ஆரம்பத்திலேயே "உங்களுடைய ஒத்துழைப்பும் அன்பும் எனக்கு வேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முழு ஒத்துழைப்பையும் அவர்களுக்குத் தரமுடியும் என்று நான் கூறிக்கொள்ள முடியம். அதற்கு இந்தச் சபையிலே நம்முடைய ராஜ்யத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே இந்த வார்த்தைகளை நான் கூறுகிறேன். அவ்வாறு கிடைக்கும் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பது குறித்தும்கூட நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் சமீபத்தில் 8-ம் தேதியன்று கவர்னர் அவர்கள் இந்தச் சபையிலே உரை நிகழ்த்தியபோது அவர்கள் கட்சியினர் இங்கு வரக்கூடாமைக்கு காரணங்கள் சில கூறி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கவர்னர் அவர்களுக்கு அவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும், கவர்னர் அவர்களுடைய நடவடிக்கைகளில் இந்த ராஜ்யத்தின் சகல விஷயங்களையும் மிகவும் பொருப்பாக இருந்து நடத்துவார்கள் என்ற

[Sri R. Krishnaswami Naidu] [10th February 1958

நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது என்றும் பொதுவாக கண்டிருக்கிறது. அது கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்த அறிக்கையிலே சுதேசமித்தரினில் வெளிவந்துள்ள சில வாசகங்களை இந்த சபையத்திலே நான் இங்கு கூறி எல்லோரையும் அந்த சந்தோஷத்தில் பங்கு எடுத்துக் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir, பத்திரிகையிலே வெளிவந்துள்ள செய்தியை அவ்வாறு படிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : The hon. Member need not read it. He can only refer to it.

Sri R. KRISHNASWAMI NAIDU : அந்த அறிக்கையை முழுவதும் நான் படிக்கவில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் எடுத்துக் கூறுகிறேன். பத்திரிகைகளிலே வெளிவந்துள்ள அறிக்கை குறித்து இது வரையில் மறுப்பு விடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே இது மறுத்தல் ஆகாது. கையெழுத்துச் செய்யவில்லை என்ற வாதம் இங்கே எடுபடாது என்று நான் நினைக்கிறேன்.

ஆகையினால் அதில் கூறப்பட்ட விஷயம் என்னவென்றால்—

10-00 a.m. "வட இந்தியரை ராஜ்ய அதிபராக நியமிப்பது தென் இந்தியாவில் எழுந்துள்ள தேசீய உணர்ச்சிக்கு ஒரு அவமதிப்பாகும். . . . . . மத்திய அரசாங்கத்திற்கு எதிராக ராஜ்யத்தின் கட்சியை எடுத்துக் கூறி போராடிய கவர்னருக்குச் சொந்த முறையில் எவ்வித அவமதிப்பும் கருதப்படவில்லை என்பதை விஷயமறிந்தோர் உணரக்கூடும்."

அஸ்ஸாம் மாகாணத்தில் பொருளாதார நிலைமை நம்முடைய மாகாணத்தின் பொருளாதார நிலைமையைப் போன்றது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சில தொழில்களையும் தொழிற்சாலைகளையும் நிறுவி நடத்த வேண்டும் என்று இந்த மாகாணத்தைப் போல் அந்த மாகாணத்திலும் அவர் முதல் அமைச்சர் என்ற முறையில் மத்திய அரசாங்கத்துடன் போராடிக்கொண்டு வந்திருக்கிறார். அப்படி போராடி இருப்பதை கனம் நண்பர் சி. என். அண்ணாதுரை அவர்களும் நன்கு அறிந்து தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். பாரத கண்டத்தில் தென் கோடியில் நமது மாகாணத்தைப் போல் அஸ்ஸாம் மாகாணமும் இருந்து கொண்டு டில்லி சர்க்காருடன் போராடி வந்திருக்கிறது. அவர் அந்த மாகாணத்தின் முதல் மந்திரி என்ற முறையில் அப்படி நூற்றுக்கணக்கான முறை போராடி இருக்கிறார். அப்படி அவர் டில்லி ராஜ்யத்துடன் வட கோடியில் இருந்து கொண்டு தன் மாகாணத்திற்கு வேண்டியதைப் பெருவதற்கு போராடி வந்திருப்பவரை நாம் பாராட்ட வேண்டியதுதான். அப்படிப்பட்டவரிடத்தில் நம்முடைய பொருப்பை ஒப்படைக்க வேண்டியது அவசியமும் ஆகிறது. அப்படி அவரிடம் நாம் ஒப்படைத்தால் அவரும் நமக்கு வேண்டியதைச் செய்வதற்கு முற்படுவார் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அவருடன் நாம் ஒத்துழைக்க வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. நம்முடைய வேலைகளில் அவர்கள் நன்றாக கவனம் செலுத்துவார் என்ற நம்பிக்கையில் நாம் அவரிடம் நம்முடைய வேலைகளை ஒப்படைக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. நம்முடைய ராஜ்யத்திலுள்ள எல்லா கட்சிகளும் ஒன்றாக இருந்து அவருடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நண்பர் அண்ணாதுரை அறிக்கையிலிருந்து அப்படிப்பட்ட ஒத்துழைப்பு நம்முடைய கவர்னருக்குக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

அதற்கு மாறாக இன்றைக்கு ஒரு வட இந்தியரை இங்கு கவர்னராக நியமித்திருப்பதைக்கண்டு அவர்கள் வருத்தமும் தெரிவித்திருக்கிறார். நம்முடைய நாடு ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயக நாடுகளில் எப்படி அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன என்பதைப் பார்க்கவேண்டும். ஜனநாயக நாடுகளில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செயல்பட்டு வருகின்றன. மற்ற நாடுகளில் எப்படி அரசியல் கட்சிகள் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்று பார்க்கும்போது நம்முடைய நாடு மட்டும் வேறு

10th February 1958] [Sri R. Krishnaswami Naidu]

விதமாக போய்க்கொண்டிருக்க முடியாது. ஆனால் நம்முடைய நாட்டில் இப்பொழுது வட நாடு தென்னாடு என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி பேசிக்கொண்டிருந்தால் அது சரியல்ல. நம் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள் எவ்வளவோ பேர்கள் பிற மாகாணங்களிலும் வட மாகாணங்களிலும் ஹைக் கோர்ட் ஜட்ஜுகளாகவும் இன்னும் பல உத்யோகங்களையும் வகித்துக்கொண்டு வருகிறார்கள். எவ்வளவோ ஐ.சி.எஸ். படித்த தமிழர்கள் வட நாட்டில் பெரிய உத்யோகங்களில் இருந்துகொண்டு பணியாற்றி வருகிறார்கள். டில்லியை எடுத்துக்கொண்டால்—அங்கே இரண்டு அல்லது மூன்று தெருக்கள் என்றுகூட சொல்லலாம். அங்கே பாதிப்பேர் தமிழர்கள்தான். மத்திய அரசாங்க உத்யோகங்களில் எவ்வளவோ பேர்கள் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். மத்திய மாகாணத்தை எடுத்துக்கொண்டாலும் அப்படியேதான். நாகபுரியை எடுத்துக்கொண்டாலும் அங்கேயும் அனேகம் தமிழர்கள்தான் அரசாங்க உத்யோகங்களில் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். மற்றுமுள்ள எந்த செக்ரடேரியட்டை எடுத்துக்கொண்டாலும் அங்கேயெல்லாம் பெரும்பகுதி தமிழர்கள்தான் உத்யோகங்களில் இருந்துகொண்டு வேலை செய்து வருகிறார்கள். பம்பாயை எடுத்துக்கொண்டால் அங்கேயும் எவ்வளவோ பேர்கள் தமிழர்கள்தான் இருக்கிறார்கள். அங்குள்ள பெரும் பகுதி தமிழர்கள்தான். அங்கு பல தெருக்கள்கூட தமிழர்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கல்கத்தாவை எடுத்துக்கொண்டாலும் அங்கேயும் அப்படியேதான். அதைப்போலவே எந்த மாகாணத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லை என்று சொல்லவே முடியாது. ஆகவே எங்கு பார்த்தாலும் தமிழர்கள் பல பல இடங்களில் வேலை பார்த்துக்கொண்டு வருகிறார்கள்.

அது மட்டுமல்ல, வியாபாரத் துறையை எடுத்துக்கொண்டாலும் இதே நிலையில்தான் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆகவே வட நாடு தென்னாடு என்று ஒரு முறை இருப்பதற்கு அவசியமே இல்லை. அதைப்போலவே கவர்னர் அவர்களை நியமிக்கும் முறையிலும் வட நாடு தென்னாடு என்று இருப்பதற்கு அவசியமே இல்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு கொள்கையை பரப்புவதற்கு இடமே இல்லை. அது ஜனநாயகத்திற்குப் பொருத்தமாகவும் இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

ஆனால் நம் ராஜ்யத்தில் நடைபெறுகின்ற பல நிகழ்ச்சியினாலும் சிலருடைய கொள்கைளினாலும் மாறுபட்ட கருத்துகொண்டவர்கள் இருக்கிறார்கள். மாறுப்பட்ட சிந்தனையுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தங்களுடைய அனுபவத்தைக்கொண்டு தங்களுடைய அறிக்கையின் மூலமாக விடுத்துள்ள கருத்தைச் கொண்டு அவர்களும் நமது கவர்னருடன் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்களுடைய சில வாக்கியங்களிலிருந்தே நான் அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அதைப்போலவே இந்த நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைக்கும் என்பதில் நமக்கு சந்தேகம் இல்லை.

அத்துடன் திராவிட முன்னேற்றக் கட்சி தலைவர் அவர்கள் இன்னொன்றையும் வெளியிட்டிருக்கிறார். "வட இந்தியரை ராஜ்ய அதிபராக நியமிப்பது தென்னிந்தியாவில் எழுந்துள்ள தேசீய உணர்ச்சிக்கு ஒரு அவமதிப்பாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஒரு பக்கத்தில் அவருக்கு ஆதரவு கொடுத்தாலும் அவர் இப்படி குறிப்பிட்டிருப்பது அவர் ஒரு கொள்கையை கடைப்பிடிப்பவராகத் தோன்றுகிறது. தேசீய உணர்ச்சி என்பது ஒரு தனிப்பட்ட கட்சிக்கு மட்டும் அல்ல. அப்படி தேசீய உணர்ச்சி என்பது ஒரு தனிப்பட்ட கட்சிக்கு மட்டும் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள மறுக்கவும் மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தேசீய உணர்ச்சி என்பது எல்லா பகுதிகளுக்கும் பொதுப்படையாக ஏற்பட்ட உணர்ச்சி. அந்த உணர்ச்சி ஒரு கட்சிக்கு மட்டும் ஏற்பட்டது அல்ல. திராவிட முன்னேற்றக் கட்சிக்கு வட நாடு தென்னாடு என்ற கொள்கை இருந்தாலும் தேசீய உணர்ச்சி என்பது எல்லோருக்கும் ஒன்றுதான் என்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். ஒவ்வொரு கட்சியும் பல்வேறு கருத்துக்களைக்கொண்டிருந்தாலும் தேசீய உணர்ச்சி என்பது ஒன்றுதான்.

[Sri R. Krishnaswami Naidu] [10th February 1953

அந்த நிலைமையில் கவர்னருடைய நியமனம் தேசீய உணர்ச்சிக்கு அவ மதிப்பு ஏற்பட்டதாக ஆகும் என்று கருதுவது எப்படியாகும் என்பது எனக்குத் தெரியவில்லை. மாகாண கவர்னரின் நியமனம் விஷயமாக தேசீய உணர்ச்சி நம்முடைய ராஜ்யத்தில் அலை மோதிக்கொண்டிருப்பதாக இருக்கிறது என்று சொல்வது தவருகும். அப்படிச் சொல்வது தவறு என்றுதான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

வட நாட்டினரைப்பற்றி குறிப்பிடும்போது அந்தணர்களைப்பற்றி குறிப் பிடப்படுகிறது. சமீபத்தில் ஒரு பெரியார் சொல்லியதைக் கேட்டேன். பிராமணர்கள் பல பிரதேசங்களில் இருக்கிருர்கள் என்றும் அவர்களை வட நாட்டவர்கள் ரொம்பவும் ஆதரிக்கிருர்கள் என்றும் சொல்லக்கேட் டேன். வட நாட்டில் பல பிராமணர்கள் திராவிட சம்பிரதாயத்தை அனுஷ்டிப்பதாகவும் அந்தப் பெரியார் சொன்னுர். வட நாட்டில் உள்ள மற்றவர்கள் அவர்களை நல்ல முறையில் போற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். வட நாட்டில் பிராமணர்கள் அதிகமாக இருக்கிருர்கள் என்றுலும் அவர்கள் திராவிட சம்பிரதாய பிராமணர்கள் என்று கருதி பிராமணீயத்தை நல்ல முறையில் உணர்ந்து இருக்கிருர்கள் என்பது நன்ருகத் தெளியவரும். "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்" என்று சொல்லப்பட்டிருக் கிறது. அப்படிப்பட்ட அந்தணர்களை நாம் போற்ற வேண்டியதுதான். அப் படிப்பட்ட அந்தணர்களின் பேரில் நமக்கு நம்பிக்கை இருக்கவேண்டியது அவசியம். அந்த நிலைமையில் வட நாட்டில் அந்தணர்கள் இருக்கிருர்கள். அப்படிப்பட்ட அந்தணர்களை அங்கு போற்றுகிருர்கள் என்றும் அந்தப் பகுதியில் குறிப்பிடப்படுகிறது. அந்தப் பகுதியில் திராவிட சம்பிர தாயத்தை போற்றி அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிருர்கள். அதிகப்படி யான மதிப்பு தருகிருர்கள். அப்படிப்பட்ட கொள்கைதான் ராஜ்யம் பூராவு வும் பரவி இருக்கிறது. அப்படி இருக்கும்போது பிரிவினை மனப்பான்மை எதற்கு ஏற்படவேண்டும்? பிரிவினை மனப்பான்மை நமது நாட்டிற்கு உகந்தது அல்ல. பிரிவினை மனப்பான்மை ஏற்பட்டதனுல் நாட்டிற்கு எவ்வளவோ துரதிர்ஷ்ட வசமான நிலைமைகள் ஏற்பட்டன என்பது எல் லோருக்கும் தெரியும். பிரிவினை மனப்பான்மை நமது நாட்டிற்கு உகந் தது அல்ல. சிறிய நாடுகள் எந்த இடத்திலும் பிரிந்திருப்பதாக தெரிய வில்லை. வேறு எங்கேயாவது இருக்கலாம். அப்படி நாம் பிரிந்து இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அது நமக்கு நன்மையையும் அளிக்காது. நம் நாடு விடுதலை அடைந்த பிறகு எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கிறது. இன்னும் அந்த துரதிர்ஷ்ட வசதிலிருந்து வெளிக் கிளம்பவில்லை. விடுதலை அடைந்த பிறகு எந்தவிதமான முன்னேற்ற மும் அடையமுடியாமல் நமக்குக் கெடுதல்கள் விளைந்துகொண்டு வரு கின்றன. அந்த நிலைமையில் பிரிவினையைப்பற்றி பேசுவது என்பது சரி யல்ல. ஒரு சில கட்சிகள் சில கொள்கைகளை வைத்துக்கொண்டு அதையே விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. நண்பர் அண்ணுதுரை போன்றவர்கள் அப்படிப்பட்ட தங்களுடைய கொள்கை களையே வற்புறுத்திக்கொண்டு வருகிருர்கள். அப்படி நடத்தி வருவது என்பது இக்காலத்திற்கு உகந்தது அல்ல. அந்த நிலையில் இந்தக் கொள்கை நம்முடைய நாட்டுக்கு உகந்தது அல்ல. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தினுல் மீண்டும் மீண்டும் அவர்கள் இதை வற்புறுத்திக்கொண் டிருப்பது நல்லது அல்ல என்பதை நான் தெவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

10-10 a.m.

இன்னும், அவர் இங்கு வந்த சந்தர்ப்பத்திலே, பிற்பட்ட பொருளாதார நிலையினுல் ஏற்படும் பல சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், மத்திய அர சாங்கத்தோடு போராடிய முதலமைச்சர் என்ற முறையிலும், அவர் இங்கு கவர்னராக வந்தபோது, 'ஒவ்வொரு ராஜியமும் தன் தன் க்ஷேமத்திற்கு மத்திய அரசாங்கத்தோடு சண்டையிட்டாலும், நம் நாட்டில் தேசீய ஒற் றுமை உணர்ச்சிப் பண்பாடானது நிலவவேண்டும்' என்பதை அவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பதை நாம் எல்லோரும் கவனிக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

10th February 1958] [Sri R. Krishnaswami Naidu]

"....நம் தேசீய ஒற்றுமை உணர்வைப் போற்றிப் பேணி வளர்ப்பதின் அவசியம் என் உள்ளத்தில் நன்கு பதிந்துள்ளது. இந்த ஒற்றுமை உணர்வுதான், கடந்த காலத்தில் நம்முடைய விடுதலைப் போரில் வெற்றி பெறுவதற்கு உதவியது; இன்று பொருளாதார முன்னேற்றமும் பண்பாட்டின் உயர்வும் நாம் அடைந்து வருவதற்கு உதவுவதும் இதுவே", என்று அவர் தம்முடைய பிரசங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, இதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கவர்னருடைய பிரசங்க ஆரம்பத்திலேயே இந்த விஷயங்களை நமக்கு ஞாபகமூட்டியதற்காக நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆட்சிமொழி பற்றியும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் பல அறிஞர்களும் இவைபற்றிச் சொல்லக்கூடும். அதனால் நான் ஓரளவு அதை விஸ்தாரமாகப் பேசாமலேயே விட்டு விடுகிறேன். விஸ்தாரமாகப் பேசுவதற்கான ஒரு சக்தி இருப்பது போலவும், அதனால் மற்றவர்கள் பேசுவதற்கு இடம் தந்துவிடுவது போலவும் போலிக் கௌரவம் நான் பாராட்டவில்லை. இப்பொழுது ஆட்சி மொழி பற்றிய விஷயம் ஓரளவுக்கு ஒவ்வொரு ராஜ்யத்திலேயும் அறிவாளிகளால் ஒரு சிலர் விவாதித்து முடிவுக்கு வந்திருக்கக்கூடிய விஷயம் என்று நான் கருதுகிறவன். அந்த நிலையிலேதான் இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். துரதிருஷ்டவசமாக பெரிய தலைகள் எல்லாம் கூட, பெரியவர்கள் எல்லாம் கூட, மேடைகளிலே நன்றாகப் படத்தைப் போட்டுக் காட்டியும் இன்ன இன்ன இடங்களின் வேறு பாஷை பேசப்படுகிறது என்பதைப்பற்றியும் பொதுக்கூட்டங்களில் பேசியும், பத்திரிகையில் எழுதியும் வரக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது நம்முடைய ராஜ்ஜியத்தின் துரதிரஷ்டம் என்றுதான் நான் கருதுகிறேன். அவையெல்லாம் பொதுக்கூட்டத்தில் வைத்துப் பேசக்கூடிய விஷயம் அல்ல.

திருச்சிச் சிறையிலே நான் இருந்தேன். ஐந்து மாதங்கள் ஹிந்தி படித்தேன். அலிப்புரம் சிறையிலேயும் ஹிந்தி கற்றுக்கொள்வதற்கு எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதற்குப் பின்னர் என்னுடன் இருந்த பண்டிதர்கள் சிறைத் தண்டனைக் காலம் முடிவு அடைந்து சென்றுவிட்டார்கள். அதற்குப் பின்னும் நான் தொடர்ந்து சிறையில் இருந்தேன். அப்பொழுது பிரேம் சந்தர் எழுதிய "நவநிதி" என்ற ஒரு நாவலையும், 9 சிறு கதைகளையும், 5 கதைகளையும் மொழி பெயர்த்தேன். இவ்வளவும் நான் எழு மாதங்களுக்குப் பிறகு மொழிபெயர்த்தவை என்று தெரிவித்துக் கொள்கிறேன். பெரியவர்களும் இலகுவாகக் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மொழி உண்டென்றால் அது ஹிந்திமொழிதான் என்பதை யாரும் மறுக்கவே மாட்டார்கள். அவ்வளவு இலகுவாக ஹிந்தியை கற்றுக் கொள்ளமுடியும் என்று சொல்லும்போது, அதை நாம் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஏனென்றால், சொல் வளம், பொருட் செறிவு, கருத்து வளம் நிறைந்த பல விஷயங்களைக் குறிப்பிடக்கூடிய வார்த்தைகளெல்லாம் தமிழில் இருக்கின்றன. ஆகவே, தமிழுக்கு ஈடாக ஹிந்தியைக் குறிப்பிட மாட்டேன். தமிழுக்கு உவமையாகவும் ஹிந்தியை நான் கூற முன்வரவில்லை. ஆயினும் ஹிந்தியும் இலகுவாகக் கற்றுக்கொள்ளக்கூடிய பாஷையாகும். மூன்று பக்கங்கள் உள்ள தமிழ்க் கட்டுரையை ஒன்றரைப் பக்கத்தில் ஹிந்தியில் முடித்துவிடலாம். இதையும் அனுபவத்திலே கண்டு கொள்ளலாம். ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு சிறப்பு இருக்கிறது. நம்முடைய அரசியல் சாசனத்திலே, இந்திய மொழிகளில் முக்கியமான பதினான்கு மொழிகளும் தேசீய பாஷைகளாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழும் ஒன்று. ஆனால், இப்பொழுது உள்ள போட்டி ஹிந்திக்கும் தமிழுக்கும் அல்ல என்பதை நாம் சிந்திக்கவேண்டும். வேண்டுமென்றே இதனை நாம் ஒதுக்கித் தள்ளிக்கொண்டே வருகிறோம். கவர்னர் உரையிலே இதையும் சொல்லியிருக்கிறார்கள்.

1,922 அலுவலகங்களில் தமிழ் ஆட்சி செய்யத் தலைப்பட்டிருக்கிறது என்று கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது சென்ற வருஷமே செய்துகொண்டிருக்கும் தீர்மானம். அதன்படி இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1,922 அலுவலகங்களிலே இன்றையதினம் தமிழ் அன்னை ஆட்சி செலுத்துகிறாள் என்று சொன்னால், அந்த இடத்திலே இருந்தது எது என்பதைச் சிந்தித்து பார்க்கவேண்டும். ஆங்கில சகோதரி

[Sri R. Krishnaswami Naidu] [10th February 1958

எந்த இடத்தில் 200 ஆண்டு காலமாக இருந்துகொண்டிருந்தாளோ அந்த இடத்தினின்று ஆங்கில சகோதரியை எழுந்திருக்கச் சொல்லி, அங்கே தமிழ் அன்னே ஆட்சி புரிகின்றுள். அங்கே ஹிந்தி இருக்கவில்லை என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது மாதிரி ஒவ்வொரு ராஜ்ய யத்தையும் எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு ராஜ்யத்திலும் அந்தந்த ராஜ்யத்தினுடைய தாய் பாஷை எதுவோ அந்த பாஷையிலேதான் ஆட்சி நடைபெறவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில், ஆங்கிலம் 200 வருஷகாலமாக எந்த ஸ்தானத்தில் கொலு வீற்றிருந்ததோ அந்த ஸ்தானத்தில் தமிழ் அன்னே போய்க் கொலு வீற்றிருக்கிருள் என்ற சந்தோஷத்தை அடையவேண்டும். ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும்தான் இதுவரை போட்டி இருந்ததே தவிர, ஹிந்திக்கும் தமிழுக்கும் போட்டி இல்லை என்பதை உணரவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி விஷயத்திலே இந்த விஷயம் வருகிறது. அப்போழுது ஆங்கிலமும் இருக்கலாம். ஹிந்தியும் இருக்க லாம். எந்த அளவு ஹிந்தி பாஷை வளம் பெறவேண்டுமோ, ஆட்சி மொழி ஆவதற்குத் தகுந்த ஒரு நல்ல நிலைமையை ஹிந்தி அடைய வேண்டுமோ அந்த நிலைமை வருகிற வரையிலும் ஆங்கிலம் இருக்கலாம். அல்லது, அனுபவத்தின்பேரில், மேலும் அதற்கு ஒரு காலம் குறிப்பிடாத அளவுக்கு ஆங்கிலத்தின் அவசியம் நமக்குத் தேவையானல், அப்படியும் வைத்துக்கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. அவ்வாறே தலைவர்கள் பேசுகிருர்கள். தீர்மானங்களும் செய்யப்படுகின்றன. பல அறிவாளிகள் இதை நமக்கு எடுத்துக் கூறியிருக்கிருர்கள். அப்படியிருக்க, இந்த விஷ யத்திலே சண்டை எதற்கு ? சாதாரணமான ஒரு விஷயத்திலே சாதா ரண மக்களுக்கும் கூட உணர்ச்சி ஏற்படும்படியாக அவர்கள் கவனத்தை வெருெரு திசையிலே திருப்புவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கக் கூடிய வகையில் இப்பொழுது காரியங்கள் நடைபெறுவது மிக மிக வருந்தத்தக்க விஷயம். அந்த விஷயத்திலே சர்க்கார் சொன்ன பல யோசனைகள் மத்திய சர்க்கார் அங்கிகரித்திருக்கிருர்கள் என்று சொல்ல வேண்டும். அந்தவகையிலே கூட செயல்பட்டு வருவதாக அறிகிறேம். அதைப்பற்றி நல்ல தீர்வு ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆந்திர ராஜ்ய எல்லைச் சீரமைப்பு பற்றி குறிப்பிட்டிருக்கிருர்கள். அதுவும் நல்ல விதமாக முடிவுற்றது. அதைப்பற்றி விஸ்தாரமாக ஒன் றும் சொல்ல வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன்.

நம்முடைய ராஜ்யத்திலே பரம்பிக்குளம் பகுதியிலே ஒரு அணைக்கட்டு ஏற்படுவதற்கும், இன்னும் நம் ராஜ்யத்திற்கு மேற்கே கேரள ராஜ்யத் தில் ஓடும் பல நதிகளின் நீர் மேற்குக் கடலிலே போய் வியர்த்தமாக சங்கமமாகும் அந்த நீரை நாம் பயன்படுத்திக்கொள்வதற்கும் கேரள ராஜ்யத்தின் ஆட்சியாளருடைய ஆதரவைப் பெறுவதற்காக தெற்கு ராஜ்ய மண்டலக் கவுன்ஸில் சமீபத்தில் கூடி ஆலோசித்தது. அது பற்றி ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்தப் பரம்பிக்குளம் திட்டமானது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காக பல கோடிக் கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண் டுத் திட்ட கால முடிவுக்குள் பரம்பிக்குளத் திட்டம் முடிவு ஆகாமலும் இருக்கலாம். ஏனென்ருல், அதற்காகப் பல முடிவுகள் இனிமேல் ஏற் படவேண்டியிருக்கின்றன. பரம்பிக்குளத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பல கோடி ரூபாய்களில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டதோ, அந்தப் பணம் போக, மீதம் இருக்குமானல், தெற்கு மண்டலக் கவுன்ஸில் கூடி ஆராய்ந்து, கேரள சர்க்காருடைய அங்கீகாரத்தைப் பெற்று, வேறு இடங்களில் அவர்கள் ஆரம்பிக்கக் கருதிக்கொண்டிருக்கும் வேறு பல அணைக்கட்டுகள் விஷய மாகவும் இதிலுள்ள பணத்தைச் செலவழிக்கப்படுவதற்கு ஏற்பாடுகளைக் கவ னிக்கவேண்டுமென்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரம்பிக்குளத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் செலவழிக்க முடி யும் தொகை போக, மீதியை புதிதாக உருவாகும் திட்டங்களுக்காக வைத் துக்கொள்ளும்படியாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் நான் அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

10th February 1958] [Sri R. Krishnaswami Naidu]

இன்னும் பல சிறிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் அரசாங்கம் முக்கியமாக கவனம் செலுத்தி வந்திருக்கிறது. சிறிய நீர்ப்பாசனங்கள் அபிவிருத்தி சம்பந்தமாக ஒரு விஷயத்தை இப்பொழுது நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இராமநாதபுரம் ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் ஜமீன் பிரதேசத்தில் சமீபத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் ஏன் கோடிக்கணக்கான ரூபாய் என்று சொல்லவேண்டும்—கண்மாய்கள் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன. பல தலைமுறைகளாக அரசாங்க நிர்வாகத்தில் அனுஷ்டித்து வந்த சில சம்பிரதாயங்களை அப்படியே ரெவினியூ டிபார்ட்மென்டார் இப்பொழுதும் கருதி வருகிறார்கள். குளங்களுக்குத் தண்ணீர் வரக்கூடிய கால்வாய்களை மராமத்து செய்வது குடி மராமத்து முறையில் செய்யவேண்டும் என்பது சம்பிரதாயம். அந்தச் சம்பிரதாயம் இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வருகிறது என்று சொல்லவேண்டும். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில், நாம் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து ஆயிரக்கணக்கான கண்மாய்களுக்கு பெரிய பெரிய கரை போட்டு மராமத்து செய்து, அவைகளில் தண்ணீர் தேங்கும்படியான ஏற்பாடு செய்துவிட்ட பின்னர்கூட அந்தக் கண்மாய்களுக்கு தண்ணீர் வரக்கூடிய ஜல ஆதாரங்களாக இருக்கும் கால்வாய்களில் இருக்கும் தூர்வைகளை எடுத்து பலமாகச் செய்யாவிட்டால், வேலை செய்வதினால் உபயோகம் என்ன என்பதை நாம் கொஞ்சம் யோசிக்க வேண்டும். அந்தவகையில் அரசாங்கமும், ரெவினியூ இலாகாவும் கவனம் செலுத்தி புதிதாக மராமத்து செய்யப்பட்ட எல்லாக் கண்மாய்களுக்கும் வருகின்ற கால்வாய்களைத் தூர்வை எடுக்கும் வேலையை இந்தத் திட்டங்களின் கீழ் உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் உணவு உற்பத்தி சம்பந்தமாக, பாசன வசதிகளை அதிகப்படுத்துவதன் காரணமாக பல சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் அமுல் நடத்தப்படுகிறபோது இந்த விஷயத்திலும் சர்க்கார் அதிக கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 10-20 a.m.

ஜில்லா போர்டுகள், ஸ்தல ஸ்தாபனங்களின் அமைப்பு பற்றி கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றி ஒரு கமிட்டியும் ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. ஜில்லா போர்டுகளின் ஸ்தானத்தில் வேறு எப்படிப்பட்ட ஸ்தாபனம் அமையவேண்டும், தேசீய விஸ்தரிப்பு திட்டம், சமுதாய அபிவிருத்தி திட்டம் ஆகியவை எல்லாம் அவற்றின் கால அளவுக்கு பின் எந்த எந்த ஸ்தல ஆட்சியோடு இணைந்து வேலை செய்வது பொருத்தமாக இருக்கும் என்பதைப் பற்றியெல்லாம் அந்தக் கமிட்டி யோசனை செய்துகொண்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் பரிசீலனை முடிந்து, அவர்களது ஆலோசனைகளைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்கிற சந்தர்ப்பம் வரும்போது நம்முடைய அபிப்பிராயங்களை எல்லாம் தெரிவித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். ஆகவே ஸ்தல சுய ஆட்சி சம்பந்தமாக நாம் எது செய்தாலும் அநுபவ பூர்வமாக நல்ல முறையில் அவைகளைச் செய்துகொள்ள நமக்கு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன.

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக கவர்னருடைய உரையில் காணப்பட்டது மிகவும் முக்கியமான விஷயம். நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி பல வருஷங்களாகப் பேசிக்கொண்டு வருகிறோம். பிளானிங் கமிஷனும் தம்முடைய நோக்கங்களை எல்லாம் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறது. நிலச் சீர்திருத்தம் வெளி நாடுகளில் எவ்வாறு நடைபெற்று வருகிறது என்கின்ற விஷயங்கள் எல்லாம் நமக்குத் தெரியும். அது பற்றி சிறிது அநுபவமும் இருக்கிறது. ஜப்பான் போன்ற நாடுகளில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு அதுவே 13 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். வேறுபல நாடுகளிலும் செய்யப்பட்டிருக்கிற நிலச் சீர்திருத்தம், அந்நாடுகளின் பொருளாதார நிலை, அந்நாடுகளில் உள்ள நிலத்தின் விஸ்தீர்ணம், அங்குள்ள ஜனங்களின் பண்பாடு, கூலி நிலைமை இவைகளைப்பற்றியெல்லாம் நன்கு அறிந்து கொள்வதற்கு நமக்கு நிறைய வாய்ப்புகள் இருந்திருக்கின்றன. நம் நாடு சம்பந்தப்பட்ட வரையில் இது ஒரு பெரிய பிரச்னை. இந்தியா

[Sri R. Krishnaswami Naidu] [10th February 1958

விவசாய நாடு. இதுவரையிலும் இது ஒரு பெரிய விவசாய நாடு என்கிற நினைப்பு நமக்கு இருந்து வந்திருக்கிறது. சுதந்திரம் வரும் வரையில் நம் நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் எல்லாம் நம் நாட்டிலேயே உற்பத்தியாகின்றன என்றுதான் நம்பினேம். அந்த அபிப்பிராயம் தப்பு என்கிறது இப்போதுதான் நன்ருகத் தெள்ளத் தெளிய அறிய முடிகிறது. நம் நாட்டில் தானியங்களை உற்பத்தி செய்யக் கூடிய நிலத்தின் விஸ்தீர்ணம், விவசாயம் செய்வதற்கு லாயக்கான நிலங்களின் விஸ்தீர்ணம் மிகவும் குறைவு என்பது நன்ருகத் தெரிந்துவிட்டது. உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூரில் மூன்று லட்சத்து நாலாயிரம் ஜனத்தொகை. 92 ஆயிரம் எக்கர் நிலங்கள் தான் தானியங்கள் உற்பத்தி செய்யக்கூடியவையாக இருக்கின்றன. மொத்த விஸ்தீர்ணம் 2 லட்சத்து 92 ஆயிரம் இருக்கும். அவைகளில் பெரும் பாலும் காடு, மலை, ஆறுகள், ரோடுகள் ஆக இருக்கின்றன. பாக்கி விவசாயம் செய்யக்கூடிய பகுதி நிலத்தின் விஸ்தீர்ணம் 92 ஆயிரம் எக்கர்கள்தான். இதில் எல்லா வகையான புஞ்சை தானியங்களையும் சேர்த்து பயிர் செய்யப்படுகிறது. இப்படி அநேகமாக ஒவ்வொரு தாலூகாவையும் பார்த்துக்கொண்டே போனுல் நிலைமை கவலைக்கிடமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. நிலத்தின் விஸ்தீர்ணமும் வீடுகள், தொழிற் சாலைகள் கட்டுவதனுல் குறைந்து கொண்டுவருகிறது. ஆகவே இன்றைக்கு இருக்கிற நிலத்தில் அதிகமாக விளைச்சலை பெருக்குவதுதான் சிறந்த வழி. இத்துறையில் சர்க்கார் அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. ஆகவே இப்போது கொண்டுவர இருக்கிற நிலச் சீர்திருத்தச் சட்டமும் இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் மனதில் கொண்டு தயாரிக்கப் படவேண்டியதாக இருக்கிறது. அதற்காக இந்தச் சட்டம் அவசியம் இல்லை என்ரே, நிலம் எவ்வளவு வைத்திருக்கலாம் என்று வரம்பு கட்டுவது அனுவசியம் என்ரே சொல்லவரவில்லை. அது அவசியம் தான். அதிக நிலங்களை வாங்கி வைத்துக்கொண்டு சரியாக விவசாயம் செய்யாமல் இருப்பதைத் தடை செய்ய நிலவரம்பு கட்டுவது சரியான காரியமாகும். அதோடு இன்னொரு முக்கியமான விஷயம். இப்படி அதிக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலங்களை வாங்குவதற்கு வரம்பு கட்டினுலும் அவர்களிடமிருந்து கிடைக்கும் நிலத்தின் விஸ்தீர்ணம் நம் நாட்டிலுள்ள நிலமில்லாதவர்களுக்கு எல்லாம் விநியோகிப்பதற்குப் போதுமானதாக இராது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

1955-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் இந்த நிலம் சம்பந்தப்பட்ட வரையில் நம்முடைய ராஜ்யத்தில் ஒரு சர்வே நடைபெற்றது உங்கள் அனைவருக்கும் நினைவு இருக்கும். அந்த சர்வேயில் எவ்வளவு நிலம் நிலத்திற்கு உடையவர்களிடமே பரவலாக இருந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும், நிலத்தை உடையவர்களினுல் சாகுபடிசெய்யப் படாத நிலத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்பதைப்பற்றியும் இதுமாதிரியான புள்ளிவிவரங்களைத் தயாரித்து சர்க்கார் கொடுத்தார்கள். அதன் படி மொத்தத்தில் 90 சத விகிதம் நிலங்கள் நில சொந்தக்காரர்களாலேயே அநுபவிக்கப்பட்டு வருவதாகப் பார்த்தோம். பாக்கி 25 லட்சம் எக்கர்தான் வாரம், குத்தகை ஆக இருந்து கொண்டிருப்பதை அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களில் இருந்து தெரிந்து கொண்டோம். அதன் அடிப்படையில்தான் வாரம், குத்தகை சம்பந்தமாகச் சட்டம் செய்யப்பட்டது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அப்படியெல்லாம் நாம் பார்த்தால் அதிகப்படியான நிலம் நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க இந்த நாட்டில் இருக்கிறதா என்பதைப் பற்றி நமக்குச் சந்தேகம் வரும். இதைப்பற்றிச் சொல்லும்போது நான் பயப்படவில்லை. நான் நிலம் அதிகம் உள்ளவனே என யாரும் கவலைப் படவேண்டாம். மிகமிகக் குறைந்த நிலம் உள்ளவன் நான். அந்த மாதிரியான பயம் எனக்குக் கிடையாது. பொதுவாக உயர்ந்தபட்ச நில வரம்பு கட்டும்போது அதில் உள்ள நம்முடைய அநுபவங்களையொட்டி நாம் அந்தச் சட்டத்தைத் தயாரிக்கவேண்டும் என்பதை வற்புறுத்தத் தான் நான் விரும்புகிறேன். நம் ராஜ்ஜியத்தில் ஒரு எக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் 9 லட்சம் சொச்சம். ஒரு எக்கரிலிருந்து 2½ எக்கர் வரையில் 11 லட்சம் சொச்சம். 75 எக்கரிலிருந்து 100 எக்கர்

10th February 1958] [Sri R. Krishnaswami Naidu]

வரை சுமார் 6,500 பேர்கள். நூறு ஏக்கர் முதல் 150 ஏக்கர் வரையில் 4,800 பேர்கள். 1,000 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் 180 பேர். இதுபற்றிய புள்ளிவிவரங்கள் எல்லாவற்றையும் அந்த ரெவின்யூ சர்வேயின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஏன் 75 ஏக்கருக்கு மேல் சொன்னேன் என்றால் கீழே இல்லை என்று அல்ல. இதைப்பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்யும்போது மொத்த தானிய உற்பத்தியாகக் கூடிய நிலங்களின் விஸ்தீர்ணம் என்ன, அதில் புஞ்சை நிலங்கள் எவ்வளவு, நஞ்சை நிலங்கள் எவ்வளவு, ஒவ்வொரு வரிடமும் உள்ள நிலங்கள் எவ்வளவு என்பதைப்பற்றியெல்லாம் நன்று தெரிந்து கொண்டு நிலவரம்புச் சட்டம் அமைக்கப்படவேண்டும். நியாய மான அளவு ஒவ்வொருவரும் நிலம் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். நியாயமான அளவு என்றால் அதிக பட்சம் எத்தனை நிலம் வைத்துக் கொண்டால் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சாகுபடித் தொழிலை நடத்த முடியும் என்பதைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் சட்டபூர்வமாக ஒன்றை நிர்ணயிக்கும்போது நாட் டின் நிலைமையை நன்றாக உணர்ந்து காரியங்கள் செய்ய வேண்டியவர் களாக நாம் இருக்கிறோம்.

அடுத்தபடியாக இந்த நாட்டிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நல்லவகையில் முன்னேறி வருகிறது. அதற்கு ஏதோ கொஞ்சம் நிதிக் குறைவு இருந்தாலும் கூட திட்டத்தின் எந்தப்பகுதியையும் கைவிடாது நிறைவேற்றி வைக்கக்கூடிய சூழ் நிலை வளர்ந்து வருகிறது. திட்டம் பூர்ணமாக வெற்றி பெறவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எல்லா அரசியல் கட்சிகளும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறுவதற்குப் பூர்ணமாக ஒத்துழைக்க வேண்டும். ஏன் இப்படிக் குறிப் பாகச் சொல்லுகிறேன் என்றால் பெயர் அளவில் அரசியல் கட்சியாக இருப் பது சிலவும், சட்டசபையில் தலைவர்களாக உள்ள அந்தக் கட்சிக்காரர் களைத் தவிர பாக்கியுள்ள ஊழியர்கள் அந்தக் கட்சி சம்பந்தப்பட்ட வரை யில் இந்தத் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு சரியான ஒத்துழைப்பை அளிக்காமல்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். தலைவர்களுடைய மனதில் எப்படிப்பட்ட எண்ணம் இருந்தாலும் அந்தக் கட்சி ஊழியர்க ளுடைய மனதில் எல்லாவிதமான ஒத்துழைப்பு எண்ணமும் வளரவில்லை. இதைப்பற்றி நான் ஜோஸியம் சொல்லவில்லை. பல கட்சிக்காரர்களை நான் பல கூட்டங்களுக்கு அழைத்திருக்கிறேன். நடைபெறுகின்ற பொதுக் காரி யங்களில் பங்குகொள்ள வாருங்கள் என்று அழைத்திருக்கிறேன். அவர் கள் வந்தது இல்லை. ஒரு நாட்டின் பொதுவான திட்டங்கள் எல்லாம் வெற்றிபெறவேண்டுமானால் எல்லோருடைய ஒத்துழைப்பும், எல்லாப் பகுதி மக்களுடைய ஒத்துழைப்பும், எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும்.

இந்த நாட்டின் க்ஷேமம் நாம் வகுக்கப்படும் திட்டங்களைப் பொறுத் திருக்கிறது. ஆதலால் நாம் திட்டங்களை நிறைவேற்றுகையில் பணத்தை நல்ல முறையில் செலவிடவேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு நாம் திட்டங்களுக்கு செலவு செய்யவேண்டும். நாம் செலவு செய்யப்படு கிற பணம் நல்ல முறையில் மக்களுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்று பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்கு எல்லாக் கட்சிகளும் தங்கள் கட்சி வேற்றுமைகளைக் கருத்தில் கொள்ளாது தங்களின் ஒத்துழைப்பைக் கொடுத்தால் நாடு நல்ல முறையில் முன்னேற ஏதுவாயிருக்கும். ஒரு திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டுமானால், நாட்டின் நலனைக் கருதியும் சமுதாயத்தின் நன்மையைக் கருதியும் கட்சிவேறுபாடின்றி செயல்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 10–30 a.m.

அடுத்தபடியாக நம் சென்னை ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கான கிராமங் களில் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவிற்கு மேல் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நாம் சந்தோஷப்படவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கரும்பு ஆலைகளில் மின்சாரம் உபயோகப்படுத்துவதில்

[Sri R. Krishnaswami Naidu] [10th February 1958

அதிகமான கட்டணம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்ற புகார் வந்துக்கொண்டிருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சிறு சேமிப்புதிட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். சற்று முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது இந்த சிறு சேமிப்பு விஷயத்தில் அரசியல் கட்சிகளுக்கு கருத்து வேற்றுமை இருக்கக்கூடாது, அதற்குக் காரணம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சில வாரங்களுக்கு முன்பு ஜனநாயக தேசிய காங்கிரஸ் தலைவர் யாரோ ஒருவர் இந்த சேமிப்பு திட்டத்தில் கீழ் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையானது ஜனங்களைக் கட்டாயப் படுத்தக்கூடியதாகவும், துன்புறுத்தக்கூடியதாகவும் இருக்கிறது என்று சொன்னதாக பத்திரிகையில் படித்தேன். அவர் அவ்வாறு சொல்லுவது நல்லதல்ல என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த சிறு சேமிப்பின் மூலம் சிக்கன முறை நாட்டில் ஏற்படும். சிக்கனமுறையில்லையானால் நாடு முன்னேற முடியாது. சிறு தொழிலாளியாக இருந்தாலும் சரி, பெரிய பணக்காரனாக இருந்தாலும் சரி எல்லோருக்கும் சிக்கனமுறையானது நல்லது. ஆகவே இதில் கட்சி பாகுபாடின்றி எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் பேருரையில் சில மசோதாக்களைப்பற்றி தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக விற்பனை வரி சம்பந்தமாக ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்போவதாக எதிர்பார்க்கப்படுகிறது. டாக்டர் லோகநாதன் சமர்ப்பித்த அறிக்கையின் பேரில் நடக்கும் விவாதத்திற்குப் பிறகு ஒரு மசோதா முடிவில் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வியாபாரிகளிடமிருந்து இந்த விற்பனை வரி வசூலிக்கப்படும் முறையானது, இதில் நிர்வாக முறையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை யாரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். சுலபமான, சிக்கல் இல்லாத முறையில் வரி வசூலிப்பதற்கு சட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம் என்று சொல்லி இந்த தீர்மானத்தை பிரேரேபித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Speaker, Sir, I rise to second the Resolution moved by my esteemed colleague to thank His Excellency the Governor for his Address to the Legislature on Saturday, the 8th February. Sir, at the very outset, His Excellency the Governor emphasised the need and the necessity to preserve, nourish and develop that sense of national solidarity which had helped us in the past to win our freedom to retain our freedom now and to achieve economic and cultural progress. I am sure every Member of this House would agree with His Excellency and give his or her best to achieve these two things without which every Member would agree with me that there would be no peace or prosperity in the country.

Sir, His Excellency the Governor next spoke about the official language question. I am sure that the Members would agree with the compromise formula suggested by the Government and I am also sure that both the Union Government and the Parliament would agree to this. After all, there are certain foreign countries where there are more than one language used as the national language.

Sir, His Excellency mentioned about the Agricultural Department trying their best to achieve additional tonnage of nearly 13 lakhs to maintain the target under the Second Plan. Foodgrains form a very essential and important requirement and unless we have

enough food and more food which should be made available to the people at a reasonable cost, there is going to be no orderliness, or peace or prosperity in the country. I want that a practical and dynamic policy should be adopted to see that we achieve self-sufficiency in food. If only we could achieve self-sufficiency in food, I am sure we would be able to save the enormous amounts that we are paying to foreign countries and there would be an improvement in our foreign exchange position. We could very well utilise the money thus saved for the import of useful and important machinery needed for the development and prosperity of the country.

Sir. His Excellency has also stated that the schemes under the Second Five-Year Plan are progressing satisfactorily. We are very glad to hear this statement. He has particularly mentioned that the electrification schemes in the rural areas are progressing at very great speed. On this occasion, I must congratulate the Hon. the Minister for Electricity for his drive in taking electricity to the inner-most places. I would request him to maintain the same drive so that electricity can be taken to farther and farther places which would help to increase and develop agaricultural production. I would like to stress that we should not only concentrate on producing more and more foodgrains, but should also concentrate on producing more and more commercial crops. Because, there are certain commercial crops which could be exported to foreign countries and thereby we could earn large amounts of foreign exchange which could be utilised for the betterment of our own country.

Sir, I must refer here to the opening of one of the biggest industrial estates by no less a personality than our great Prime Minister. The industrial estate opened here is one of the four big industrial estates in our country and I am sure that the small scale industrialists would take advantage of this estate and do their best in co-operating with the Government and running it very successfully. I am one of those who have been emphasising both in this House outside bodies that unless and until we have plenty of big-scale, medium-scale and small-scale industries, we are not going to solve our unemployment problem, and we are not going to have more and more prosperity in our country. The other day, the Hon. the Minister for Industries spoke very frankly at another platform that he was unable to aid the applicants from the Industrial Financial Corporation because of the financial stringency. I am very happy to note that the Small Savings Scheme is proving a very great success and that the amounts collected under this Scheme would be utilised to a very great extent for the development and establishment of many industries.

Sir, I take this opportunity of congratulating the Hon. the Minister for Industries and Labour on being able to assure this House that it would be his endeavour to see that a larger number of industries are located in our State. We have millions and millions of people—both educated and uneducated—and unless we try to absorb them all in productive employment, I am afraid, 10-40 a.m.

[Sri K. S. G. Haja Sheriff] [10th February 1958

they will become a sort of problem for us and we will not be able to maintain a peaceful atmosphere. I am sure that the Government will take all positive steps to locate more industries in the State, giving representation to every district, so that this problem of unemployment may be solved very soon.

SRI M. D. RAMASAMI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் சட்டசபையில் பேசிய பேச்சின் மேல் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலாவ தாக, இந்த மாநில நிர்வாகம் சம்பந்தமாக, அவருடைய முயற்சியில் அவருடன் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கனம் கவர்னர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்பற்றி ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி நாயுடு குறிப்பிட்டார். எங்கள் தேசீய ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய நன்மைக் காக எடுத்துக்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் நாங்கள் பங்குகொள் வோம். அத்தகைய முயற்சிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத் தோடு ஒத்துழைக்க நாங்கள் தயங்கமாட்டோம் என்பதை எங்கள் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், ஒரு குறிப்பிட்ட கட்சியின் கொள்கைகளைப் பற்றியும் அவை ஆளும் கட்சியின் கொள்கைகளினின்றும் எந்த வகையில் மாறுபட்டிருக்கின்றன என்பதைப்பற்றியும் விவரித்துச் சொன்னார்கள். இதை கவனித்தபோது, கவர்னர் அவர்களின் பிரசங்கத்தின் மீது நடக்கும் விவாதத்தின்போது ஒரு கட்சியின் கொள்கைகளைப்பற்றி விவாதிக்கும் அரங்கமாக நமது சட்டசபை ஆகிவிடக் கூடாதே என்று நான் கவலைப் பட்டேன் ; கவலைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் மிகவும் திருப் தியளிக்கும் அம்சம் ஒன்றை நான் கண்டேன். நமது தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுவருகிற குந்தா, பெரியாறு திட்டங்களுக்கு அன்னிய நாட்டுச் செலாவணிக் குறைவால் கஷ்டம் இருப்பதாக நாம் நினைத்துக்கொண்டிருந்தோம். அன்னிய நாட்டுச் செலாவணிக் குறைக் கஷ்டங்கள் நீங்கிவிட்டன என்றும் அந்தத் திட்டங்கள் தடையின்றி நிறை வேறும் என்றும் கவர்னர் அவர்களுடைய உரையில் சொல்லப்பட்டிருப்பது மிகவும் திருப்தியளிக்கும் விஷயம். அந்தத் திட்டங்கள் சீக்கிரமே முடி வடைந்து மக்களுக்கு நன்மையைக் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் ஏமாற்றமளிக்கும் சில விஷயங் களும் இருந்தன என்பதை பணிவுடன் சொல்லிக்கொள்கிறேன். இந்த ராஜ்யத்தில் தொழிலாளர்களிடையேயும், மற்ற ஜனங்களிடையேயும் படித்தவர்களிடையேயும் படிக்காதவர்களிடையேயும் இருக்கும் வேலை யில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் ஒரு வார்த்தைக்கூட இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தை சமாளிப் பதற்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றியும் கவர்னர் அவர்கள் ஒரு வார்த்தைக்கூடச் சொல்லவில்லை. குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாட்டில் முக்கியமான தொழிலாகக் கருதப்படும் கைத்தறித் தொழிலைப்பற்றியும், அதன் நலன்களைப் பற்றியும், இன்று கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுவதைப் பற்றியும் கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் ஒரு வார்த்தையும் இல்லை. கைத்தறி நெசவாளர்கள் கடந்த ஆறு மாத காலமாக மிகவும் பரிதாப கரமான நிலைமையில் இருந்துவருகிறார்கள். கூட்டுறவு சொஸைடியில் இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் வந்துவிட்டது. முன்பு கொடுக்கப்பட்டுவந்த ரிபேட் தொகை டிசம்பர் 1-ம் தேதி முதல் குறைக்கப்பட்டதன் காரணமாக ஏராளமான உருப்படிகள் தேங்க ஆரம்பித்துவிட்டன. அதன் காரணமாக கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கும் கைத்தறி நெசவாளர்கள்கூட வேலையில்லாத் திண்டாட்டத் தால் அவதிப்படுகிறார்கள். அப்படியிருக்கும்போது கூட்டுறவு சொஸைடியில் இல்லாத நெசவாளர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை கனம் அங்கத்தினர்களே யோசித்துக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமாக பல கைத்தறி ஸ்தாபனங்கள் மத்திய சர்க்காருக்கு பல

10th February 1958] [Sri M. D. Ramasami]

வேண்டுகோள்களை அனுப்பியிருக்கிறார்கள். முன்பு கொடுத்த அளவில் ரிபேட் கொடுத்தால்தான் தேங்கியிருக்கும் கைத்தறி ஜவுளிகள விற்பனையாகும் என்று தென்னிந்தியாவிலுள்ள அனேக கைத்தறி ஸ்தாபனங்கள் சொல்லியிருக்கின்றன. நமது சென்னை அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களிடத்தில் மிகவும் அனுதாபம் காட்டி இந்த கோரிக்கையை மிகவும் அழுத்தமாக மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தியிருப்பதாக நமது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னது ஓரளவு சாந்தப்படுத்துகிறது. இருந்தாலும், தேங்கியிருக்கும் கைத்தறி ஜவுளிகளுக்கு விற்பனைக்கு மார்க்கம் கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டியது சர்க்காரின் கடமை ஆகும். அதை அரசாங்கம் எப்படியும் செய்தாக வேண்டுமென்று வலியுறுத்த ஆசைப்படுகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு சர்க்கார் செய்யும் உதவிகள் எந்த ரூபத்தில் இருக்கின்றன ? ஒரு வருஷத்திற்கோ இரண்டு வருஷங்களுக்கோ ஒரு தடவை கைத்தறி நெசவாளர்கள் பட்டினியால் வாடித் தெருவில் திரியும்போது கஞ்சித் தொட்டிகளை அமைத்து அவர்களுக்கு சர்க்கார் உதவுகிறார்களே தவிர, உருப்படியான நிவாரணத் திட்டம் எதையும் சர்க்கார் நிறைவேற்றவில்லை. நாட்டில் கைத்தறி ஜவுளிகளுக்கு மார்க்கெட்டுகளை தேடிக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமையாகும். அது மட்டுமல்ல. ராஜ்யத்தில் எந்த எந்த இடங்களில் எந்த விதமான கைத்தறி துணிகள் நெய்யப்படுகின்றன என்பதையும், எங்கெங்கே எந்தெந்தத் துணிகளுக்கு மார்க்கெட்டுகள் இருக்கின்றன என்பதையும் கண்டுபிடித்து, மார்க்கெட்டுக் கேற்றவாறு துணிகளை உற்பத்தி செய்வதற்கு நெசவாளிகளுக்கு வழி காட்டவேண்டும். அந்த முறையில் கைத்தறித் துணிகள் உற்பத்திக்கும் அவைகளின் விற்பனைக்கும் சர்க்காரே முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இதை நான் முன்பே வலியுறுத்தியிருக்கிறேன் ; இப்போதும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

சிறு சேமிப்புத் திட்டத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு குறிப்பிட்டார். சிறு சேமிப்புத் திட்டத்திற்காக எல்லோரையும் கட்டாயப்படுத்தி பணம் வாங்கக்கூடாது என்று எங்கள் கட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வாஸ்தவம். சிறு சேமிப்புத் திட்டத்திற்காக கட்டாயப் படுத்திப் பணம் வாங்குவதை இன்றைக்கு நேரில் பார்க்கிறோம். ஜனங்களுக்கு ஏதாவது காரியமாக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அப்போது அதிகாரிகள் அவர்களிடம் சிறு சேமிப்பிற்கு பணம் கேட்கும் நிலைமையை நேரில் பார்க்கிறேன். ரயத்துக்களிடம்கூட சில சந்தர்ப்பங்களில் சிறு சேமிப்பிற்காக வற்புறுத்திப் பணம் வாங்கப்படுவதாகப் புகார் செய்யப்படுகிறது. சிறு சேமிப்பிற்குப் பணம் கொடுக்காவிட்டால் அவர்களிடமிருந்து கிஸ்திப் பணம் வாங்கிக்கொள்ள அதிகாரிகள் மறுப்பதாக புகார் செய்யப்படுகிறது. மேலும், எங்கள் பிராந்தியத்தில் வியாபாரிகளிடமிருந்தும் சிறு சேமிப்பிற்காக வற்புறுத்திப் பணம் வாங்கப்படுவதாக தெரிகிறது ; மற்றப் பிராந்தியங்களில் எப்படியிருக்கின்றது என்று எனக்கு தெரியாது. சிறு சேமிப்புத் திட்டத்தை அமல் நடத்தும்போது மக்களிடம் பணம் வற்புறுத்தலின் பேரில் வாங்கப்படக்கூடும் என்று எதிர்பார்த்ததால்தான் எங்கள் கட்சியில் முன்பு குறிப்பிட்ட தீர்மானத்தைப் போட்டோம். வற்புறுத்தாமல் சிறு சேமிப்புத் திட்டத்திற்கு நிதி திரட்டவேண்டுமென்பதை உத்தியோகஸ்தர்களிடம் சர்க்கார் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் இந்தத் திட்டம் மக்களிடையே ஒரு பரபரப்பை உண்டுபண்ணும்.

அடுத்தபடியாக இப்போது அருப்புக்கோட்டை தாலூகாவில் முதுகுளத்தூர் போன்ற இடங்களில், ஆறு வருஷங்களுக்கு முன்புவரை ஜமீன்களில் இருந்துவந்த பாக்கிகளையும், ஐந்து வருஷங்களுக்கு முன்பு கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்பட்ட கடன்களையும் ஒரே தடவையில் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுமென்றும் சொல்லி, விவசாயிகளிடமிருந்து, ஏராளமான விளைச்சல் நிலங்களை போலீஸார் ஜப்தி செய்து வருகிறார்கள்.

ஜனங்கள் ஒரே தடவையில் இவைகளைக் கொடுக்க முடியாமல் கஷ்டப் படுகிறார்கள். இவர்களுக்கு வாய்தா கொடுக்கலாம். தேவைப்பட்டவர்களுக்கு, நியாயமான வாய்தா கிடைக்கவேண்டுமென்று நினைப்பவர் 10-50 a.m.

[Sri M. D. Ramasami] [10th February 1958

களுக்கு தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் வாய்தா கொடுக்கலாம் என்ற ஒரு சலுகை இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அது, வார்த்தை அளவில்தான் இருக்கிறதேயொழிய காரியத்தில் ஒன்றுமில்லை. மக்கள் இம்சிக்கப்படுவதை நாங்கள் பார்க்கிறோம். அவ்விரு தாலூகா மக்களுக்கு இது மூன்றாவது ஒரு இம்சையாக வந்திருக்கிறது, வந்து சேர்ந்திருக்கிறது. சேர்ந்தாற்போல் எல்லாத் தொகைகளையும் உடனடியாக கட்டவேண்டும் என்று, அதை உடனடி வசூலிப்பதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இது விஷயத்தில் தாரதம்மியம் காட்டவேண்டுமென்றும், தேவைப்பட்டவர்களுக்கு வாய்தா கொடுக்கவேண்டுமென்றும், லேசாக, கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்யக்கூடிய முறையில் சர்க்கார் ஒரு முறையை அனுஷ்டிக்கவேண்டு மென்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுஷ்டிக்கவேண்டுமென்று சர்க்கார் ஒரு தாக்கீது அனுப்பவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதுகுளத்தூர் தாலுகாவில் புதிதாக ப்ளாக்குகள் சாங்ஷனாகி இருக்கின்றன என்று அறிகிறோம். அந்தப் பிராந்தியத்தைப் பற்றி ஏற்கனவே அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது. ஆகவே, மற்ற ப்ளாக்குகளில் எதிர்பார்க்கிற மாதிரி, அந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்களிடம் இருந்து எந்தவித ஒத்தாசையும் எதிர்பார்க்கமுடியாத அளவிற்கு அங்குள்ள மக்கள் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். கம்யூனிட்டி ப்ராஜெக்ட்டின் அடிப்படைக் கொள்கைகள் பிரகாரம், மக்களின் ஒத்துழைப்பு இருக்கவேண்டும் என்பதை நாம் அறிந்திருந்த போதிலும்கூட, அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் தாலூகாக்கள் சம்பந்தப்பட்ட வரையில், எந்தவிதமான ஒத்துழைப்பையும் அவர்கள், அங்குள்ள மக்கள், மனம் உவந்து அளிப்பதற்குள்ள சக்தியில்லாதவர் களாக, வழி இல்லாதவர்களாக இருப்பதால் அந்த தாலூகாக்கள் சம்பந்தப்பட்டவரையில், அதைப்பற்றி தனியாக ஏதாவது வழியொன்றை செய்ய சர்க்கார் ஆலோசிக்க வேண்டுமென்றும், அங்குள்ள மக்களிடம் இருந்து உதவி எதுவும் எதிர்பார்க்க முடியாத நிலைமை இருப்பதால், சர்க்காரே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அதற்கென ஒரு திட்டம் வகுக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, முதுகுளத்தூர் தாலுகாவில் இன்னும் போலீஸ் உபத்திரவம் தீரவில்லை என்று நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அருப்புக்கோட்டை தாலூகா சம்பந்தப்பட்ட வரையில், அங்குள்ள ஹரிஜன மக்களும், முக்குலத்து மக்களும் சமாதானமாக வாழப் பிரியப்பட்டு அவர்களில் பலர் அக் கேஸ்களில் சாட்சி சொல்ல வர மறுக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள முக்குலத்து மக்களை, அதாவது சாட்சி சொல்ல வருவதற்கு மறுக்கும் அம் மக்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று அவர்களை போலீஸார் மிகவும் இம்சிக்கிறார்கள் என்ற புகார்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அதேபோல் தீ வைப்பு போன்ற கேஸ்களில் சாட்சி சொல்ல வருவதற்கு மறுக்கும் ஹரிஜன மக்களையும் போலீஸார் உபத்திரவிக்கிறார்கள் என்றும் புகார்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. அங்குள்ள ஹரிஜன மக்களும், முக்குலத்து மக்களும் சமாதானமாக வாழ விரும்புகிறார்கள். ஆகவே, அவர்களது ஒற்றுமை யையும், சமாதானத்தையும் குலைக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். சமரஸமாக வாழலாம் என்ற எண்ணத்துடன் அங்குள்ள ஹரிஜன மக்கள் சாட்சி சொல்ல வர மறுக்கிறார்கள் என்பதால் போலீஸார் அவர்களையும் உபத்திரவிக்கிறார்கள் என்று நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புவதற்குக் காரணம், இதை சர்க்காரின் கவனத் திற்கு கொண்டுவருவதின் மூலமாக இப்படிப்பட்ட காரியங்கள் இனி மேலாவது நடக்காமல் தடை செய்யப்படவேண்டும் என்ற எண்ணத் துடன்தான் இதைச் சொல்கிறேன். ஆக, அங்குள்ள நிலையை, அங்குள்ள மக்கள் சமாதானமாக வாழவேண்டும் என்று நினைக்கும்போது, அந்நிலையை குலைக்கும் எக் காரியத்தையும் செய்யாமல் போலீஸ் அதிகாரிகள் நிதானமாக நடக்கவேண்டும் என்று சர்க்கார் இதில் தலையிட்டு ஒரு உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிக பட்ச நில வரம்பு சம்பந்தமாக கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் சில வார்த்தைகள் சொன்னார்கள். அவர்கள் அதிக பட்ச நில வரம்பு கட்டுவதை வரவேற்பது போல் பேசி ஒரு பக்கத்தில்

10th February 1958] [Sri M. D. Ramasami]

அதிக பட்ச நில வரம்பு விதிப்பதால் பிரயோஜனம் இல்லை என்றும் சொன்னார்கள். அதோடு, இந் நாட்டில் அதிக பட்ச நிலம் உடையவர்கள் சொற்பமாயிருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். ஆகவே நிலம் இல்லாத ஏழைகளுக்கு அது சகாயமாயிருக்குமா என்ற முறையில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பேசினார்கள். ஆனால் முற்போக்கு கட்சிகள் எல்லாம், எல்லா இடது சாரி கட்சிகளும் உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாயிருக்கவேண்டும், உழுபவனுக்கே நிலத்தில் உரிமை இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, இம்மாதிரி கொள்கை எங்களிடமும் இருக்கிறது என்று சொல்லி அதிக பட்ச நில வரம்பு கட்டப் போகிறோம் என்று சொல்லி வருகிறார்களே தவிர உருப்படியாக ஒன்றும் செய்யக் காணவில்லை. இப்படிச் சொல்வதால் நிலச்சுவான்தாரர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்து அவர்கள் அச் சட்டத்தில் இருந்து எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று யோசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பது போலவே இருக்கிறது, இதைத் தாமதப்படுத்துவது. உண்மையாகவே, அதைக் கொண்டு வருவதற்குள்ள நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறதா என்று சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் மேற்கொண்டு புதிதாக நிலம் ஆர்ஜிதம் செய்துகொள்ளக்கூடாது என்று இப்பொழுது ஒரு சட்டம் கொண்டு வரப்போவதாக மேன்மைதங்கிய கவர்னர் சொல்லியிருக்கிறார்கள். அது, வரவேற்கத்தக்கதுதான். கூடிய சீக்கிரம் அது வரவேண்டும். பின்னால் வரக்கூடிய உயர்ந்தபட்ச நில வரம்புச் சட்டத்திற்கு இது முன்னோடியாக இருக்கவேண்டும். அதைக்கொண்டுவருவதில் கால தாமதம் எதுவும் இருக்கக்கூடாது, என்றும் சொல்லிக்கொண்டு நான் எனது பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

* Sri V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு வந்தனம் செலுத்தும் முறையில் நானும் இதில் பங்கு எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். முதன் முதலாக, நம் மாகாணம் போன்று அதேமாதிரி கஷ்டங்களும், பிரச்னைகளும் நிறைந்த ஒரு மாகாணத்தில் இருந்து வந்திருக்கும் முறையிலே நம்முடைய பிரச்னைகளையும், கஷ்டங்களையும் எளிதிலே அறிந்துகொள்ள, புரிந்து கொள்ளக்கூடிய கனவான் அவர்கள். ஆகவே, அந்த முறையிலேகூட நம் நாட்டில் இப்பொழுது, தமிழ் நாட்டில் உள்ள பிரச்னைகள் என்ன ? கஷ்டங்கள் என்ன ? அதற்கு என்னென்ன வழிவகைகள் செய்யப்பட இருக்கின்றன என்பதைப்பற்றி விரிவாகவும், அழகாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். முதன் முதலாக நண்பர் கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் எடுத்துச் சொன்னது போல் நம் திராவிட முன்னேற்றக் கட்சி தோழர்கள், கவர்னர் பெருமான் அவர்கள் உரை ஆற்றியபோது அதில் பங்கு எடுத்துக்கொள்ளாதது வருத்தப்படக்கூடிய விஷயமாகும். ஏனென்றால், அவர்கள் கூறும் கூற்றை மற்ற நாட்டினர் எடுத்துக் கொண்டால் இன்று இதர நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்கள் எல்லோரும் அங்கு உத்தியோகம் வகிக்க முடியாது, அங்கு வாழ்க்கை நடத்த முடியாது என்ற முறை அனுஷ்டிக்கப்பட்டால் நம் தமிழ் நாட்டிற்கு பல லட்சக் கணக்கான தமிழர்கள் வந்து சேருவர். தமிழ்நாடு அதைத் தாங்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே இப்படிப்பட்ட காரியங்களில் உணர்ச்சி வசப்படாமல், பொருளாதாரத் தத்துவத்தை உணர்ந்து கொண்டு அரசியலை நன்கு தெரிந்து அம்மாதிரி காரியங்களில் புத்திமதி கூறவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதன்முதலாக, பல நல்ல அம்சங்கள் நம் கவர்னர் பெருமானின் உரையில் இருக்கின்றன. அதில் சிலவற்றை மாத்திரம் எடுத்துக் காண்பித்துவிட்டு முடித்துக் கொள்கிறேன். முதன் முதலாக, நம் நாட்டை எதிர்நோக்கும் முதல் முக்கிய பிரச்னை, உணவுப் பற்றாக்குறையாகும். ஏற்கெனவே, நம் நாட்டிலுள்ள எல்லா நதிகளிலும், நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டு எல்லா நதிகளும் நன்கு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. அடுத்தபடியாக, சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள். கண்மாய்கள் ஆழப்படுத்தப்பட்டு, குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு, அடி ஊற்று நீரை Deep-well pumps மூலம் வெளியேற்றி பயன்படுத்துவது போன்ற காரியங்களில், மேற்படி சிறுநீர்ப்பாசனத் திட்டங்களில் அக்கறை எடுக்க முற்பட்டிருப்பது பாராட்டத்தக்கதுதான். அதுமாத்திரமல்ல. காவேரி, பவானி போன்ற

[Sri V. Sankaran] [10th February 1958

நீர்ப்பாசனங்களில் இருந்து காவேரி டெல்டா, கோயம்புத்தூர் போன்ற பிரதேசங்களில் மூன்றாவது போகம் விளைவிக்க யோசனை செய்யப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தில் ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது. அது என்ன என்று அதைப்பற்றி ஒரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். சில நிலங்கள் மூன்றாவது போகம் விளைவிக்க லாயக்குள்ளதாக இருக்கும். சில நிலங்கள் இரண்டு போகம் விளைவிக்கக்கூட லாயக்கற்றதாக இருக்கும். ஆகவே, ஒன்றிரண்டு போகத்திற்கு மேல் விளைவிக்க லாயக்கற்ற நிலங்களில் மூன்று போகங்கள் விளைவிக்க முற்பட்டால் இரண்டு போகங்களில் விளைவதை விட மூன்று போகங்களில் விளைவது குறைவாயிருக்கும் என்று ஒரு அபிப்பிராயம் கூறப்படுகிறது.
11-00 a.m. அதோடுமட்டுமல்ல, இப்போதுள்ள நீரை உபயோகப்படுத்தினால் பின்னால் வரவிருக்கும் குறுவை போகத்திற்கு பயன்படுமாறு செய்ய ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பத்திலேயே போதிய தண்ணீர் இல்லாது குறைந்துபோய்விட்டால் என்ன செய்வது என்று ஒரு அச்சமும் நிலவி விடுகிறது. இவைகளை நன்றாக சிந்தித்து முடிவு எடுத்துக்கொள்ளவேண்டும். அடுத்தபடியாக சொல்லப்போனால் நல்ல அறுவடை இருக்கின்றது என்று சொல்லி நியாய விலை கடைகளை மூடிவிடப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு தான் அறுவடை கூடுதலாக இருந்தாலும் ஏழைகள் எளிதாக வாங்கும்படி போதுமான அளவு விலைவாசி இன்னும் இறங்கவில்லை. ஆகவே விலைவாசி இறங்குகிறவரையிலும் முக்கியமாக ஏழைகள் வசிக்கும் இடங்களிலும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளிலும் நியாய விலைக் கடைகளை திறந்து வைத்திருக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும். விவசாயிகளுக்கு வேண்டிய விதைகள் மற்றும் கடன் வசதிகள் போன்ற எல்லா வசதிகளும் வேண்டிய காலத்தில் போதிய அளவு செய்து கொடுத்தால் ஓரளவு இந்த நாட்டில் இருக்கின்ற பற்றாக்குறை தீர்க்கப்படலாம் என்று கூற விரும்புகிறேன். ஆகவே அவர்கள் வேண்டிய ஆக்கம் அளிக்கவேண்டும். அடுத்ததாக சிறு ரக தொழில்களுக்கு பல வசதிகள் அளிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கனரகத் தொழில்கள் அவ்வளவாக கூடுதலாக இல்லை, காரணம் அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இல்லை, அதற்கான இயற்கை வளம் நம் நாட்டில் இல்லை. ஆனால் சிறு ரகத் தொழில்களுக்கு நல்ல ஆக்கம் தரப்பட்டிருக்கிறது. இன்று நாட்டில் கனரகத் தொழில்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாக சிறு ரகத் தொழில்களும் இருக்கின்றன. இன்றைக்கு ரேடியோ, கார் போன்றவைகளுக்கு வேண்டிய சிறு பாகங்கள் எல்லாம் சிறு ரகத் தொழில்கள் மூலம்தான் உண்டாக்கப்பட்டு வருகின்றன. இதை உணர்ந்து கொண்டுதான் இன்றைக்கு பல சர்க்கார் இண்டஸ்ரியல் எஸ்டேட் போன்றவைகளை ஆரம்பித்திருக்கின்றனர். மேலும் பரவலான முறையில் பொருளாதாரம் இருப்பதற்காக வேலையில்லாத் திண்டாட்டத்தை கூடுமானவரை போக்கவும் சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்கு வேண்டிய பல முறைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக கொண்டுவரப்போகும் சில சட்டங்களை எடுத்துக் கொள்ளும்போது குறிப்பாக ஒரு சில சட்டங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது நடைமுறையில் அற நிலைய பாதுகாப்புச்சட்டம் திருத்தி அமைக்கப்போவதாகத் தெரிகிறது. அந்த மசோதாவில் அறநிலையங்களிலிருந்து கிடைக்கும் உபரி நிதியைக்கொண்டு வேறு சில பொதுப் பணிகளுக்கு உபயோகப்படுத்துவதற்கு வழிவகை செய்யப்போவதாக கேள்விப்படுகிறேன். ஆனால் அற நிலையங்களில் முதலாவது எடுத்து முடிக்க வேண்டிய சில வேலைகள் இருக்கின்றன. அவைகளைச் செய்வதற்கு முதலிடம் அளிக்கவேண்டும். அதை முதலாவது செய்த பிறகுதான் அறநிலையங்கள் உபரி நிதியை கொண்டு பிற பணிகளுக்கு செலவு செய்ய வேண்டும். உதாரணமாக பெருங்கோவில்களுக்கு பக்கத்திலோ அல்லது ஒட்டியோ பல சிறு கோவில்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் இன்று வரையிலும் சீரழிந்து, பாழடைந்து, அன்றாட நிர்வாகத்திற்கும் நிதி இல்லாமல் இருக்கின்றன. ஆகவே இந்த மாதிரியான கோவில்களில் நிர்வாகம் நடப்பதற்கு வேண்டிய வழிவகைகளை நல்ல முறையில் செய்து

10th February 1958] [Sri V. Sankaran]

கொடுக்கவேண்டும். இதற்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும். அதற்குப் பின்னுல் இந்த உபரி நிதியைக் கொண்டு வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தவேண்டும். இரண்டாவதாக பல கோவில்களும், குளங்களும், மண்டபங்களும் தோட்டங்களும், சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் சீர்திருத்தவேண்டும். அடுத்தபடியாக எடுத்துக் கொண்டால் கோவிலுள்ள சிப்பந்திகள் எல்லாம் பொருளாதார வகையில் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். இன்றைக்கு மதுரையை எடுத்துக் கொண்டால் அங்கு பெரிய கோவில் இருக்கிறது. இந்தியாவில் உள்ள கோவில்களில் பெரிய கோவிலாக மதுரையிலுள்ள கோவில் இருக்கிறது. அங்கு வேலை பார்க்கின்ற சிப்பந்திகள், அதாவது பியூன் போன்றவர்கள் அறுபது, அறுபத்தைந்து வயது வரை வேலை பார்த்தபின்பும் அவர்களுக்கு கடைசியில் 45 ரூபாய், 50 ரூபாய் தான் சம்பளம் கிடைக்கின்றது. அவர்கள் இதனுல் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். அவர்களுக்கு பிராவிடண்டு பண்ட், பென்ஷன் போன்ற வசதிகள் கிடையாது. அதே மாதிரி தான் அங்கு வேலை செய்கின்ற கிளார்க்குகளை எடுத்துக் கொண்டாலும் அவர்களும் இதே நிலைமையில் தான் இருந்து கொண்டிருக்கிருர்கள். இதனுல் சேவகர்கள் சிலர் யாத்ரீகர்களிடமிருந்து லஞ்சம் போன்றவைகளை வாங்குவதற்கும் காரணமாய் இருக்கின்றன. ஒரு சில கிளார்க்குகள் பண விஷயத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளவும் முற்படுகிருர்கள். இவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்தவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பிராவிடன்ட் பண்ட், பென்ஷன் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். இவற்றிற்கெல்லாம் முதலிடம் கொடுக்கப்படவேண்டும். இந்த முக்கிய காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து அதற்கு மேல் உபரி நிதி மிஞ்சினுல், கல்விச்சாலை போன்ற பொதுப் பணிகளுக்கு உபயோகப்படுத்தலாம். மதத்தின் நன்மைக்காகவும் மதத்தினுடைய பலனுக்காகவும் தான் எண்டோமென்ட் போர்ட் சட்டம் செய்து இருக்கின்ருர்கள். அதுதான் **main object** என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே மதத்திற்கு நல்ல பிரசாரம் செய்வதை முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டும். இதற்கு மேலும் உபரி நிதி மிஞ்சினுல் அதைக் கொண்டு பள்ளிக்கூடங்கள் முதலியவை நடத்த உத்தேசிப்பது எல்லாம் நல்லதுதான். அதிலும் மதத்தின் நன்மைக்காக வேலை செய்து வரும் ராமகிருஷ்ண மடம் நடத்திடும் மத போதனையை முக்கியமாகக்கொண்ட கல்விச் சாலைகள் போன்ற ஸ்தாபனங்களுக்கு உதவி அளிக்கவேண்டும். ஆகவே இம்மாதிரியான மூன்று நான்கு விஷயங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால் இம்மாதிரியான காரியங்களுக்கு முதலிடம் கொடுத்தால் அதன் பின்னுல் உபரி நிதி வரும் என்று தோன்றவில்லை. அடுத்ததாக ஸேல்ஸ் டாக்ஸைப் பற்றி எல்லா மக்களும் அறியும்படி எளிதான முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போவதாகத் தெரிகிறது. இதனுல் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரியான பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. கவர்னர் அவர்களுடைய உரையை நான் வரவேற்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அமைதிக்கு பெயர்பெற்ற இந்த ராஜ்யத்திலே ஆங்காங்கு அமளிகள் தலைவிரித்தாட ஆரம்பித்திருக்கின்றன. பத்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் பெயர்பெற்ற இந்த ராஜ்யத்தில் பலாத்கார நிகழ்ச்சிகள் மிகவும் சகஜமாகிவிடக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி யிருக்கிறது. முதலில் முதுகுளத்தூர் நிகழ்ச்சி ; அதற்குப் பின்னுல் அதை மறப்பதற்கு முன்பாக வேறு பல இடங்களில் கலவரங்கள், கல்வீச்சுகள், பல இடங்களில் தடியடிகள் ; அதற்குப் பின்னுல் அந்த நிகழ்ச்சிகளை மறப்பதற்கு முன்னுல் திருச்சியிலே பப்ளிக் பிராஸிக்யூட்டர் அவர்களுக்கு கத்திக் குத்து, அதற்குப் பின்னுல் முதுகுளத்தூர் கேஸை நடத்துவதற்கு பொறுப்பு எடுத்திருந்த அதிகாரி அவர்கள் வேறு ஏதோ ஒரு காரணத்தைக் கூறி செய்த ராஜிநாமா. இவ்வளவு சம்பவங்களும் ஒன்றன்பின் ஒன்ருய் வரிசையாக நடந்திருப்பதானது முக்கியமான நிகழ்ச்சிகளைக் கொண்ட சம்பவங்களாக கவனிக்கத்தக்க அம்சமாகும். அதுமட்டுமல்ல முக்கியமானதுங்கூட. பொது வாழ்வில்

ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், ஜனநாயகத்தைக் காக்க வேண்டும், ஜனநாயக பண்பாட்டை வளரச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர்கள் யாரும் இதை அலட்சியப்படுத்திவிட முடியாது. இவ்வளவு முக்கியமான பிரச்னைப்பற்றி மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிடாமல் விட்டுவிட்டது வருந்தத்தக்க விஷயம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வளவு மோசமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதற்கு காரணம் ஏதோ ஒரு சில கட்சிகளை மாத்திரம் குறை கூறிக்கொண்டு ஆட்சியாளர்கள் தங்களுடைய பொறுப்பிலிருந்து, தங்களுடைய கடமையிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்பதை உறுதியாக சொல்லியாக வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் இருக்கின்ற கோடானுகோடி மக்களின் பத்திரத்தையும் பாதுகாப்பையும், இந்த நாட்டில் ஜன நாயக பண்பாட்டையும் வளரச் செய்வதற்கு எல்லா கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கின்றது. அதிலும் ஆட்சி புரிகின்ற கட்சிக்கு மற்ற எல்லா கட்சிகளையும்விட அதிகப் பொறுப்பு இருக்கின்றது, என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே அவர்கள் சரியானபடி தங்களுடைய கடமையை செய்திருப்பார்களானால் இந்த நிலைமை ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்காது என்று உறுதியாக சொல்ல முடியும். இவ்வளவு மோசமான நிலைமைகள் உருவாவதற்கு பல முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக இன்று ஜனங்களிடையே மத அபிமானம் எவ்வளவு தூரம் மனதில் இருக்கிறதோ அந்த அளவுக்கு மக்களின் மனதில் இருக்கின்றது மொழி பற்றிய அபிமானமும். மொழி அபிமானத்தைத்
11-10 a.m. தங்களுக்குரிய வகையிலே எடுத்துக்கொண்டு மக்களுடைய மொழி உணர்ச்சியைத் தூண்டிவிடுவதன் மூலம் தங்களுடைய அரசியல் சூதாட்டத்திற்குப் பயன்படுத்துவதற்காக சிலர் முயல்கிறார்கள். அரசியல் வாழ்வின் அந்திமத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் சில வயோதிக அரசியல் வாதிகள் மக்களின் எளிய உணர்ச்சிகளின் அடிப்படை மீது அல்பமான அரசியலை நடத்திக் கொண்டிருப்பவர்களுடன் சேர்ந்துகொண்டு மக்களின் மொழி உணர்வைத் தூண்டிவிட்டு, தம் நலனுக்குப் பயன்படுத்துவதின் விளைவே மொழிபற்றிய கூக்குரல் அதிகமாகத் தென்படுவதன் காரணம். நகரங்களில் போடப்படுகிற இந்தக் கூச்சலை மிகவும் பிரபலப் படுத்துவதற்கு பெரும்பாலான பத்திரிகைகள் இடம் அளிக்கத்தான் செய்கின்றன. ஆனால் இவர்களுடைய இந்தக் கூக்குரல் எந்த நகரத்தில் எவ்வாறு போடப்பட்டாலும், எந்த நோக்கத்தோடு போடப்பட்டாலும், அந்த நோக்கம் ஈடேறப் போவதில்லை என்று நான் மிகக் குறிப்பாகச் சொல்லுவேன். மக்களுடைய மொழி அபிமானத்தைச் சாதகமாக ஒரு சிலர் பயன்படுத்திக்கொள்ள ஆட்சியாளர்கள் மொழி பற்றிய தங்கள் கொள்கையை விவரித்துக் கூறாத காரணத்தாலும் இந்த நிலை உருவாகி, இந்த அரசாங்க மொழி பற்றிய சிக்கல் மிகவும் பிரபலப்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய சிக்கலல்ல என்பது என்னுடைய கருத்து. இந்தச் சிக்கலை மிகப் பெரிதுபடுத்துவதற்கும் ஆங்காங்கு பலர் முயலுகிறார்கள். இதற்குக் காரணம் அரசாங்கத்தின் தெளிவற்ற கொள்கையாகும் என்று நான் இங்கே குறிப்பிடவேண்டும்.

இந்த தேசத்திலே ஆட்சி மொழியாக இருக்க வேண்டியது ஆங்கிலமா ? அல்லது ஹிந்தியா ? அல்லது இரண்டுமேயா ? என்ற இந்த விஷயத்திலே என்னுடைய கருத்தை ஏற்கெனவே இந்த சபையின் முன் தெரிவித்திருக்கிறேன். இதனை விவரிக்க முற்படும் முன், ஆங்கிலமும், ஹிந்தியும் அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்ற இந்த அரசாங்கத்தின் யாதாஸ்தை ஒப்புக் கொண்டவன் என்ற முறையிலே நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட வேண்டும். ஆங்கிலம் அரசாங்க மொழி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட அதே நேரத்தில் ஹிந்தியும் அரசாங்க மொழி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. நாம் சமர்ப்பித்த இந்த யாதாஸ்தின் கருத்து என்ன என்றால், ஆங்கிலம் சிறிது சிறிதாக மறைந்து விடும், அப்போது ஹிந்தி அரசாங்க மொழி என்ற நிலைக்கு அனுமதிக்கப்பட்டுவிடும் என்றுதான் உண்மையிலே எதிர்பார்க்கப்பட வேண்டும். அப்படித்தான் ஹிந்தி தேசீய மொழியாக, தேசீய அந்தஸ்தைப் பெற்று நம் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தின் கொள்கையை

ஆதரிக்கிற முறையில் இந்தச் சபையிலே இருக்கிற கட்சித் தலைவர்களெல்லோருமே அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை இங்கே நான் சொல்லிக்கொள்ள வேண்டும். இதனைக் குறித்து அரசாங்கம் தங்கள் கொள்கையை மிகத் தெளிவாகக் கூறி, அவர்கள் பிரசாரத்தை நடத்தியிருந்தால் நிச்சயமாக இந்த மொழிச் சிக்கல் இப்போது இவ்வளவு பிரபலமாகி யிருக்காது. ஆங்காங்கு, ஹிந்தி வேண்டுமா, ஆங்கிலம் வேண்டுமா என்ற பிரச்னையைக் கிளப்பிவிட்டு மக்கள் மனதில் குழப்பத்தை உண்டாக்க அரசியல் வாதிகள் சிலர் முயலுகிறார்கள். கிராமப்புரங்களில் வாழும் மக்கள், கோடிக் கணக்கான மக்கள் இந்தச் சிக்கலைப் பற்றிய கூச்சலாலே மிகவும் துன்பத்திற்காளாகியிருக்கிறார்கள். ஏற்கெனவே, நொந்த மனதுடனே, பல வகையான துன்பங்களைச் சுமந்து கொண்டு, அநேகமாகக் கிராமக் குடியானவர்களும் அவர்களை நம்பி வாழுகின்றவர்களும் தங்களுடைய நிலைமைகளை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லிக்கொள்ளும் வகையிலே அவர்கள் குரல், மொழிச் சிக்கல் பற்றிய மிகப் பெரிய கூக்குரலால் அமுக்கப்பட்டு அவர்கள் தொல்லைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதனைக் குறிப்பிடுகிறேன். அவர்கள் பிரச்னை அனந்தம். அவர்கள் குறைகளைப் போக்கிக் கொள்ள, சமுதாய மாற்றத்திற்கான போராட்டங்கள் ஒரு புறம் நடத்திக்கொண்டே அதே சமயத்தில் ஜனநாயக ரீதியில் அமைந்துவிட்ட அரசாங்கத்திடம், அதிலும் இன்னும் நான்கு ஆண்டுகள் இந்த அரசாங்கம்தான் இருக்கப் போகிறது என்பதை உணர்ந்துதான் இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் இருக்கிறபோதே கூட தங்களுடைய குறைகளை நியாயமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் குறைகள் தீர்க்கப்படும், தீர்க்கப்படவேண்டும், அதுவும் இந்த சர்க்காரிலே என்று நிச்சயமாக எதிர் பார்க்கிறார்கள். அவர்கள் கடன் தொல்லையினால் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். போதிய நவீன விவசாய உபகரணங்களை அரசாங்கத்திடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். கடன் வசதிகளை அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். கடன் நிவாரண அம்சங்களில் இந்த அரசாங்கத்தின் உதவிகளை அவர்கள் எதிர் பார்க்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இன்னும் உரம் முதலியவைகளில் விசேஷமாக உதவி அளிக்கப்படுகிறது. கரும்பு, நெல் சாகுபடிக்கு, தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் அதிகப்படியான உதவி செய்ய இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் புஞ்சை வெள்ளாமை செய்யும் விவசாயிகளின் கதி என்ன. அவர்களுக்கு தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் அதிகப்படியான எரு ஏற்பாடு செய்யப்படுகிறதா என்று பார்த்தால், இல்லை. கோவை ஜில்லா பிளானிங் போர்டு சிபாரிசுகள் செய்து அனுப்பியிருக்கிறது. அதாவது புஞ்சை வெள்ளாமை விஷயத்திலும் தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் அதிகப்படியான உதவி செய்ய வேண்டுமென்ற அந்தச் சிபாரிசு இது வரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அது குறித்து இந்த அரசாங்கம் ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பரம்பிகுளம் திட்டம் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் அமுலாக்கப்படுவது நிச்சயம் என்று உறுதியாக நம்பி அதனை ஊர்ஜிதம் செய்கிறேன். அதற்குரிய பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. திட்டம் வரத்தான் போகிறது. ஆனால் பரம்பிக்குளம் திட்டம் வருவதன் மூலம் நன்மையை நாம் எந்த அளவில் அடைய முடியும் என்பதைக் குறித்து இந்த நேரத்தில் நான் கொஞ்சம் கவனப்படுத்தியாக வேண்டும். பரம்பிக்குளத் திட்ட நிலப் பரப்பில் அதிகம் புஞ்சை வெள்ளாமையின்கீழ் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் தண்ணீர் அதற்குப் பயன் படுத்தப்பட வேண்டும் என்று மீண்டும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதியிலும், புஞ்சை அதிகமான பல்லடம் தாலூகா பகுதியிலும் போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தினால், இப்போது ஏற்படும் இந்தப் பரம்பிக்குளம் தண்ணீர் முற்றிலும் புஞ்சைப் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுமென்று அரசாங்கம் ஒரு வாக்குறுதியை அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அளித்தால், அவர்களுக்கு ஒரு ஆறுதல் ஏற்படும் என்று நான் உறுதியாக இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்

[Sri P. S. Chinnadurai] [10th February 1958

களில் எந்த அளவிற்கு கவனம் செலுத்துகிறேமோ அந்த அளவிற்கு சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் விஷயத்திலும் கவனிக்கப்படுகின்றன என்று கவர்னர் பெருமான் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும் இந்த ராஜ்யத்தில் 50,000 தூர்ந்துபோன கண்மாய்கள், அதாவது குளங்கள் அல்லது குட்டைகள் என்று சொல்லப்படுபவைகள், இருக்கின்றன என்று இந்த ராஜ்யத்தில் வேலை பார்த்த என்ஜினீயர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். அந்த மாதிரியான குளங் குட்டைகளை, இப்போது சீர்திருத்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறுகிறேன். இந்தக் குட்டைகள், குளங்கள் பெரும்பாலும் திட்டுகள், மேடுகளாகி வருகின்றன. அவைகள் தர்க்காஸ்துக்களாக கொடுக்கப்பட்டு, பின்பு அவற்றில் சில விற்பனை செய்யப்பட்டு பிறரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளையெல்லாம் மீண்டும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு சீர்திருத்தினால் பெரும் அளவிற்குப் பலன் எதிர் பார்க்கலாம் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் கைத்தறியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ரிபேட் தொகை குறைக்கப்பட்டதை எதிர்த்து ஆங்காங்கு கைத்தறிக்காரர்கள் மிகவும் ஆட்சேபணை செய்து வருகிறார்கள். அவர்கள் ஆட்சேபணை வீணாகப் போய் விடுமோ என்று கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் இந்த ராஜ்ய அரசாங்கம் அவர்களது கோரிக்கைக்கு அனுகூலமாக இருக்கு மென்று நம்புகின்றேன். அந்த ரிபேட் தொகையை குறைத்
11-20 a.m. ததை எதிர்த்து கைத்தறியாளருக்கு அனுசரணையாக நின்று மீண்டும் அந்த உதவியைப் பெறுவதற்கு ராஜ்ய சர்க்கார் முன் வர வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். அதோடு கூட, விசைத் தறியைப் பற்றி இந்த அரசாங்கத்தின் கொள்கையை மீண்டும் வரையறுக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். விசைத் தறிகளை ஆங்காங்கு விஸ்தரிக்கும் முயற்சிகளை ஒவ்வொரு ராஜ்யமும் எடுத்துக் கொண்டு வருகிறது. இந்த முயற்சி எவ்வாறு இருந்த போதிலும் நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய கொள்கையை தெளிவாக திட்ட வட்டமாக வரையறுத்து தெரிவித்து விட வேண்டும். விசைத்தறியில் நமக்கு நம்பிக்கை கிடையாது. அதனால் கைத்தறி பாதிக்கப்படும். கைத்தறியாளர்கள் அபாயத்துக்கு உள்ளாவார்கள். ஆகையால் இந்த ராஜ்ய சர்க்கார் விசைத்தறியை புகுத்துவதற்கு ஒரு போதும் உடன்படாது என்று திட்ட வட்டமாக மிகத் தெளிவாக வரையறுத்து வாக்குறுதி கொடுத்தால்தான், கைத்தறியாளர்கள் மனதிலே நம்பிக்கை பிறக்கும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக விலைவாசிகளின் கொடுமையைப்பற்றி குறிப்பிடவேண்டும். விலைவாசிகள் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போகின்றன. விலைவாசிகளை சமனப் படுத்துவதற்கு இந்த ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரின் ஒத்துழைப்போடு தேவையான முயற்சிகளை எடுத்துக்கொள்ளுவதற்கு முற்பட வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பண்டங்களுக்கு அவர்களுடைய உற்பத்திச் செலவுக்குக் கட்டுபடியாகக்கூடிய அளவிலே அவர்களுக்கு விலைவாசிகள் கிடைக்கவுமில்லை. விலைவாசிகளின் ஏற்றத்தின் பலனை அனுபவிப்பவர்கள் விவசாயிகள் அல்ல என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்ட விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு கட்டுபடியான விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே நேரத்திலே விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து விவசாயிகளுக்கு தக்க விலை கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கத்திற்கு சிறிது காலம் பிடிக்கலாம். இந்த இடைக்காலத்தில் விலைவாசி ஏற்றத்திற்கு உகந்த அளவில் தொழிலாளர்களுக்கு கிராக்கிப் படியை உயர்த்தித் தர ராஜ்ய சர்க்கார் முன் வர வேண்டும். ஆங்காங்கு இதற்கான கிளர்ச்சிகளை தொழிலாளர்கள் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த கிளர்ச்சிகளெல்லாம் ராஜ்ய ரீதியான ஒரு பெரிய போராட்டமாக ஆன பிறகுதான் அதைக் கவனிக்க வேண்டுமென்ற கொள்கையை விடுத்து, அதற்குப் பதிலாக தொழிலாளர்களுடைய கிராக்கிப் படியை உயர்த்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டு மென்று நான் கோருகிறேன.

10th February 1958] [Sri P. S. Chinnadurai]

மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, மின்சார போர்டுக்கு ஆலோசனை போர்டு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனைப் போர்டிலே தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் மின்சாரத் தொழிலாளர்கள் மத்தியிலே போதிய பிரதி நிதித்துவ அந்தஸ்து படைத்தவர் அல்ல என்ற அபிப்பிராயம் பலமாக இந்த ராஜ்யத்தில் உள்ள சுமார் 40,000 மின்விசைத் தொழிலாளர்கள் மத்தியிலே நிலவி வருகிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்பு கிறேன். இதனை இந்த ராஜ்ய சர்க்கார் கவனிக்கத் தவறக்கூடாது. இப் பொழுது நியமிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர் பிரதிநிதி மதிப்பிற் குரிய தோழர் ஆர். கோபால் அவர்கள் தனிப்பட்ட முறையிலே அந்தஸ்து படைத்தவராயிருக்கலாம். அது பற்றி நமக்கு கவலையில்லை. அவர் மின்சார இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்களுடைய ஆத ரவையும், பிரதிநிதித்துவ அந்தஸ்தையும், நம்பிக்கையையும் பெற்றவராக இருக்கவேண்டும். ஆகையால் இப்பொழுது செய்யப்பட்டிருக்கிற நிய மனம் ரத்து செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக மின்விசைத் தொழிலாளர் களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்று நான் கூறினால் அதில் தவறு ஒன்று மில்லை. அதை அரசாங்கம் வேறு நோக்கத்தோடு பார்க்கக்கூடாது என்று வேண்டிக் கொள்ளுகிறேன். நாம் இப்படிச் செய்து விட்டோமே, என்ன செய்வது? என்று எண்ணிப்பார்க்க வேண்டாம். செய்த காரியத்தில் எந்த வகையிலாவது உண்மையாகவே குற்றம் இருக்குமானால் நிச்சய மாக அதனை திருத்திக் கொள்ளுவதற்கு ஜனநாயக பண்பாட்டு முறை யிலே இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்மென்பதுதான் என்னு டைய கோரிக்கை. அவ்வாறு செய்வதற்கு முன் வருவார்களேயானால், ஜனநாயக சம்பிரதாயத்தை அவர்கள் வளர்ப்பவர்கள் ஆவார்கள் என்று நான் கருதுகிறேன்.

கடைசியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தின் நிர்வாகம் ஜனநாயக ரீதியிலே நடைபெறவேண்டும், ஜனநாயக சம்பிரதாயங்கள் வளர் க்கப்பட வேண்டும், நல்ல ஒரு அரசாங்கம் அமையவேண்டும் என்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன். இந்த சர்க்காரின் கொள்கை யிலே எனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், அவர்களுடைய திட்டங் களிலே எனக்கு நம்பிக்கை இல்லா விட்டாலும், 4 ஆண்டுகளுக்கு எப்படி யும் அவர்கள் தான் ஆட்சி புரிவார்கள் என்று தீர்மானம் ஆகிவிட்டதால், நிச்சயமாக அவர்களுக்கு நான் ஆதரவு அளிப்பதற்கு, ஒத்துழைப்பு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன். சிறு சேமிப்புத் திட்டத்திற்கு எல்லோரும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்று அரசாங்கம் வேண்டு கோள் விடுத்ததின் பேரில், தொழிலாளர்களுக்கு அவ்வாறு வேண்டு கோள் விடுப்பதற்கு நான் முன் வந்தேன். சிறு சேமிப்புத் திட்டத்தை அமல் நடத்துவதில் ஆங்காங்கு நிர்ப்பந்த உணர்ச்சி தலைகாட்டுவதாக ஒரு குற்றச்சாட்டு இல்லாமல் இல்லை. அதற்குரிய முழு பொறுப்பும் அதிகாரிகளையே சார்ந்து விட்டது என்று நான் கூற முடியாது. ஏனென் றால், அந்த அதிகாரிகள், கிராமாதிகாரிகளாக இருந்தாலும் சரி, மற்ற அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பழைய பந்தாவிலேயே வளர்ந்து வந்தவர்கள். சிறு சேமிப்புத் திட்டம் நாட்டிற்கு நல்லது என்று கருதி, அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு எல்லா அரசியல் கட்சியினரும், பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் அத்தனை பேர்களும் முன் வந்திருப்பார்களேயானால், அதிகாரிகளுடைய பழைய பந்தாவின் மூலம் ஏற்படும் நிர்ப்பந்தத்திற்கு இடமே இருந்திருக்காது. அதில் தவறி விட்டதன் காரணத்தினால்தான் அதிகாரிகளின் பழைய பந்தாவின் மூலம் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சிறு சேமிப்புத் திட்டமானாலும் சரி, இன்னும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எல்லாக் காரியங்களிலும் சரி, இந்த ராஜ்ய சர்க்கார் எல்லா அரசியல் கட்சியினருடையவும், ஜனநாயக பண்பாடு பெற்றவர்களுடையவும் ஆதரவை பெறுவதற்கு முன் வரவேண்டும். ஏதோ சட்ட ரீதியான அமைப்பிலே ஒரு கட்சி அரசாங்கம் வந்துவிட்டது என்ற காரணத்தி னாலே அந்தக் கட்சிதான் அரசாங்கத்தை நடத்துகிறது என்று நினைத்துக்

கொண்டு, அதே பாணியிலே மற்ற கட்சிகளையும் உதாசீனம் செய்ய வேண்டியது அவசியமில்லை. காரியங்கள் அனைத்தையும் செய்ய வேண்டியது ஒரு கட்சியின் பொறுப்பு என்றும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். மற்றவர்களும் அம்மாதிரி நினைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த முறையை அனுசரித்து எல்லோருடைய ஒத்துழைப்போடு இந்த ராஜ்யத்தின் நிர்வாகத்தை நடத்துவதற்கு சர்க்கார் முன்வரவேண்டும்மென்று வேண்டிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri A. MARIAPPAN : கனம் சபா நாயகர் அவர்களே, நமது மாகாண கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்பதுடன், அவர் இந்த நாட்டின் விடுதலை போராட்டத்தில் ஒரு சோல்ஜராக இருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தவர் என்ற முறையிலே, விடுதலைப் போராட்டம் தேசிய ஒற்றுமைக்கு அடி கோலியது என்று கூறியிருப்பது வரவேற்கத் தக்கது. அதே நேரத்திலே நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் நாட்டுப் பிரிவினைப் பற்றி ஆங்காங்கு பேசப்பட்டு வருகிறது. நாட்டுப் பிரிவினையைப் பற்றி பேசக்கூடியவர்கள் இந்தத் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தின்பொழுது விடுதலைக்கு விரோதமாக இருந்தவர்கள். நாட்டுப் பிரிவினைக்கு மக்களிடையே ஆதரவு இல்லை என்பதோடு, நாட்டு விடுதலைக்கு விரோதமாக இருந்தவர்கள் அம்மாதிரி பேசுகிறார்கள் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் கைத்தறி நெசவாளர்களைப்பற்றி குறிப்பிடாதது ஓரளவு வருந்தத்தக்கதுதான். இருந்த போதிலும், இந்த ராஜ்ய சர்க்காரைப் பொறுத்த வரையிலும், தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கு வழி வகைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு, குறிப்பாக தொழில் இலாகா மந்திரி அவர்கள் ரிபேட்டை 9 நயா பைசாவிலிருந்து 6 நயா பைசாவாக மத்திய சர்க்கார் குறைத்ததைக் குறித்து நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை காலாகாலத்தில் மத்திய சர்க்காருக்கு எடுத்து உரைத்ததை பாராட்டுவதோடு, அது உடனடியாக கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்வார்கள் என்று நம்புகிறேன். கூட்டுறவு இயக்க ஸ்தாபனங்களில் மட்டும் 3 கோடி ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகள் கிடைக்கின்றன. கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அவைகளை விற்பனை செய்வதற்கு உடனடியாக சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். தேங்கிக் கிடக்கும் துணியை வாங்குவதற்கு உதவி செய்வதில் கவனம் செலுத்தாமல் இருப்பது ஓரளவு வருந்தத் தக்கது தான். கைத்தறி நெசவாளர்களின் பிரச்னை மிகவும் முக்கியமானது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பீடித் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாப்பதற்கு ஒரு மசோதா கொண்டு வரப்படும் என்று கவர்னர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது மிகவும் வரவேற்கத்தக்கது. பீடித் தொழிலாளர்களின் நிலைமை பல ஜில்லாக்களில் மோசமாக இருக்கிறது. ஆகையினால் அவர்களுக்காக ஒரு சட்டம் கொண்டுவரப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது.

11-30 a.m. மதுவிலக்கு சம்பந்தமாகவும் தீவிரமான சட்டம் வரும் என்று கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். மது விலக்குச் சட்டத்தை வெகு தீவிரமான முறையில் நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டத்தில் இம்மாகாணம் இப்பொழுது இருக்கிறது. மதுவிலக்குச் சட்டம் மூலமாக இன்னும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய தவசியமாக இருக்கிறது. இன்னும் கடுமையான தண்டனை கொடுக்க இந்தச் சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொண்டு வருவதற்கு இந்தச் சர்க்கார் முன்வந்ததற்கு நான் பாராட்டுகிறேன்.

சிறு சேமிப்பு இயக்கத்தைப் பற்றி அங்கங்கே எல்லா ஜில்லாவிலும் குறிப்பாக சேலம் ஜில்லாவிலும் நல்ல முறையில் வசூல் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். சர்க்கார் எதிர்பார்த்த அளவுக்கு வசூலாகி இருக்கிறது. அதுவும் நல்ல முறையில் வசூலிக்கப்பட்டிருக்

10th February 1958] [Sri A. Mariappan]

கிறது. ஆனால் பல இடங்களில் அப்படி வசூலிக்கும்போது கட்டாயப் படுத்தி வசூலிக்கப்பட்டதாக பல புகார்கள் வந்துக்கொண்டிருக்கின்றன. அதற்கு ஆதாரமே கிடையாது என்பது என்னுடைய அபிப்பிராயம். சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் அப்படிக் கட்டாயப்படுத்தி வசூல் செய்யவில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். சேலம் ஜில்லாவில் இந்த இயக்கம் நல்லமுறையில் பயன் அளித்திருக்கிறது. ஆனால் மாற்றுக் கட்சிகள் இதற்கு எதிராக பலவந்தப்படுத்தி வசூல் செய்யப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வதில் நியாயம் இல்லை. அவர்கள் இன்னும் பல இடங்களில் இந்த இயக்கத்திற்கு பணம் கொடுக்கவே கூடாது என்றுகூட சொல்லி வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட தவறான போக்கில் அவர்கள் போகக்கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப் போவதும் சரியல்ல. சர்க்கார் கொண்டு வந்திருக்கும் திட்டங்களை இந்த சிறு சேமிப்பு திட்டத் தின் மூலமாக வசூல் செய்யப்படும் பணத்தைக் கொண்டு பல வேலைகளை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த சிறு சேமிப்புத் திட்டத்திற்கு மக்கள் எல்லோரும் உதவ முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சாரம் சம்பந்தப்பட்ட மட்டில் சேலம் ஜில்லாவில் சரியானபடி நடைபெறவில்லை. சுமார் ஆயிரம் கிராமங்களுக்கு சர்க்கார் மின்சாரம் சப்ளை செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதைக் கண்டு பெருமையும் படவேண்டியதாக இருக்கிறது. அது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் கூட சேலம் ஜில்லா பொறுத்த வரையில் அங்கு நல்ல பயன் அடையவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதற்கு காரணம் அங்குள்ள மின்சார சப்ளை கம்பெனி தான். அவர்கள் தங்களுடைய வேலையை சரியாகச் செய்யவில்லை. ஒன்று சர்க்கார் அவர்களுடைய வேலையை எடுத்து நடத்த வேண்டும் அல்லது அவர்களைக் கொண்டே மின்சாரத்தை நல்ல முறையில் சப்ளை செய்யும் படி சொல்ல வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி துணிகளுக்கு ரிபேட் கொடுக்கும் விஷயமாக குறிப்பிடும்போது நமது மாகாணத்தில் கைத்தறி துணிகளுக்கு ரிபேட் கொடுப்பதை எல்லோரும் ஒருமுகமாக ஆதரிக்கிறார்கள். தற்போது அப் படி ரிபேட் கொடுப்பதை ஒன்பது நயா பைசாவிலிருந்து ஆறு பைசாவிற்குக் குறைத்துவிட்டார்கள். அது கூடாதுஎன்று பலர் பல கூட்டங்கள் மூலமாக தெரியப்படுத்தி இருக்கிறார்கள். அதற்கும் இந்த மா காண சர்க்கார் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்கார் கொடுத்து வரும் ரிபேட்டைக் குறைக்காமல் இருப்பதற்கு இந்த மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று நான் இந்தச் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நமது நேருஜி அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபோது சென்னை மாகாணத்திற்கு அதிலும் சென்னைக்கு வந்தபோது பல சம்ப வங்கள் நடைபெற்றன. அதையெல்லாம் நாம் நல்ல முறையில் கண்டிக்க வில்லை. நமது மாபெரும் தலைவர் வந்தபோது ஒரு சில காலிகள் சில அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரில் பல அசம்பாவிதமான காரியங் களில் ஈடுபட்டார்கள். நமது தலைவர் வந்தபோது நமது மாகாணத்தி லுள்ள சில மக்கள் தவறான முறையில் நடந்து கொண்டார்கள். அவர்களை நல்ல முறையில் கண்டிக்காமல் இருந்ததோடு அவர்களுக்கு தூண்டுதலாக இருந்தவர்களின் பேரிலும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தது. இப்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தால் நிலைமை மோசமாகிவிடும் என்பதை சர்க்காருக்கு நான் எச்சரிக்கையாகச் சொல்லுகிறேன். குறிப்பாக சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் பல தெருக்களில் கூட தவறான போக்கில் திராவிட முன்னேற்றக் கழகத்த வர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். தெருக்களில் பிராமணர்கள் விஷய மாக மிகவும் கேவலமான முறையில் நடந்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போன்ற பல துறைகளிலும் அவர்கள் நடந்துக்கொண்டிருக்கிறார் கள். அதை தீவிரமாக அடக்குவதற்கு சர்க்கார் முன் வரவேண்டும்.

[Sri A. Mariappan] [10th February 1958

ஏதோ அவர்கள் திருந்தி விடுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருப்ப தால் அவர்கள் தங்களுடைய கொள்கைகளை அப்படியேதான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் திருந்தப்போவது இல்லை. பல காலிகளை வைத்துக் கொண்டு மிகவும் மோசமான நிலைமையில் அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். பல பிராமணர்களை கேவலமான முறை யில் பேசுகிறார்கள். அவர்களையெல்லாம் திருத்துவது சர்க்காருடைய கட மையாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்த வரைக்கும் உணவு தானியங்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் பற்றிய விவரம் வரப்போகும் பட்ஜெட் அறிக்கையில் எதிர் பார்க்கிறேன். வரப்போகும் பட்ஜெட்டில் அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தால் நலமாக இருக்கும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நாட்டில் நடக்கக் கூடிய கொலை முதலியவைகள் அல்லது காலித்தனமான நடவடிக்கைகள் எல்லாம் தினத்தந்தி போன்ற பத்திரிகைகளினால்தான் ஏற்படுகின்றன. இம்மாதிரியான தினத்தந்தி போன்ற பத்திரிகைகள் நகரங்களில் கேவலமான முறையில் . . .

Mr. SPEAKER : நீங்கள் பத்திரிகைகளைப் பற்றி சொன்னால் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஆனால் அதற்கு கனம் அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியாது. ஆகவே மொத்தமாக பத்திரிகை களைப்பற்றி சொல்லலாமே தவிர குறிப்பிட்டு சொல்லக்கூடாது, சொல்ல வேண டாம் என்றும் சொல்லுகிறேன்.

Sri A. MARIAPPAN : தினத்தந்தியைப் பற்றி நான் குறிப்பாக சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் மொத்தமாக பொதுவாகச் சொன்னால் அது எல்லா பத்திரிகைகளுக்கும் பொருத்தமாகி விடும் என்பதற்காகத் தான் பொதுவாக சொன்னால் எல்லா பத்திரிகை களும் தவறாக நடந்து கொள்ளுகின்றன என்று பொருள்பட்டு விடும். இருந்தாலும் நான் இனிமேல் குறிப்பாக சொல்லவில்லை. இப்பொழுது குறிப்பிட்டு பேசியதற்கு வருந்துகிறேன். இப்படி சில பத்திரிகைகள் தவறு தலாக நடந்துகொண்டு வருவதால்தான் நாட்டில் கொலைகள் நடந்து வருகின்றன. சில குறிப்பிட்ட பத்திரிகைகள் வெளியிடும் மோசமான செய்திகளால்தான் இம்மாதிரி தவறான நடவடிக்கைகளுக்கு ஏதுவாக இருக்கிறது. நாட்டில் மக்கள் நலமாக வாழ வேண்டும், மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், மக்கள் நல்ல முறையில் வாழ வேண் டும், வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று எல்லோரும் பேசும்போது இப்படிப் பத்திரிகைகள் இப்படிப்பட்ட செய்திகளை அதாவது மோசமான செய்திகளைப் பிரசுரிப்பதால் தான் காலிகள் அதைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள். இந்த நிலைமையில் நாட் டிலுள்ள பத்திரிகைகள் போய்க்கொண்டிருக்கக் கூடாது. இப்படிப்பட்ட முறையில் பத்திரிகைகள் போய்க்கொண்டிருந்தால் நாட்டில் மக்கள் எப் படி நல்ல முறையில் தங்களது வாழ்க்கையை நடத்த முடியும்? எப்படி நாட்டு மக்கள் முன்னேற்றமடைய முடியும்? மக்களுடைய தரங்கள் முன்னேற முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

பொதுப்படையாக நான் நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தமாக நமது ராஜ்ய சர்க்கார் செய்து வரக்கூடிய வேலைகள், பல காரியங்கள் முதலியவைகளைப் பாராட்ட வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் ரிபேட்டை குறைக்காமல் ஒன்பது நயா பைசாகவே இருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளு கிறேன்.

Sri A. GOVINDASAMY : கனம் தலைவர் அவர்களே, கவர்னருடைய பேருரைக்கு நன்றி செலுத்துகின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது

10th February 1958] [Sri A. Govindasamy]

பேசினரா அல்லது எங்கள் கட்சித்தலைவர் விட்ட அறிக்கையின் மீது பேசினரா என்பது தெரியவில்லை. அவர் பேசியது எல்லாம் எங்கள் கட்சி தலைவர் விடுத்த அறிக்கையின் மீது பேசியதாகத்தான் பொருள்பட்டது. அந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைமை அவருடைய கவனத்தை இழுத்திருக்கிறது என்பதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். கவர்னர் அவர்கள் வடநாட்டுக்காரர் என்ற காரணத்திற்காக நாங்கள் வராமல் இல்லை. எங்களுடைய கருத்து என்ன வென்ருல் கவர்னர் அவர்களுடைய பதவி வேண்டியதில்லை, அந்த நிலைமை வேண்டியதில்லை, அதற்காக ஒன்பது லட்சம் ரூபாய் ஆண்டு தோறும் செலவிடப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகத்தான் நாங்கள் வரவில்லை. அதைக் கண்டிக்கும் முறையில்தான் நாங்கள் வரவில்லையே யொழிய மேன்மை தங்கிய மேதி மீது எங்களுக்கு தனிப்பட்ட முறையில் வருத்தம் கிடையாது. இப்படித்தான் அந்த அறிக்கையின் மூலம் தெளிவாக வெளியிடப்பட்டிருக்கிறது. எங்களுக்கு கனம் மேதியின் மீது தனிப்பட்ட முறையில் வருத்தம் கிடையாது.

ஆட்சி மொழியைப்பற்றி கனம் நண்பர் சின்னதுரை அவர்கள் கிளப்பி இருக்கிருர். அதைப்பற்றி நமது நிதி மந்திரி அவர்கள் தெளிவாக பதில் சொல்லுவார் என்று நினைக்கிறேன். கனம் நிதி மந்திரி அவர்களுக்கு நண்பர் பக்க பலமாக இருந்துகொண்டு பேசியிருக்கிருர்கள். எங்கள் கட்சி தலைவர் 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதைப் பற்றி தான் சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கு சம்மதம் தெரிவித்திருக்கிருர். ஹிந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமா அல்லது இல்லையா என்பதைப் பற்றி பிரச்னை இல்லை. 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று தான் கூடினர்கள். அதைப்பற்றி எங்கள் கட்சி தலைவர் பேசும்போது அதைப்பற்றி தெளிவாக பதில் சொல்லுவார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நானும் சரியானபடி பதில் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

* SRI A. GOVINDASAMY : எங்கள் கட்சி தலைவரும் கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலையும் எதிர் பார்க்கிருர். சர்க்கார் விடுத்துள்ள அறிக்கை சர்வ கட்சிகளையும் கேட்டு விடுத்துள்ள அறிக்கை இல்லை. அது நமது சர்க்காரால் தயாரிக்கப்பட்ட அறிக்கைதான். சர்க்காருடைய கருத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை அது என்பது கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். ஹிந்திக்கு ஆதரவு கொடுக்கிற திரு. சின்னதுரை அவர்களுக்கோ நிதி அமைச்சர் திரு. சுப்ரமண்யம் அவர்களுக்கோ ஹிந்தியினல் எதுவும் ஏற்படாது. ஆனல், ஹிந்தி வருவதனல் தமிழ்நாட்டுக்குப் பல தொல்லைகள் ஏற்படும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சுருக்கமாகச் சொல்கின்றேன். 11-40 a.m

கவர்னருடைய பேருரையில், நம்முடைய மக்களின் சுதந்திரம் பறி போய் இருக்கும் நிலைமையைக் குறித்தும் போலீசார் அக்கிரமமான முறையிலே தகாத செயலில் ஈடுபட்டு பொது மக்களைப் பல தொல்லைகளுக்கு ஆளாக்கிய விஷயத்தைக் குறித்தும், அதற்காக ஒரு பொது நீதிபதி விசாரணை நடத்துகிருேம் என்று உத்தரவாதம் அளிக்காத முறையிலும் அவர்களுடைய பேச்சு அமைந்திருப்பது கண்டு நான் வருந்தாமலிருப்பதற்கில்லை.

1958-ம் ஆண்டு ஜனவரி மீ 3-உ எங்கள் கட்சித் தலைவர் சென்னைக் கடற்கரையிலே ஒரு பொதுக் கூட்டத்திலே பேச வேண்டுமென்பதற்காகவும் நேரு அவர்கள் 6-1-58-ல் சென்னை வரும்போது ஏன் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்பதை விளக்கிச் சொல்லி, பொது மக்கள் அமைதியான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்பதை விளக்கிச் சொல்வதற்காகப் போடப்பட்ட கூட்டத்தை அரசாங்கம் தடுத்திருக்கிறது. கடைசி நேரம் வரையிலும், "உத்தரவு தருகிருேம், உத்தரவு தருகிருேம்" என்று சொல்லிக் கொண்டு வந்து, 2-ந் தேதி யன்று உத்தரவை மறுத்து விட்டார்கள். எங்கள் கட்சியின் நோக்கத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்

[Sri A. Govindasamy] [10th February 1958

வதற்காகப் பொதுக் கூட்டம் போடவேண்டுமென்பதற்கு நாங்கள் ன் கூட்டியே அனுமதி கேட்டும், மறுக்கப்பட்ட காரணத்தால், இரண்டு ஆண்டு களுக்கு முன்பே நாங்கள் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தை யொட்டி பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அண்ணு அவர்களும், எனது மதிப்பிற்குரிய நண்பர் ஆசைத்தம்பி அவர்களும், பாராளுமன்ற உறுப் பினர் திரு. சம்பத், எம்.பி., அவர்களும், இரா. செழியன், எம்.ஏ., அவர்களும் மற்றவர்களும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களோடு பின் சென்ற திரு. கருணாநிதி, திரு. எம். பி. ஆர். தருமலிங்கம், எம்.பி., அவர்களேயும் அரசாங்கம் சிறைபடுத்தியிருக்கிறது. இந்த முறையில் பேச் சுரிமை தடைப்பட்டிருக்கிறது. எந்தப் பேச்சுரிமைக்காக இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்து இருப்பவர்கள் வாதாடியதாகச் சொல்லுகிறார்களோ, அவர்களே பேச்சுரிமையைத் தடை செய்திருக்கிறார்கள்.

இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்களே ஒரு காலத்தில் கறுப்புக் கொடி காட்டியிருக்க, நாங்கள் நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டச் சொன்னால், அது எப்படி தவறாகும் ? கறுப்புக் கொடி காட்டுவது என்பது ஒரு தகாத செயல் அல்ல ; சட்ட விரோதமான காரியமும் அல்ல. கறுப்புக்கொடி காட்டி, அதனாலே ஆட்சிக்கு வந்தவர்கள், அந்தக் காரியத்தை இப்பொழுது தடை செய்கிறார்கள். ஸைமன் கமிஷன் வந்த நேரத்தில் இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறார்களே அவர்கள் கறுப்புக் கொடி காட்ட வில் லேயா ? நேருவும் மற்றவர்களும் அப்படிச் செய்யவில்லையா ? என்று நான் கேட்கிறேன். அவர்கள் செய்த காரியம் மட்டும் நியாயம் உள்ள தானல், நாங்கள் கறுப்புக் கொடி காட்டுவதை ஏன் தடை செய்ய வேண்டும் ? காஷ்மீர் பிரச்சனை விஷயமாக பேசவந்த கிரகாம் அவர்கள் பம்பாய்க்கு வந்திருந்தபோது, அவருக்குக் கறுப்புக்கொடி காட்டினார்கள். அதற்குப் போலீசாரும் பாதுகாப்பு கொடுத்திருந்தது. அமைதியான முறையிலே அந்த நடவடிக்கைக்கு உதவி செய்திருக்கிறார்கள் பம்பாயில். ஆனல், இங்கு நடந்தது என்ன ? மூன்றாந் தேதி கடற்கரைக் கூட்டத் திலே பேசவிருந்த தலைவர்கள் பேச முடியாதபடி கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்குத் தெரியும். ஆனல், இந்தச் செய்தி பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அறிவிக்கப் படாத காரணத்தால், கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் ஒருபுறமிருக்க, கடற்கரையில் காற்று வாங்க வந்த போது மக்கள் மீதும், வயது வந்தவர் கள் மீதும், பெண்கள் மீதும், மாணவர்கள் மீதும், உத்தியோகஸ்தர்கள் மீதும், போலீஸ் அக்கிரமமாகத் தடி கொண்டு தாக்கியிருக்கிறார்கள். தமிழ் மொழி தெரியாத ஆந்திரப் போலீசார், "கொட்டா, கொட்டா" என்று அடித்திருக்கிறார்கள். அதுவும், மிகவும் மோசமான முறையில் அடித்திருக்கிறார்கள். மணி பர்ஸையும் இழந்து, நகை நட்டுகளேயும் இழந்து, துணி மணிகளேயும் இழந்து மக்கள் ஓடவேண்டிய நிலை ஜனவரி 3-ந் தேதியன்று சென்னை கடற்கரையில் ஏற்பட்டது.

ஜனவரி 6-ந் தேதி கறுப்புக் கொடி காட்டினார்கள். 6-ந் தேதி கறுப்புக் கொடி காட்டிய நேரத்தில், அமைதியான முறையில் கறுப்புக் கொடி காட்டி முடிந்துவிட்ட பிறகு, மக்கள் கலைந்து செல்லும்போது மக் களே வழி மறித்து, கண்ணீர் புகைவிட்டு அவர்கள் ஓடமுடியாத நிலையிலே பொது மக்களை தடி கொண்டு போலீசார் தாக்கி யிருக்கிறார்கள். மலபார் போலீசாரும், ஆந்திரா போலீசாரும், தமிழ் தெரிந்திராத காரணத்தால், ரொம்ப மோசமான முறையிலே மக்களை அடித்திருக்கிறார்கள். ரத்த ஆறு ஓடியது. அடிபட்ட மக்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் சிகிச்சை செய்வதற்கும் இந்த அரசாங்கம் உதவி செய்யவில்லை. நேரு மவுண்டு ரோடு வழியாக வருவார் என்று எதிர்பார்த்து நின்றுகொண் டிருந்த மக்களைத் தடி கொண்டு தாக்கியிருக்கிறார்கள். கண்ணீர்ப் புகை வீசியிருக்கிறார்கள். அதனல் இரண்டு தோழர்கள் மடிந்திருக்கிறார்கள். மொய்தீன் பிச்சை என்பவரும், கோவிந்தராவ் என்பவரும் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் இன்றைக்குத் தத்தளிக் கும்படியாக போலீசார் அன்று நடந்துகொண்டிருக்கிறார்கள். அதுபற்றி நீதிபதி விசாரணை வேண்டாமா ? இதைக் கேட்க எங்களுக்கு உரிமை இல்லையா ? என்று நான் கேட்கிறேன்.

10th February 1958] [Sri A. Govindasamy]

நேரு அவர்கள் துடுக்குத்தனமாகப் பேசியதால் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது தவரு ? தேசியத் தலைவர்களை, திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களையும், திரு. வி. பி. ராமசாமி அய்யர் அவர்களையும், பெரியார் அவர்களையும், திரு. பி. டி. ராஜன் அவர்களையும், திரு. ரத்னசாமி அவர்களையும், மிர்சா சாகிப் அவர்களையும் நேரு தாக்கிப் பேசினுர். அவர்களெல்லோரும் தேசிய சொத்து அல்லவா ? இந்த நாட்டுக்கு உரியவர்கள் அல்லவா ? ஒப்பற்ற தலைவர்கள் அல்லவா ? எங்களுக்கும் அவர்களுக்கும் கருத்து வேறுபாடும், அபிப்பிராய பேதமும் இருந்தாலும், அவர்களைப்பற்றி துடுக்குத்தனமாகப் பேசினுல், அதைக் கண்டிக்க உரிமை இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: திட்டுவதற்குமா உரிமை இருக்கிறது?

SRI A. GOVINDASAMY : அதை எதிர்த்துக் கறுப்புக்கொடி காட்ட உரிமை இருக்கிறது. கறுப்புக் கொடி காட்டுவோமே அல்லாது வேறு ஒன்றும் இல்லை. கறுப்புக் கொடி பார்த்த பிறகு பதட்டமாகப் பேசியதனுல் தான் நேரு வாய் மூடி மௌனியாகத் திரும்பிச் சென்றுர். தவறை ஒத்துக் கொள்ளுகிற முறையிலே மௌனமாக வீடு திரும்பி யிருக்கிறுர்கள்.

ஜனவரி 6-ந் தேதி அன்றே காக்ஸ் சேரியிலுள்ள ஆதித்திராவிட மக்களை—எந்த ஆதித்திராவிட மக்களுக்காக இருக்கிறேம் என்று சொல்லுகிறுர்களோ, அந்த மக்களை—அடித்திருக்கிறுர்கள். ஆறுந் தேதி இரவு 1-30 மணிக்கு அவர்களுடைய வீடு புகுந்து அடித்திருக்கிறுர்கள். தாய்மார்களை அடித்திருக்கிறுர்கள். தவருன முறையில் அடித்திருக்கிறுர்கள். இதைப் பார்த்து மக்கள் இந்த அரசாங்கத்தை எவ்வளவு மோசமாகக் கருதுவார்கள் ? இந்த நாட்டினுடைய அந்தஸ்து எவ்வளவு குறைந்து விட்டது என்று நினைப்பார்கள்? அதற்காக நீதி விசாரணை வேண்டுமென்ற திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

1,922 இடங்களிலே தமிழ் ஆட்சி மொழியாக வந்துவிட்டது என்று பெருமை கொள்ளுகிறுர்கள். அது பெருமைக்குரிய காரியம் அல்ல. அது முன் கூட்டியே செய்ய வேண்டிய காரியம். தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லாமல் வேறு என்ன இருக்கமுடியும் ? ஆனுல், தமிழ் என்பது சுத்த தமிழாக நல்லத் தமிழாக ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தின் மூலமாக ஆட்சி நடக்கக்கூடிய இடங்களிலெல்லாம் தமிழின் மூலமாகவே ஆட்சி நடக்கும்படியாகச் ஆட்சியாளர்கள் செய்ய வேண்டும்.

ஆந்திரா-தமிழ் எல்லைப் பிரச்னையைப்பற்றி கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறுர்கள். ஆரணியாறு திட்டம் பறிபோயிருக்கிறது. அதைப்பற்றி என்ன சொல்லுகிறது இந்தச சர்க்கார் ? செங்கற்பட்டு ஜில்லாவில் சில பகுதிகள் பறி போயிருக்கின்றன. அவைகளை நாம் அடைந்தாகவேண்டும். அது தகராறுக்கு உரிய பிரச்னையாக இல்லாதபோதினும் படாஸ்கர் தீர்ப்பு கூறி அதை எடுத்திருக்கிறுர்கள். அதைக் கண்டிக்கிறேம். அதற்காகப் போலீஸ் அமைச்சர் அவர்கள் பாடுபடக் கடமைப் பட்டிருக்கிறுர்கள்.

ஜில்லா போர்டை ஒழித்து பஞ்சாயத்தை நிறுவத் திட்டம் இட்டிருக்கிறேம் என்று சொல்லுகிறுர்கள்.. பல்வந்த்ராய் மேத்தா அகில இந்தியா முழுவதுக்கும் திட்டம் தயாரித்திருக்கிறுர். அப்படியிருக்க நம்முடைய மாநிலத்திலே உள்ள ஜில்லா போர்டுகளை மட்டும் ஒழிக்கக் காரணம் என்ன? பம்பாய் மாநிலத்திலே ஜில்லா போர்டுகள் இருக்க, ஒரிஸ்ஸா மாநிலத்தில் ஜில்லா போர்டுகள் இருக்க, ஏன் சென்னை மாநிலத்தில் மட்டும் ஜில்லா போர்டுகளை ஒழித்தார்கள் ? குன்னியூர் சாம்பசிவ அய்யர், சிங்கராயர், கேசவ ரெட்டியார்களிடமிருந்து ஜில்லா போர்டு நிர்வாகத்தைப் பிறகு கைப்பற்ற முடியாது என்ற அதைரியத்தினுல் இப்படிச் செய்தார்களா என்று சந்தேகப்படும் படியான நிலைமை இருக்கிறது.

பருவ நிலை சரியாக இருக்கிறது என்று சொல்கிறுர்கள். அப்படிப் பருவ நிலை சரியாக இருந்திருந்தால் உற்பத்தி குறைந்திருக்காது. எங்கள் பகுதி சாவியாகப் போய்விட்டது. பெண்ணையாறு பாசனப் பகுதியின் நிலைமை எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அதைப்பற்றி யெல்லாம் ஒரு வார்த்தை இல்லை.

[Sri A. Govindasamy] [10th February 1958

உற்பத்தி அதிகரிக்கப் போகிற காரணத்தால் நியாய விலைக் கடைகளை மூடிவிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளை நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஏன் இருக்கக்கூடாது ? அரிசி விலை ஏறியிருக்கும் வரையிலும் நியாய விலைக் கடைகள் இருந்துதான் தீரவேண்டும். தென்னாட்டில் உற்பத்திப் பெருக்குக்கான திட்டங்களைத் திட்டவில்லை. அப்படியிருக்க " வட நாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது " என்று நாங்கள் சொன்னால் அதில் என்ன தவறு இருக்கிறது ? அங்கே போடப்பட்டிருக்கும் திட்டங்களெல்லாம் பெரிய பெரிய திட்டங்களாக இருக்கின்றன. இங்கே போடப்பட்டிருக்கும் திட்டங்கள் சிறிய திட்டங்களாக இருப்பதோடு பிரதிப் பலனும் இல்லாமலும், தீமை அதிகமாகவும் இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM : திட்டங்களினால் தீமை வந்து விட்டது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டாம்.

***Sri A. GOVINDASAMY** : சாத்தனூர் திட்டத்தினால் 19,000 ஏக்கராக்கள் நன்மை அடையும் என்று சொன்னார்கள். சந்தோஷப்படுவோம். வரவேற்போம். ஆனால், அதற்குக் கீழ் உள்ள திருக்கோவிலூர், எலிச் சத்திரம் அணைகளில் தண்ணீர் குறைந்து, எங்கள் பகுதியில் 40 ஆயிரம் ஏக்கரா வரையில் சாவி ஆய்விட்டது. அதைப்பற்றித் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். மந்திரியிடம் மகஜரும் கொடுத்திருக்கிறேன். விவசாய மந்திரி அவர்கள் நேரில் வந்தபோது ஏரி வறண்டிருக்கும் காட்சியை அவர் பார்க்க முடியவில்லை. காரணம், கால் சற்று ஊனமாக இருந்தது. " ஏறிப் பார்க்க முடியவில்லை ; நீங்கள் சொல்லுங்கள் " என்று சொன்னார்கள். அதனால் ஏற்பட்டிருக்கும் நிலைமையை வருத்தத்தோடு கஷ்டப்பட்டு, கண்ணீர் விட்டுச் சொல்கிறோம். எழுவது கிராமங்கள் சாவியாய்ப் போய் விட்டன. அதற்கு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவில்லை. சாவியாய்ப் போன அந்தப் பகுதியில் வரி வஜா செய்யப்பட வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை மூன்று ஆண்டுகள் கழித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு ரூபாய் 300 நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். எங்களுக்கு நியாயமான தண்ணீரை விடவேண்டும்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது ? உச்ச வரம்பு கட்டுகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது வேறுவிதமாகச் சொல்கிறார்கள். இன்னும் மேற்கொண்டு நிலங்கள் வாங்கக்கூடாதென்று சட்டங்கள் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அதிகப்படியாக நிலம் வைத்திருப்பவர்களுடைய நிலைமை என்ன ? யாரைக் கண்டு பயப்படுகிறார்கள். மிராசுதார்கள் பக்கம் இல்லை என்று சொன்னால், ஜமீந்தார்கள் பக்கம் இல்லை என்று சொன்னால், இந்தச் சட்டத்தை ஏன் தைரியமாக, உடனடியாகக் கொண்டுவரக்கூடாது? அந்த வகையில் சட்டம் கொண்டுவந்தால் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. ஒத்துழைக்கும் என்ற நிலைமையை நாங்கள் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

தேசீய சிறு சேமிப்பு நிதியைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. திட்டங்களுக்குப் பணம் போதவில்லை என்று சொல்லப் படுகிறது. உண்மையிலேயே திட்டங்களுக்குப் பணம் தேவைதான். ஆனால் யாரிடத்திலிருந்து பணம் வாங்க வேண்டும் ? பணம் இருக்கிறவர்களிடத்திலேயிருந்து வாங்க வேண்டும். பெரிய பெரிய மில் முதலாளிகள், பெரிய பெரிய நிலச்சுவாந்தார்கள், பெரிய பெரிய பஸ் முதலாளிகள், சினிமா கொட்டகைக்காரர்கள், போன்றவர்களிடமிருந்து ஆயிரக் கணக்கில் லட்சக் கணக்கில் பணம் வாங்குவதில் ஆட்சேபணை இல்லை. அப்படியில்லாமல், சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும், வரி கொடுப்பதற்குக் கூட முடியாமல் வாழத் தவிக்கும் கிராம மக்களிடமிருந்தும் சிறு சேமிப்பு நிதி வசூல் செய்வதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.
1-50 a.m. வசதி உள்ளவர்களிடமிருந்து பணத்தை வாங்கி, திட்டத்தை நிறைவேற்றுங்கள், திட்டம் வேண்டாம் என்று சொல்கிற கட்சி எங்களுடையது அல்ல என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். யாரிடத்தில் பணம் அதிகமாக

10th February 1958] [Sri A. Govindasamy]

இருக்கிறதோ அவர்களிடத்தில் வசூல் செய்வதற்கு இந்தச் சர்க்கார் ஏன் அஞ்சுகிறார்கள் என்று கேட்கிறேன். மற்ற வேலைகளைக் கவனிக்காமல் சர்க்கார் ஊழியர்கள் எல்லோரும் இதே வேலையாக இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில்தான் எந்த எந்த வகையில் மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமோ அந்த வகையில் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும். எஸ்டிமேட் கமிட்டி சம்பந்தமாக நாங்கள் சில எம்.எல்.ஏ. க்கள் வடநாடு சென்றபோது சாந்திகார் என்ற இடத்தில் 30 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடத்தில் 30 தொழிற்சாலைகள் இருந்தன என்பதைப் பார்த்தோம். ஆயில் என்ஜின், மாட்ச் பாக்டரி, வீவிங் பாக்டர் என்பதாக பல தொழிற்சாலைகளைக் காட்டினார்கள். எல்லாவற்றையும் எங்களால் பார்க்க முடியவில்லை. வட நாடு வாழத்தான் வாழ்கிறது. என்பதை அப்போது நன்றாகத் தெரிந்து கொண்டோம். ஸ்ரீ கருத்திருமன் அவர்களோ, தேனி தியாகராஜன் அவர்களோ இதை மறுப்பதற்கில்லை. லூதியானு என்ற இடத்தில் ஒரு தொழில் அதிபர் எங்களிடத்தில் சொன்னார்கள். "எங்கள் நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லை. அப்படி யாராவது பிச்சைக்காரர்கள் இருந்தாலும் அவர்கள் உங்கள் நாட்டிலிருந்து வந்தவர்களாகத்தான் இருப்பார்கள்" என்றார். அதைக் கேட்டு நாங்கள் வெட்கித் தலைகுனிய நேரிட்டது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டிலும் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கு இந்தச் சர்க்கார் என்ன திட்டத்தைத் தயாரித்திருக்கிறது என்று கேட்கிறேன். பிச்சைக்காரர்கள் மகாநாடு கூட்டினால் நாங்களும் வந்து தலைமை வகிக்கிறோம் என்று போகிற நிலைமையில்தான் நமது அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆதித்திராவிடர்களுக்குத்தான் என்ன செய்திருக்கிறார்கள் ? மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் எந்த விஷயமும் கவர்னர் அவர்களுடைய உரையில் காணப்படாததனால் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு, பொது நீதி விசாரணையை அமுல் நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை வற்புறுத்தி முடித்துக் கொள்கிறேன்.

* Sri M. P. PERIASAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். நமது ராஜ்ய நிர்வாகத்தைப்பற்றி ஒவ்வொரு இடமாக கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் விரிவாகச் சொல்லி இருக்கிறார்கள். ஹரிஜனங்கள் விஷயத்தைப்பற்றி அவ்வுரையில் ஒன்றும் குறிப்பிடாமல் இருந்தபோதிலும் அரசாங்கம் அவர்கள் விஷயத்தில் அக்கறையுடன் நடந்துகொண்டுதான் வருகிறார்கள் என்ற நம்பிக்கையுடன் கவர்னர் அவர்கள் உரையை ஆதரித்துப் பேச முன் வந்திருக்கிறேன்.

அதிகபட்ச நிலவரம்பு கட்டும் நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு நமது அரசாங்கத்தார் முயன்று கொண்டிருக்கிறார்கள். இனி வாங்கப்படும் நிலங்களுக்கு வரம்பு கட்டுவதோடுகூட இப்போதே ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் உள்ள மிராசுதார்களால் நிலத்தில் உழைப்பவர்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் கஷ்டங்களை நிவர்த்திக்கவும் ஏற்பாடு செய்தாகவேண்டும். அதேபோல் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு பெரிய மிராசுதார்களால் உண்டாகிக் கொண்டிருக்கும் கஷ்டங்களை நிவர்த்திக்கவும் ஏற்பாடு செய்தாகவேண்டும்.

இந்த நிலவரம்பு கட்டுவது போலவே பஸ் தொழிலிலும் ஒருவர் இத்தனை பஸ்கள்தான் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், லேவாதேவித் தொழிலில் ஒருவர் இத்தனை ரூபாய்கள் வரையில்தான் கடன் கொடுத்து வாங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்பதாகவும் கட்டுப்பாடு செய்வது அவசியமாகும். லெக்ஷக் கணக்கான நோட்டுகள் தேக்கி வைத்திருக்கும் ரூபாய் நோட்டுகளுக்கு ரப்பர் ஸ்டாம்பு குத்தி கட்டுப்பாடு செய்யலாம். ஒரு முதலாளி நாற்பது ஐம்பது பஸ்கள் வைத்துக் கொள்வதும், ஒன்றிரண்டு பஸ்கள் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு அதனால் மிகுந்த கஷ்டம் உண்டாவதும், பர்மிட்கூட வழங்க முடியாத நிலைமையில் இருப்பதும் இனி நீடிக்காதவாறு செய்ய வேண்டும். புதிய மனுதாரர்களுக்கும் பர்மிட்டு கொடுத்தும் 1-2 பஸ்காரர்களுக்கும் பர்மிட்டு கொடுக்கவேண்டும்.

[Sri M. P. Periasami] [10th February 1958

அதோடு மதுவிலக்கு விஷயமாக நமது அரசாங்கம் மும்முரமாக வேலை செய்துகொண்டு வருகிறது. அதுபற்றி புதிதாகச் சட்டம் கொண்டுவரப் போவதாகவும் சொல்லப்படுகிறது. மதுவிலக்குக் குற்றங்களுக்கு அதிகமான தண்டனை விதிப்பதாக இருந்தால்தான் இந்தக் குற்றங்களைக் குறைக்க முடியும். சில சில இடங்களில் தண்டனை வழங்கப்பட்டாலும்கூட மேல் கோர்ட்டு வரையில் சென்று குடிக்கவே இல்லை, பொய்யாக வழக்குப் போட்டிருக்கிறது என்பதாக வக்கீல்களைக்கொண்டு வாதாடி தப்பித்துக் கொள்ளவும், சில டாக்டர்களுக்கும் சாராயம் அல்ல மருந்து என்றும் அத்தாக்ஷி கொடுத்து விடுகிறார்கள். 64 வழியேற்பட்டுவிடுகிறது. நாமக்கல் தாலுக்காவில் பரமத்தி வட்டாரத்தில் முன்பு இருந்த மாஜிஸ்ட்ரேட் ஐந்து, ஆறு ரூபாய்க்குள் மதுவிலக்குக் குற்றங்களுக்குத் தண்டனை விதித்து வந்தார்கள். ஆற்றங்கரையோரங்களில் அப்போது கள்ளச்சாராயம் காய்ச்சுவது அதிகமாக இருந்தது. இப்போது வந்துள்ள மாஜிஸ்ட்ரேட் 500, 600 என்று அதிகமான தண்டனையை விதிக்கிறார் என்ற பயத்தினால் இப்போது அந்தக் குற்றங்கள் குறைந்து வருகின்றன. போலீஸ்காரர்கள் தைரியமாக கேஸ் பதிவு செய்து வருகிறார்கள். அவர்களும் தங்கள் வேலையைத் திறம்படச் செய்து வருகிறார்கள். ஆகவே அரசாங்கத்தார் நேரிடையாகவோ, அல்லது ஜட்ஜுகள் மூலமாகவோ மதுவிலக்கு குற்றங்களுக்கு அதிகமான தண்டனை அளிக்கவேண்டும் என்பதாக மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு உத்தரவு அனுப்பவேண்டும். மதுவிலக்குக் கமிட்டியில் கலெக்டரிடம் இதைப்பற்றி நாங்கள் தெரிவித்தபோது தங்களுக்கு அம்மாதிரியாகச் சொல்ல அதிகாரம் இல்லை என்று கூறி விட்டார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

மின்சார விஸ்தரிப்பு ஆயிரம் கிராமத்திற்குமேல் நடைபெற்று இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எங்கள் பக்கங்களில் எல்லாம் எழுபது அடி, எண்பது அடி ஆழத்தில்தான் தண்ணீர் கிடைக்கிறது. அங்கெல்லாம் விவசாயத்திற்கு அதிக பம்பு செட்டுகள் அமைப்பதற்கு மின்சார வசதி செய்துகொடுத்தாக வேண்டும். மேலும் ஐந்தாண்டுத் திட்டத்திலே நாமக்கல் தாலுக்காவில் குடி தண்ணீர் வசதியை மோகனூர் காவேரியில் இருந்து குழாய்கள் மூலமாகச் செய்துகொடுப்பதற்கு ஒரு திட்டம் இருந்தது. அதற்கான பணத்தையும் பஞ்சாயத்து மூலமாகச் சேகரித்துக்கொடுத்திருக்கிறோம். நாமக்கல்லோடு அந்தக் குழாய்களை நிறுத்தாமல் இன்னும் 14 மைல்கள் தள்ளி ராசிபுரம் வரையில் கொண்டுபோகும் திட்டமும் இருப்பதாக சர்க்கார் தெரிவித்தார்கள். ஆனால் குழாய் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அந்தத் திட்டம் தாமதப்பட்டுக்கொண்டு வருகிறது. உடனடியாக அரசாங்கம் தக்க ஏற்பாட்டைச் செய்து அந்தத் தாலுக்காவின் குடி தண்ணீர் கஷ்டத்தை இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலாவது நீக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஹரிஜனங்கள் விஷயமாக கவர்னர் அவர்கள் தம் உரையில் ஒன்றும் கூறாமல் இருந்தாலும் அவர்களுடைய அபிவிருத்தி விஷயமாக சர்க்கார் தக்க நடவடிக்கை தொடர்ந்து எடுத்துவரவேண்டும். வீடு கட்டும் திட்டம், நிலம் அளிக்கும் திட்டம் எல்லாம் தொடர்ந்து நடந்தாக வேண்டும். சில இடங்களில் ஹரிஜனங்களுக்கும், மேல் சாதிக்கும் சண்டையை சில பேர்கள் மூட்டிவிட்டுக்கொண்டு வருகிறார்கள். பேப்பர்கள் வாயிலாக இதைப்பற்றி அடிக்கடி பார்த்துவருகிறோம். ஹரிஜனங்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதும், வீணாக கலவரங்களில் அவர்களை சிக்கவிடாமல் செய்வதும் சர்க்காரின் பொறுப்பு. ஜாதி வித்தியாசத்தை காட்டுவதையும் ஹரிஜனங்களை கொடுமைப்படுத்தாமல் சர்க்காராவது பாதுகாக்கிறது என்ற ஒரு காரணமாக வைத்துக்கொண்டு மந்திரிகளின் மீதும் அரசாங்கத்தின் மீதும் பல புகார்களை பத்திரிகைகளில் பார்க்கிறேன். ஹரிஜன மக்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் இருக்கும் சண்டையை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, இதை பத்திரிகைகள் சுட்டிக் காட்டிக்கொண்டு வருகின்றன. இதனால் பல ஜில்லாக்களுக்கும் பரவி விடும்படி பத்திரிகையில் வெளியாகிறது. இம்மாதிரியும் சிலர் பேசியும் வருகிறார்கள். அதாவது அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தி ஹரிஜனங்களும், ஜாதி ஹிந்துக்களும் சரிசமமாக நல்ல

10th February 1958] [Sri M. P. Periasami]

முறையில் வாழ வகை செய்யவேண்டும். நான் ஒரு ஹரிஜனன் என்ற முறையில் சொல்லுவது என்னவென்றுல் ஹரிஜன மக்கள் பல கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கின்ருர்கள். ஹரிஜனங்கள் அல்லாத மற்ற ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்களுக்கு இருக்கக்கூடிய இந்த நிலேயை தாங்கள் அனுபவித்தால் அப்பொழுதுதான் ஹரிஜனங்கள் படும் கஷ்டங்களே உணர்வார்கள். எவ்வளவோ ஆண்டு காலமாக ஒரு ஹரிஜன் வேஷ்டி கட்டிக்கொண்டிருக்க முடியாது, கையில் கொடை எடுத்துக்கொண்டு போக முடியாது. காலில் செருப்பு அணிந்துகொண்டு செல்ல முடியாது. ஒரு ஹரிஜனன் இன்னெரு ஜாதி ஹிந்துவைக் தீண்டி விட்டால், அந்த ஹரிஜனனே மிகக் கேவலமாக நடத்துவார்கள். இந்த நிலேமை மாறி ஹரிஜனங்களும், ஜாதி ஹிந்துக்களும் சரி சமமாக வாழ்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும். முதுகளத்தூரில் நடந்த விஷயத்தை எல்லோரும் அறிவோம். அம்மாதிரி ஜாதி துவேஷம் இல்லாமல் பார்த்து நல்ல முறையில் நீங்கள் பழகவேண்டும். ஹரி ஜனங்களுக்கு அவசியமான வசதிகளேச் செய்து கொடுப்பதற்கு நீங்கள் வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த கவர்னர் உரைக்கு நன்றி செலுத்தும் முறையில் ஆதரித்து முடித்துக்கொள்ளு கிறேன்.

* SRIMATHI P. K. R. LAKSHIMIKANTHAM : கனம் உதவி சட்ட சபைத் தலேவர் அவர்களே, இப்பொழுது கவர்னர் பெருமான் உரைமீது நாம் பேசும்போது அவர் உரையிலே எடுத்த எடுப்பிலேயே நம் மக்க ளிடையே நல்லுணர்வு உண்டாகவேண்டுமென்று கூறும் விஷயம் அமைந்திருப்பது ஒரு போற்றத்தக்க விஷயம் ஆகும். அதாவது இந்த நாளிலே நமது சென்னே மாநிலத்திலே பல விஷயங்களில் வேறுபாடுகள் உண்டாகி ஒரு சிக்கலான நிலேமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலேமை மாற வேண்டும். இந்த நிலமை மாறுவதற்கு எல்லோ ரிடத்திலும் நல்லுணர்வு ஏற்படுத்துவதற்கான குறிப்பாக இந்தக் கருத்தை உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறது. கவர்னர் பெருமான் மேலும் பேசும்போது அஸ்ஸாம் மாகாணம் ஆனது டில்லி யிலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அந்த அஸ்ஸாம் மாகாணத்திலும் பல சிக்கலான பிரச்னேக்கு அவர் தீர்வு காணவேண்டியிருந்தது. அப்படித் தீர்வு காண முயலும்போது ஒன்றை கருத்தில் கொண்டுதான் தீர்வு கண்டோம். தேசிய ஒற்றுமை என்ற அடிப்படையில்தான் எல்லா பிரச்னேகளுக்கும் நாம் தீர்வு கண்டோம் என்றும் சொல்லுகிருர். அது போலத்தான் சென்னே மாகாணத்திலும் எழுந்திருக்கின்ற பிரச்னேயை தேசிய ஒற்றுமை என்ற அடிப்படையில் தான் நாம் அணுகவேண்டும். நாம் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உள்ளத்திலே இந்த தேசிய ஒற்றுமையை பொன் எழுத்துக்களினுல் பொறித்துக்கொள்ளவேண்டிய விஷயம் ஆகும். இந்த தேசிய ஒற்றுமையின் காரணமாகத்தான் நாம் அடிமைத் தளேயிலிருந்து விடுவிக்கப்பட்டு, சுதந்திரமாக வாழ்கின்ருேம். இந்த தேசிய ஒற்று மைக்கு ஏதாவது குந்தகம் ஏற்பட்டால் நம் சுதந்திரத்திற்குக் கேடுவரும். ஆகவே இந்த தேசிய ஒற்றுமை என்ற அடிப்படையில்தான் நாம் எந்த பிரச்னேக்கும் தீர்வுகாணுவதற்கு அணுகவேண்டும். 12 noon.

இந்த முறையிலேதான் நாம் மொழிப் பிரச்னேயை அணுகவேண்டும். அரசியல் கட்சிகளிடையே அபிப்பிராய பேதம் இருந்தாலும் அவர்கள் இந்த ஒரே ஒரு அடிப்படையின் கீழ்தான் இந்த மொழிப் பிரச்னேக்கு ஒரு தீர்வு காண முயலவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு திராவிட முன்னேற்ற கழகத்தினரும் இந்த மொழிப் பிரச்னேயில் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக இந்த நாட்டிலே தொழிற்சாலேயில் தொழில் செய்யும் பெண்கள் பிரசவகாலத்தில் அவர்களுக்கு நல்லமுறையிலே வசதி செய்து கொடுப்பதற்கான சட்டங்கள் கொண்டுவரப் போகிருர்கள் என்பதை இந்த உரையில் காண நான் பெண் என்ற முறையில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மூன்ருவதாக ஒப்பற்ற தலேவர் நேருஜி அவர்கள் இங்கு விஜயம் செய்திருந்தபோது நம் தமிழர் பண்பாட்டைப்பற்றி மிகவும்

[Srimathi P. K. R. Lakshmikantham] [10th February 1958

உன்னதமாகப் பேசுகிறவர்கள், அந்த ஒரு மாலையிலே நடந்துகொண்ட விதமானது என்போன்றோர் உள்ளத்தையும் மிகவும் புண்படுத்தியிருக்கிறது. நமது தமிழ் நாட்டின் பண்பாடானது விருந்தினருக்கு உபசரிப்பது என்பது தொன்றுதொட்ட வழக்கமாக இருந்துவருகிறது. அப்படி இருக்கும் பொழுது நமது ஒப்பற்ற தலைவர் நேருஜி அவர்கள் வந்திருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடந்துகொண்டவிதம் நம் எல்லோருடைய உள்ளத்திலேயும் வருத்தத்தை உண்டுபண்ணியது என்பதை இந்தச் சட்டசபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி சம்பந்தமாக இரண்டு, மூன்று அங்கத்தினர்கள் பேசி இருக்கிறார்கள். நம் நாட்டிலே அதிகமாக கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நமது அரசாங்கம் தகுந்த பாதுகாப்பு அளித்துவருகிறார்கள். தற்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் ரிபேட்டை குறைத்திருப்பதனால், கைத்தறி விற்பனையில் மிகவும் குறைந்து, தேக்கம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களின் எதிர்காலம் இந்த ரிபேட்டைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இதன் காரணமாக நமது நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நெசவாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணம் நமது சென்னை அரசாங்கத்திற்கு இருந்தாலும், ரிபேட் அளிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தினிடத்தில் தான் இருக்கிறது. இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண இன்னும் அதிக முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

12-10 p.m. மேலும், அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திற்கு பலவேறு திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் கூறப்படுகிறது. நமது அரசாங்கம் இப்போது மதச் சார்பற்ற அரசாங்கமாகச் செயல்பட்டு வருகிறது. அறநிலையப் பாதுகாப்புத் திருத்தச் சட்டங்களில் மத போதனையை அடிப்படையாகக் கொண்டு விதிகள் வகுக்கப்படவேண்டுமென்பது என்னுடைய ஒரு கோரிக்கை. உதாரணமாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கோயம்புத்தூருக்கு அருகாமையில் இருக்கும் பெரியநாயக்கன்பாளையத்தில் நடந்துவரும் ராமகிருஷ்ண மிஷின் பள்ளியை மனதில் கொள்ளவேண்டும். திருச்சிக்கு அருகாமையில் இருக்கும் திருப்பராய்த்துறையில் ஸ்வாமி சித்பவானந்தர் அவர்களால் நடத்தப்பட்டுவரும் பள்ளியை அனுசரித்து அறநிலைய ஸ்தாபனங்கள் இருக்கவேண்டும். அத்தகைய விதிகள் திருத்தச் சட்டத்தில் இருந்தால் அது மிகவும் போற்றத்தக்கதாகும். மனிதனை மேலோனுக்குவதற்கு உரிய உபதேசங்களெல்லாம் மதங்களில் இருக்கின்றன. உயர்ந்த லட்சியத்திற்கு வழிகாட்டக்கூடியவை, மதங்கள். ஆகையால் மதத்தைப் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கவேண்டும். வாழ்க்கையில் உயர்ந்த லட்சியத்தை அடைய வேண்டுமானால் அறநெறியில் வாழ வேண்டும். எனவே நீதிநெறியுடனும் நியாயமாகவும் வாழ வேண்டுமென்று பிரசாரம் செய்வதற்கு வகைசெய்யும்படி, அறநிலையப் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் அமைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். திருத்தச் சட்டம் அந்த முறையில் அமைந்தால் நாட்டில் இப்போதுள்ள ஒற்றுமையை குலைக்கும் மனப்பான்மை நீங்கும் என்றும் மனிதர்களின் உள்ளங்களில் அறநெறி உணர்ச்சி உண்டாகும் என்றும் நம்புகிறேன் ; அதற்கான பிரசாரத்திற்கு அறநிலைய ஸ்தாபனங்களின் பணமெல்லாம் உபயோகிக்கப்பட வேண்டும். அந்தப் பணத்தையெல்லாம் கல்விக்காகச் செலவிடவேண்டுமென்றால் நான் குறிப்பிட்ட இரண்டு பள்ளிகளை மனதில் கொள்ளவேண்டும்.

மதுவினால் நம் நாட்டில் மிகுந்த கஷ்டம் இருந்தது. மக்கள் மது அரக்கனின் வசப்படாமல் நலனுடன் வாழ வேண்டுமென்பதற்காக மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்கள் ராஜ்யத்தில் சில சில இடங்களில் நடந்துவருகின்றன. இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக பல திருத்தங்கள் இந்தச் சட்டத்திற்குக் கொண்டுவரப்படும் என்பதை கவர்னர் உரையில் காண நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

10th February 1958] [Srimathi P. K. R. Lakshmikantham]

இந்த ராஜ்யத்தில் பெண்களை பாதிக்கும் பல பிரச்னைகள் இருக்கின்றன. பல விதவைகளும் கணவனால் கைவிடப்பட்ட பல பெண்களும் வேலையற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக பல சிறு சிறு குடிசைத் தொழில்கள் இருந்தபோதிலும், அவர்கள் நன்றாக வாழ்வதற்கு வகைசெய்வதற்கான பல வசதிகளையும் சர்க்கார் செய்தாகவேண்டும். இதையும் அரசாங்கம் கவனிக்கும் என்று நான் நம்புகிறேன்.

நமது கவர்னர் பெருமானின் உரை மிகவும் போற்றத்தக்க முறையில் இருக்கிறது. தொழில்கள் சம்பந்தமாகவும் அந்த உரை உயர்ந்தமுறையில் அமைந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

நமது நாட்டில் இன்னொரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. அது தான் சிறுசேமிப்புத் திட்டம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் சிறு சேமிப்புத் திட்டம் அமைந்திருக்கிறது. சிறு சேமிப்புத் திட்டத்தை அமல் நடத்தும் விஷயத்தில் அரசாங்கத்துடன் நாம் அனைவரும் ஒத்துழைத்து, ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பாடுபடவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தனை நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றினாலும், நிலச் சீர்திருத்தத்தில் பல சிக்கல்கள் இருந்துகொண்டே இருக்கின்றன. தனி நபர் நிலவுடைமைக்கு வரம்பு கட்டிவிட்டால் அந்தப் பிரச்னைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று இப்போது நாம் உணருகிறோம். இதை கவர்னர் அவர்கள் தமது உரையில் எடுத்துக்கூறியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. பொதுவாக கவர்னர் அவர்களுடைய உரையானது மிகவும் போற்றத்தக்க முறையில் அமைந்திருப்பதால் நான் சந்தோஷப்படுகிறேன்.

(Deputy Speaker occupies the Chair.)

*SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது இந்த நாட்டில் ஒரு பெரிய நெருக்கடியான நிலைமை நிலவுகிறது. இப்போது சுமார் ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கிறார்கள். மேலும் பஞ்சாலைகளில் மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல ஆலைகள் மூன்று ஷிப்டுடன் மூடப்படுகின்றன. சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கு கைத்தறி ஜவுளிகளின் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி விஷயத்தில் இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை யாரும் போற்றாமல் இருக்கமுடியாது. குறிப்பாக, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இங்கு மட்டுமின்றி டெல்லிக்குச் சென்று அங்கும் மத்திய சர்க்காருடன் கைத்தறி நெசவாளர்களுக்காக வாதாடியிருக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் அவர்களுடைய கோரிக்கைக் கிணங்க மறுத்திருப்பது நமக்கு நன்றாகத் தெரியும். நமது சர்க்கார் மேற்கொண்டு அதற்காக திட்டம் போட்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர் பிரச்னையை மிகவும் முக்கியமான பிரச்னையாகக் கருதி, உடனடியாக மறுபடியும் தூது கோஷ்டியாகச் சென்று மத்திய சர்க்காரிடம் நம் கோரிக்கையை வற்புறுத்தவேண்டும். தேசத்தில் பொதுவாக என்ன அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது ? இப்போது சதுர கெஜத்துக்கு அரை அணு வீதம் கைத்தறி செஸ் வசூலிக்கப்படுகிறது. இதன்மூலம் சர்க்காருக்கு ஐந்து கோடி ரூபாய் வருமானம் வருகிறது. இந்த ஐந்து கோடி ரூபாயை கைத்தறித் தொழிலுக்காகச் செலவு செய்யாமல் வேறு காரியங்களுக்காகச் செலவு செய்வதற்கு என்ன நியாயமான காரணம் இருக்கிறது ? பொது ஜனங்களின் பணத்தை தனிப்பட்ட முதலாளிக்குச் சலுகைகள் கொடுப்பதற்காக பொது ஜனங்களின் பணம் செலவு செய்வது எல்லோரும் அறிந்த விஷயம். தனிப்பட்ட முதலாளிகளுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் கொடுப்பதால் தான் இப்பொழுது கைத்தறித் தொழிலுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி துணிகள் விற்பனையானால்தான் கைத்தறி நெசவாளர்கள் வாழ முடியும் என்ற நிலைமை இருக்கும்போது, கைத்தறித் துணிகள் தேக்கமாவதைத் தடுக்காமலிருப்பது உண்மையிலேயே கண்டிக்கத்

[Sri N. K. Palanisami] [10th February 1958

தக்க விஷயம். கைத்தறித் தொழிலுக்கு "இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம்" என்று சொல்வதில் பிரயோஜனமில்லை. தேங்கிய கைத் தறித் துணிகள் விற்பனையாக வேண்டும். அதற்காக, முன்பு போலவே ரிபேட் தொகையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கைத்தறி ஆலைகள் மூடப்பட்டு கைத்தறித் தொழிலாளர்கள் வேலையி லிருந்து நீக்கப்பட்டது பற்றியும், பல ஆலைகளில் துணிகள் தேங்கியது பற்றியும் கைத்தறித் துணிகள் தேங்காத தொழிற்சாலைகள் மூன்றாவது ஷிப்டுடன் மூடப்பட்டுவந்தது பற்றியும் நாங்கள் குறிப்பிட்ட காலத்திலெல்லாம் சர்க்கார் உண்மையாக மில்கள் தோன்றி இருக்கிறதா இல்லையா என்று கவனிக்க மறுத்தது கண்டிக்கத்தக்க விஷயம். இப் போது கைத்தறித் தொழிலாளர்கள் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி யிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

அடுத்தபடியாக, கெர் கமிஷன் ரிப்போர்ட்டில், சீக்கிரம் ஹிந்தியை புகுத்த வேண்டும், பிரதேச பாஷையை எந்த ஸ்தானத்தில் வைக்கவேண்டுமோ அந்த ஸ்தானத்தில் வைக்காமலிருப்பது. ஆகவே இவைகள் மிகுந்த குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. 1955-ம் வரு ஷத்தில் நாம் ஒரு சட்டமியற்றியிருக்கிறோம்.

10-20 p.m. தமிழ் ஆட்சிமொழியாக, போதனா மொழியாக சகல சட்டத்திலும் இருக்கவேண்டுமென்றும், நீதி மன்றங்களில் ஆனாலும் சரி, கலா சாலைகளிலானாலும் சரி, தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்க வேண்டு மென்று அதற்கு வேண்டிய உடனடியாக உருப்படியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாததால்தான் இன்றையதினம் எதிர்ப்புச் சக்திகளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்பொழுதே, நீதி மன்றங்களிலும், கலாசாலைகளிலும் ஆட்சி மொழியாக தமிழை அன்றே கொண்டுவந்திருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அதுவே எனது தாழ்மையான அபிப்பிராயம். இன்று தமிழா இந்தியா என்ற பிரச்னை இருக்கிறது. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இன்றைய தினம் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி புகுத்தப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை அப்படியா என்று கேட்டால் நாம் சொல்கிறோம், சகல பகுதிகளிலும், கலாசாலைகளிலும், நீதி மன்றங்களிலும் காலேஜ்களிலும் ஆட்சி மொழியாக தமிழ் மொழியே இருக்கவேண்டு மென்று சொல்கிற காலத்தில் எப்படி ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி வர முடியும் என்று தெரியவில்லை. அவர் பெரிய காந்தீய வாதி. சத்தியத்தில் பற்று உள்ளவர். இன்னும் நியாயமாக பேசுகிறவரும் கூட, பண்பாட்டுடன் பேசுகிறவர். அப்படியிருக்க எப்படி அவர் உண்மைக்கு மாறுபட்டு சொல்ல முடியுமென்று தெரியவில்லை. அடுத்தபடியாக, மத்திய சர்க்காரில் நமக்குப் போதுமான அதிகாரம் வேண்டாமா என்று சொல்லுகிறார்கள் போதுமான உத்தியோகங்கள் வேண்டாமா என்று கேட்கிறார்கள் நான் சொல்கிறேன், மூன்று கோடி தமிழ் மக்களுக்கும் மத்திய, அரசாங்கத்தில் வேலை கிடைக்க முடியுமா? சுமார் 20 லட்சம் பேர்கள் தான் மத்திய அரசாங்கத்தில் வேலையில் இருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது, அன்னிய மொழி ஆங்கிலத்திற்கு பதிலாக நமது தேசீய மொழியான ஹிந்தி இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதுவும் படிப்படியாக இருக்கிறது. அதுவும் தமிழர்களுக்கு இவ்வளவு ஸ்தானங்கள் மத்தியில் ஒதுக்கிய பிறகு ஒரு சிலருக்கு வேண்டி மூன்று கோடி தமிழர்கள் கஷ்டப்பட வேண்டுமா? அப்படி ஒரு சிலருக்காக மூன்று கோடி தமிழர்கள் கஷ்டப்பட வேண்டுமென்று சொல்வது நீதிக்கு புறம்பாகும். ஆகவே, இன்றையதினம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் காமராஜரை பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டுதான் இன்று அவர்கள் சகல பிரச்னை களிலும் இறங்கியிருப்பது நமக்கு தெரியும். ஒரு சமயத்தில் சொன்னார்கள். மொழிவெறி கூடாது என்று. ஆனால் இன்று அவ ரது எதிர்ப்பு வெறி மொழி வெறியாக மாறியிருக்கிறது. 1953 ஹைதரா பாத்தில் காங்கிரஸ் மகாசபையின் மக்கள் மொழிவழி அரசு வேண்டு மென்று கிளர்ச்சி செய்த போது அந்த டிமான்டை ட்ரைபல் டிமான்ட் என்று சொன்னார்கள். மொழிவழி ராஜ்யங்கள் அமைய வேண்டுமென்று சொன்னபோது, தட்சிண ராஜ்யம் வேண்டுமென்று மொழிவழி அரசுக்கு

முட்டுக்கட்டை போட்டார்கள். இந்தத் தீர்மானம் நிறைவேற்றியது சென்னை சர்க்கார் எடுத்த மோசமான நடவடிக்கைகளில் ஒன்று என்று சொல்கிறார். இந்தச் சர்க்கார் உண்மையில் ஒரு நல்ல நடவடிக்கை எடுத்திருந்தால், அந்த நல்ல நடவடிக்கை இந்தத் தீர்மானம் எடுத்ததுதான். ஆகவே, இதை நான் பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, இன்றயதினம் நில வரம்பைப் பற்றி பெருமையாகப் பேசப்படுகிறது. கௌகாத்தி காங்கிரஸில் தேபர் அவர்கள், சுதந்திரம் அடைந்த பத்து வருஷத்திற்குப் பிறகு சொல்கிறார்கள், "there is lack of loyalty in basic ideals." ஸீலிங் பற்றி அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அதைக் கொண்டுவர சரியான சூழ்நிலை இல்லையென்கிறார்கள். இன்று எதிர்கட்சிக்காரர்கள் சொல்வதை அது பிரதிபலிக்கிறது. சட்டசபை எடுத்துக் கொண்டாலும், பார்லிமென்ட்டை எடுத்துக்கொண்டாலும் இதைப்பற்றி பேசப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இருப்பது என்ன ? இன்று ஸீலிங்கைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால், ஏற்கனவே பல பேர்கள் நிலங்களை விற்று முடித்தாகிவிட்டது. பல பேர்கள் தங்கள் சொந்தக்காரர்களுக்கு, அவர்கள் பேரில் பிரித்து எழுதிக் கொடுத்து விட்டார்கள். ஆகவே, இப்பொழுது அதைக்கொண்டு வருவதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. சர்க்காருக்கு, நில வரம்பு கட்டவேண்டு மென்ற நோக்கம் இருந்தால் அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டியிருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால், உடனடியாக சர்க்கார் வசம் இருக்கும் புறம்போக்கு நிலங்களை ஹரிஜன மக்களுக்குக் கொடுக்க எந்த வித கஷ்டமும் இல்லையே. அப்படி ஒரு சட்டம் கொண்டு வரும்போது இந்த புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க மறுப்பதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. நம் ராஜ்ஜியத்தில் உணவுப் பொருள் ஏராளமாக உற்பத்தியாகியிருக்கிறது. அப்படி உற்பத்தியாகி இருக்கிறது என்ற காரணத்தினால் இன்றைய தினம் இருக்கக்கூடிய ரிலீப் ஷாப்புகளை மூடுகிறோம் என்று சர்க்கார் சொல்கிறார்கள். எல்லா வருஷங்களிலும் இப்படிச் சொல்கிறார்கள். எந்த வருடத்திலும் விலைவாசி ஏற்றத்தைபற்றி கவலைப்பட்டது கிடையாது. நமக்கு திருப்தி மனப்பான்மைதான் இருக்கிறது. நடைமுறையில் பார்த்தால், அன்று 14 அணா விற்ற அரிசி இன்றும் 14 அணாவிற்குத் தான் விற்கிறது. அன்று 1-1-0-க்கு விற்ற அரிசி இன்றும் 1-1-0-க்குத்தான் விற்கப்படுகிறது. ஆகவே எந்த அடிப்படையைக் கொண்டு இந்த ரிலீப் ஷாப்புகளை மூடவேண்டுமென்று சொல்லுகிறார்களோ, தெரியவில்லை. அறுவடை காலத்தில் பதுக்கி வைத்து விலை ஏறும்போது விற்பவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது? விலைவாசிகள் ஏறும்போது அதைக் கட்டுப்படுத்தி சாதாரண ஏழை மக்களுக்கு குறைவான விலையில் கொடுக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக ரிலீப் ஷாப்புகள் மூடப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கடைசியாக இன்றையதினம் நாம் ஜனநாயக பண்பாட்டில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இந்தியாவின் சுபிட்க்ஷத்திற்காகவும், இந்தியாவின் ஐக்கியத்திற்காகவும் நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத் துறையிலும் சரி, இன்னும் கன யந்திர தொழிலும் நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அதுமட்டுமல்ல. நிலச்சீர்த்திருத்தம், உயர்ந்த பட்ச வரம்பு கட்டுவது போன்றவைகள் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும். இவைகளுக்குத் தகுந்த நிர்வாக இயந்திரம் தேவை. ஏற்கெனவே இருக்கக் கூடிய நிர்வாக இயந்திரம், பிரிட்டிஷாரால், நமது சுதந்திரத்திற்கு விரோதமாவும் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் ஏற்படுத்தப்பட்ட அதே நிர்வாக இயந்திரந்தான் இன்றும் இருக்கிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள், நியாயவார மசோதாவைப்பற்றிப் பேசும்போது இந்த மாதிரிச் சட்டங்களை அமுலாக்குவதற்கு திறமையான ஆட்கள்கூட இல்லையே என்று சொன்னார்கள். நேரு அவர்கள் கூடத்தான், ஒரு கோவாப்பரேடிவ் சொஸைட்டி ரெஜிஸ்தர் செய்ய பத்து மாதங்கள் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். ரெட்டேபிஸம் அப்படியே இருக்கிறது என்றும் சொன்னார்கள். இதையெல்லாம் மாற்ற வேண்டும். இதை மாற்றியமைப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். "எபக்டிவ் அட்மினிஸ்ட்ரேஷன்" என்று சொல்லக்கூடிய காலத்தில் சர்க்காரின்கீழ் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் சரியானபடி வேலை செய்யவேண்டும். அதற்கு, உத்தியோகஸ்தர்களுக்குப் போதுமானபடி சம்பளம் கொடுக்கவேண்டும். அவர்களின் மனதில் நம்பிக்கை

உண்டுபண்ணவேண்டும். பெர்ஸனல் பைல் போன்றவைகள், நம்பிக்கை ஊட்டத்தக்கனவாக இருக்க வேண்டும். என்.ஜி.ஓ. போன்றவர்களுக்கு அதிகப்படியான அளவு ஊதியம், அவர்களின் வாழ்க்கை நடத்துவதற்குத் தகுந்த முறையில் அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

SRI K. B. S. MANI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையை ஆதரித்து என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த விவாதத்தில் கலந்துகொள்வதற்கு முன்னதாக ஒரு முக்கிய விஷயத்தைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இந்த விவாதத்தில், முன்னுக்கு இருளைப் பயன்படுத்திக்கொள்கிறவர்களும், வெளிச்சத்தைப் பயன்படுத்திக்கொள்கிறவர்களாகி விவாதத்தில் பங்கு எடுத்திருக்கிறார்கள். போட்டோவில், இருள் அவசியமாயிருந்தும் அதற்கு ஒளி பாய்ச்சப்படும்போதுதான் இருளின் பெருமையைத் தெரிய முடிகிறது. அதுபோலவே, கவர்னர் பெருமானின் உரையில் குறைபாடுகள் சில இருந்தாலும் அதில் ஒளியைப் பாய்ச்சி அதில் உள்ள கருத்தை அறிவதுதான் சபையின் கருத்தாக இருக்க முடியும். அதேபோல் கவர்னர் பெருமானின் உரையில் மொழியைப்பற்றி குறிப்பிடும்போது ஒரு திட்டத்திற்கு வந்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டை நாம் பார்க்கும்போது இதை, கபட நாடக சூத்திரதாரிகள் என்று சொல்கிற அரசியல் கோட்பாடுகள் உள்ள ஒரு சிலரின் விவாதத்திற்கு விட்டு விட்டு அடுத்தபடியாக ஆட்சிப் பொறுப்பை அதாவது உள்ளூர் ஆட்சிப் பொறுப்பை, வில்லேஜ் பஞ்சாயத்து ஆட்சி பொறுப்பைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் இந்த சென்னை மாகாணத்திலே அது நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது என்ற ஒரு அபிப்பிராயத்தைக் கூறுவதோடு மேலும் அதை நல்ல முறையில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் அதில் செய்யப் படப்போவதாக விளக்கமாகவும், சூசகமாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

12-30 p.m. அந்தக் குறிப்பில் வில்லேஜ் பஞ்சாயத்தை நிர்வகிக்கின்ற தலைவர்கள் தற்காலம் இருக்கின்ற சட்டத்தின்படி பார்த்தால் வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களாக இருக்கின்றார்கள். தற்குறிகளாக இருக்கின்ற பலர் தலைவர்களாக வர முடிகின்றது. அனுபவம் ஆராய்ச்சி திறன் இல்லாமல், மக்களுக்கும் ஒருவித பயனும் இல்லாமல் ஒரு சில தலைவர்கள் பஞ்சாயத்துகளில் இருக்கின்றார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு மதிப்பு கொடுக்கின்ற முறையிலாவது அவர்களுக்கு ஒரு பயிற்சி முகாம் ஏற்படுத்தி வில்லேஜ் பஞ்சாயத்துகளுக்குப் பயன்தரும் முறையில் திருத்தங்களைச் சட்டத்தில் சேர்க்கவேண்டும் என்றுதான் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக நில வரம்புகளைப்பற்றி விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது. முதலாவதாக விவசாயிகள் யார் என்பதை அரசாங்கமே சரியான முடிவு செய்யவேண்டும். ஆயிரம் வேலிபுள்ள மிராசுதார்களும் தங்களை விவசாயிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆயிரக்கணக்கில் நிலங்களை வைத்துக்கொண்டிருக்கும் மடாதிபதிகளும் தங்களை விவசாயிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவ்விதமென்றால் எந்த ஆதாரத்தின் மீது சர்க்கார் இவர்களை விவசாயிகள் என்று அழைக்கிறார்கள் என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. தன்னுடைய நிலம் எங்கிருக்கிறது என்று தெரியாதவர்கள் கூட, உழத் தெரியாதவர்கள் கூட, இன்று தங்களை விவசாயிகள் என்று கூறிகொள்கிறார்கள். முக்கியமாக இவர்களையே விவசாய ஆராய்ச்சிக்கும் மற்ற அவசியங்களுக்கும் விவசாய ஆராய்ச்சிக்கென்று இவர்களை தேர்ந்தெடுத்து அயல் நாடுகளுக்குச் செல்லுகிறார்கள். ஆகையால்தான் நல்ல முறையில் சர்க்கார் பரிசீலித்து இனிமேலாவது உழக்கூடியவர்கள், உழவுத் தொழிலை வைத்துக்கொண்டிருப்பவர்களைதான் விவசாயிகள் என்று சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டும். உழத் தெரிந்தவர்கள்தான் விவசாயிகள் என்று நிர்ணயிக்க இந்த விவசாயிகள் சட்டத்தின் மீது திருத்தங்கள் வரும் என்றுதான் கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக நில வரம்பை நிர்ணயிக்கும்போது நிலத்தை மிராசுதார்கள் தங்களுடைய நிலங்களை பங்குபோட்டு மற்றவர்களுக்குச் சீக்கிரமாகவே கொடுத்துவிடுகிறார்கள். நில வரம்பு நிர்ணயிக்கப்

10th February 1958] [Sri K. B. S. Mani]

படவேண்டும் என்றும் அதற்காக இடைக்காலத்தில் ஒரு அவசரச்சட்டம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நல்லதொரு கருத்தை முன்கூட்டி செய்யப்போகின்ற இந்த ஆண்டிலுள்ள சட்டத்தை கொண்டுவருவதின் முன்னறிவிப்பாகவே இருக்கின்றது. சட்டம் வரப் போகிறது என்று தெரிந்தவுடன் பெரிய மிராசுதார்கள் எல்லாம் தங்களுடைய நிலங்களை எல்லாம் பங்கு போட்டு மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். ஆகையால் இம்மாதிரி பிரித்து கொடுத்திருந்தால் அவைகள் எல்லாம் செல்லாது என்று ஒரு திருத்தம் புகுத்தப்படவேண்டும். அவ்விதம் சட்டத்தில் புகுத்தாவிட்டால் இவ்வித சட்டத்தினால் மக்களுக்கு நல்ல சௌகரியத்தைக் கொடுக்கமுடியாது என்பது என்னுடைய கருத்து. அடுத்தபடியாக உற்பத்தியைப்பற்றிப் பேசும்பொழுது அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள். கடந்த மாதத்தில் விவசாய மந்திரி அவர்கள் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது எல்லா நிலங்களிலும் மூன்றாவது போகம் சாகுபடி செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு அங்கு கூடியிருந்த ஐயாயிரம் விவசாயிகளும் விவசாய மக்கள் என்ற முறையில் உறுதி கொடுத்தார்கள். வருகிற ஆண்டில் மந்திரி அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது மூன்றாவது போகம் சாகுபடி செய்திருப்பதைப் பார்க்கலாம் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த உறுதிபாட்டுக்கொப்ப சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். அதாவது மூன்றாவது போகம் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு அவர்கள் செலுத்துகின்ற வரித்தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தை வஜா செய்து கொடுக்கவேண்டும். இப்போது தஞ்சை ஜில்லாவில் மூன்றாவது போகம் பயிர் செய்கிற விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய் இனாமாகக் கொடுக்கப்படுகிறது. அதைக்காட்டிலும் மொத்தமாக ஒரு பகுதி அதாவது ஐந்தில் ஒரு பாகமோ அல்லது பத்தில் ஒரு பாகமோ வஜா செய்துகொடுத்தால் அவர்களை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதோடுமட்டுமல்ல இன்னும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்க முடியும். அதோடு அதற்கேற்றபடி விவசாயச்சட்டத்தை திருத்தி அமைக்கப்படும்பொழுது மூன்றாவது போகம் விவசாயம் செய்யாத நிலங்களைப் பறிமுதல் செய்யப்படும் என்ற ஒரு திருத்தம் அதில் புகுத்தப்படவேண்டும். பரம்பரையாக தஞ்சை ஜில்லாவில் வருடத்தில் அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையோ விவசாயம் செய்துவிட்டு மீதி நாட்கள் எல்லாம் உல்லாச வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றும் வகையில் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டிலாவது இவ்விதம் மூன்றுபோகம் விவசாயம் செய்யாதவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று ஒரு திருத்தத்தைப் புகுத்தவேண்டும். இதையெல்லாம் கொண்டுவருவதற்காகத்தான் சில திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று நமக்கு முன்கூட்டி கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். விதைகள் சம்பந்தமாக நல்ல விதைகள் சர்க்கார் கொடுத்துவருகிறது. ஆனால் சில இடங்களில் தவறு நடக்கிறது. ஆங்காங்கு இருக்கின்ற டெமான்ஸ்ட்ரேட்டர்கள் மற்றுமுள்ள விவசாய அதிகாரிகள் மிராசுதார்களிடம் மிகவும் கெட்டுப்போன விதைகளைக் கொடுத்துவிடுகிறார்கள். இதை அவர்களும் தடங்கல் இல்லாமல் வாங்கிக்கொள்ளுகிறார்கள். பல ஜில்லாக்களில் குறிப்பாக ஒரு சில தாலூகாவில் இந்த விதைகள் முளைக்காமல் போகிறது. ஆகவே இம்மாதிரியான விதைகளை கொள்முதல் செய்யும் அந்த விவசாய அதிகாரிகளை அல்லது அந்த டெமான்ஸ்ட்ரேட்டர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். சாதாரணமாக இந்த விதைகளை விதைக்கும்போது காலம் தவறிவிடுகிறது. இதனால் தக்க பயன் கொடுப்பதில்லை. இதனால் நாட்டில் உற்பத்தி குறைகிறது. ஒருவருடைய அஜாக்கிரதையினால் நாட்டுக்கே கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே எந்த அதிகாரியினால் கொள்முதல் செய்யப்படுகிறதோ அந்த அதிகாரியைத் தண்டிப்பதற்கு அந்தச் சட்டத்திலே வேண்டிய திருத்தங்களைப் புகுத்த முடியும், புகுத்தவும் வேண்டும். இம்மாதிரியான விவசாய சீர்திருத்தத்திற்கான திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமென்பதற்காகத்தான் கவர்னர் பெருமான் அவர்கள் திருத்தங்கள் வரும் என்று முன்கூட்டி குறிப்பிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அடுத்ததாக நியாயவார பண்ணையாள் சட்டம் தஞ்சை ஜில்லாவில் பண்ணையாட்கள் இல்லாமல் போய்விட்டார்கள்.

[Sri K. B. S. Mani] [10th February 1958

இன்று காலையில் கூட ஹரிஜனங்களுக்காக எத்தனை கேஸ்கள் அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டது என்று கேட்டதற்கு மந்திரி அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். உண்மையில் சட்டம் நல்ல முறையில் கொண்டு வந்தாலும் ஆங்காங்கு இருக்கின்ற அதிகாரிகளினால் அவை பரிசீலிக்கப்படவில்லை. சர்க்காருடன் இந்த அதிகாரிகள் ஒத்துழைத்தால் தான் இவைகள் வெற்றிபெற முடியும். இவைகளை நல்ல முறையில் பயன்படுத்தாத அதிகாரிகளைத் தண்டிப்பதற்கு வேண்டிய திருத்தங்கள் கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்கு சட்டத்திலும் சில திருத்தங்கள் கொண்டுவரப்போவதாகச் சொன்னார்கள். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் தஞ்சை ஜில்லாவில் சீர்காழி, மாயவரம் என்ற இரண்டு தாலூகாகளிலும் நூற்றுக்கு 95 பாகம் மதுவின் தொல்லை ஒழிந்துவிட்டது. உண்மையாக இதனால் நாங்கள் பெருமைப்படுகிறோம். இதில் நாங்கள் வெற்றிபெற்றது எங்கள் ஊழியர்களுடையவும் மற்ற சக தோழர்களுடையவும் நல்ல ஒத்துழைப்புத்தான் காரணம். இரவு
12–40 p.m. பகலாக நாங்கள் சர்க்கார் கொண்டுவரும் திட்டங்களை, நாங்கள் எங்களுக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல், சொந்தக்காரர், அந்நியர் என்ற வேறுபாடு இல்லாமல், சட்டத்தை அமுல் நடத்துவதன் காரணமாகவும், போலீஸ் அதிகாரிகள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கும் காரணத்தினாலும் நல்ல முறையில் வெற்றி காண முடிந்தது. உண்மையிலேயே இன்றைக்கு மதுவிலக்குச் சட்டம் தோல்வி அடைந்துவிட்டது, அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் போடவேண்டுமென்று இங்கே ஒரு சிலர் கூறி, கள்குடியைக் கொண்டுவரவேண்டுமென்று ஒரு சாரார் இருப்பது, அவர்களைப்போல் இந்த நாட்டில் இருக்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கு விளைவிக்கும் கெடுதியைக் காட்டிலும் வேறு இல்லையென்று சொல்லலாம். அதே நேரத்தில் மதுவிலக்குச் சட்டத்தை நல்ல முறையில் அமுலாக்க இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி "ஜிஞ்ஜர் பீர்" போன்றவைகள் அதிகமாக ட்ரக் ஸ்டோர்களில் விற்பதைத் தடுக்க வேண்டும். உதாரணமாக எங்கள் ஊரில் 'ஜிஞ்ஜர் பீர்' 90 பாட்டில்கள் ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். 90 பாட்டில் 'ஜிஞ்ஜர் பீரு'க்கு என்ன அவசியம். ஜிஞ்ஜர் பீர் எதற்கு உபயோகிக்கப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. மாயவரம் டவுனை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு அங்கு 36 டிரக் ஸ்டோர்கள் இருக்கின்றன. இவ்வாறு இன்றைக்கு ஒரு நாளைக்கு 200 ரூபாய்க்கு மேற்கொண்டு கல்லாவில் போடப்படுகிறது—அதாவது விற்பனை செய்யப்படுகிறது. ஜிஞ்ஜர் பீர் ஏன் அவ்வளவு விற்கிறது ? அதைத் தடுப்பதற்கென்ன என்று போலீஸ் அதிகாரிகளைக் கேட்டபோது, அவர்கள் நாங்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கவும், பதனீரைக் கள்ளாக்குவதைத் தடுக்கவும் சட்டம் இருக்கிறது. ஜிஞ்ஜர் குடிப்பதைத் தடுக்க ஒன்றும் சட்டமில்லை. மெடிகல் ஸர்டிபிகேட்டுடன், டாக்டர் ரசீதுடன் குடிக்கின்றான் என்று சொல்லி கோர்ட்டில் விடுதலை செய்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தும்போது இந்த மாதிரி ஒரு டிரக் ஸ்டோர் எவ்வளவுதான் ஜிஞ்ஜர் பீர் வைத்துக்கொள்ளலாம். என்று ஒரு வரையறை நிர்ணயிக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால், குடிசைத் தொழிலாக இருந்த கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிப்பதில் எடுத்துக்கொள்ளும் முயற்சி வீணாகப்போய்விடும். ஆகையினால், அதற்குத் தக்கபடி இந்த மது விலக்குச் சட்டம் திருத்தப்படவேண்டும், அதற்காகத் தான் இப்போது இந்தத் திருத்தம் வருகிறது என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக பெண்களுக்கு, தொழில் செய்யும் பெண்களுக்கு, மகப்பேறு காலத்தில் சில வசதிகள் அளிக்கும் வண்ணம் ஒரு மசோதா கொண்டுவரப்படுமென கவர்னர் பெருமான் கூறியிருக்கிறார். பிற்போக்காயிருக்கிற பெண்களுக்கு சமுதாயம் முன்னேற இவ்வளவு வசதியும் செய்யும்போது, இதேநேரத்தில் இன்னும் பலர் கேட்பாரற்றுக் கிடக்கிறார்கள். தஞ்சையிலிருக்கும் ரைஸ் மில்களில் பெண் கூலிகள் அதிகமாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வரையறுக்கப்பட்ட ஊதியமோ அல்லது மாதாந்திர லீவோ கிடையாது. இவைகளையெல்லாம் பரிசிலித்துப் பார்த்து பாக்டரி ஆக்ட்படி பயன்களை அடைய இந்தச் சட்டத்திலே ஒரு திருத்தத்தையும் கொண்டுவர வேண்டுகிறேன்.

10th February 1958] [Sri K. B. S. Mani]

அடுத்தபடியாக, இந்த ராஜ்யத்திலுள்ள தொழிலாளர்கள் தேசீய விடுமுறை நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் அவர்களும் அவர் களுடைய குடும்பத்தாரும் சந்தோஷமடைய விடுமுறை நாட்களை அதிகரிக் கத் திருத்தத்தைக் கொண்டுவரப் போவதாகவும் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் யந்திரங்களைப் போல் வேலைசெய்யும் யந்திரங்களாகக் கருதுகிறவர்களுக்கு மகத்தான உதவியாகும்.

எனக்கு ஒரு சிறு வருத்தம் இந்த கவர்னர் பெருமானின் உரையில் ஹரிஜனங்களைப்பற்றி ஒரு சிறு வார்த்தை கூடக் கூறவில்லை என்பதுதான். ஹரிஜனங்கள் எல்லோரும் நல்ல நிலைக்கு வந்துவிட்டார்கள் என்று எண்ணுகிறார் போலும். அல்லது விவசாயிகளைப் பற்றிச் சொல்லும்போது, ஹரிஜனங்களெல்லாம் விவசாயிகள் என்று எண்ணினார்கள் போலும் என்று நினைக்கிறேன். ஹரிஜனங்களாக இருக்கும் மக்கள் நாட்டிலே நல்லதொரு நிலையை அடைய இம்மாதிரியான ஆட்சி இன்னும் இரண்டு முறையாவது, அதாவது 10 ஆண்டு காலமாவது இருந்தால் நல்ல முறை யில் ஹரிஜன மக்கள் முன்னுக்கு வந்துவிட முடியும். அதுவரையில் இப்போது இருக்கும் சலுகைகளை மேலும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் அவர்கள் எந்தத் துறையிலும் முன்னேற முடியாது. ஹரிஜனங்கள் முன்னேற வேண்டுமென்று பாடுபட்டு வருகிறது அரசாங்கம். இம்மாதிரி சர்க்கார் இந்த ராஜ்யத்தில் நல்ல முறையில் இதுவரையில் நடந்து வந்திருப்பதாலும், இன்னும் பல மடங்கு அதை விரிவான முறை யில் இந்த ஹரிஜனங்களுக்கு நன்மைகள் செய்து வருமென்பதாலும்தான் இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை, அதற்காக வருத்தப்படவேண்டிய தில்லை என்று எண்ணிக்கொள்கிறேன். இந்த விதத்திலே கவர்னர் உரை யிலே இன்னும் பல முக்கியமான விஷயங்களைக் கூறியிருக்கிறார். இந்த நாட்டின் நலனில் நல்லதொரு அக்கறைகொண்டு காங்கிரஸ் மகாசபை பல காரியங்களைச் செய்திருக்கிறது. நான் எங்கள் அபிப்பிராயத்தைப் பொதுப்படையாகக் கூறும்போது முதலாளித்துவத்தின் கோட்பாடினை கையாளாத காரணத்தினால் காங்கிரஸ் சர்க்கார் கஷ்டங்களை எதிர் நோக்கி இருக்கிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் இத்தகைய சீரிய தொண்டு செய்யும் காரணமாக அந்தக் கருத்திற்கிணங்க சட்ட வரம்புகளை இயற்றி இன்று அந்தவிதத்திலே 150 பேர்களுக்கு மேலான மெம்பர்கள் வரமுடிந்திருக் கிறது. இந்த நில வரம்புச் சட்டத்தை அமுல் நடத்தினால் இங்கே இருக்கிற கட்சிப் பூசல்களும் வாதங்களும் வெகு சுலபமாக மறைந்துவிடும். அதற்காக ஒரு ஆர்ப்பாட்டம் போன்ற காரியங்களைச் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து.

அதோடுகூட இன்றைக்குப் பெரிய அளவிலே ஹரிஜனங்களுக்கு உதவி செய்வது ராஜ்யப் போலீஸ். பலர் அவரவர்களுக்குத் தகுந்த மாதிரி திரித்துக் கூறுகிறார்கள். முதுகுளத்தூர் பகுதியில் நடந்த கலவரத்தைப் பார்க்கும்போது எங்களுக்கு உதவி செய்தவர்கள் போலீஸ். எங்களுக்கு உதவி செய்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம். இந்த மாகாணத்திலே ஐந்தில் ஒரு பாகம் ஹரிஜனங்கள். அதைச் சிந்திக்க வேண்டும். போலீஸ் உதவி இல்லாவிட்டால் உண்மையிலேயே ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள். இன்றைக்கும் உள்ளே செல்ல முடியாத பகுதிகள் பல இருக்கின்றன. இந்த அதிகாரிகள் ஹரிஜனங்களை ஆத ரித்து நீங்கள் போங்கள், உதவி செய்கிறோம் என்று போலீஸ் அதிகாரிகள் சொல்கிறார்கள். சர்க்கார், கவர்னர் பெருமான் பேருரையில் குறிப்பிட்டது 12–50 போல் சட்டங்களை மட்டும் இயற்றிவிட்டால் போதாது. அதே சமயத்தில் p.m. போலீஸ் அதிகாரிகளையும் சர்க்கார் கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும். போலீஸ்காரர்கள் குறைந்த வாழ்வில் இருந்துகொண்டு நல்லது செய்ய முடியாது. அவர்கள் பொங்கலுக்கும், தீபாவளிக்கும் பெண்டு பிள்ளைகளுக்குச் செய்வதற்கு மற்றவர்களுடைய கையை எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது. மந்திரியின் காரைக்கூட நிறுத்திவிடுவதற்கு அவர்கள் கையில் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தையும் மறந்து சாதாரணமாக ஒருவரிடத்தில் பல்லைக்காட்டி நிற்கவேண்டிய நிலை மையில் இருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளிடத்தில் எவ்வளவு அதி காரம் இருந்தபோதிலும், அவர்களுக்கு நல்ல வசதிகள் இல்லாவிட்டால்

அவர்கள் சட்டங்களை அமுலாக்கமுடியாது. அவர்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு வறுமை நீடிக்கின்றதோ, அத்தனை அளவுக்கு நாட்டிலுள்ள மக்கள் அரசாங்கத்தினுடைய சட்டங்களின் நன்மைகளை அடைய முடியாது. அந்த அளவு தொழிலாளர்களுடைய நலனும் பாதிக்கப்படும். ஆகையால் நம்முடைய சர்க்கார் போலீஸ்காரர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டும் என்பதை நான் கூறிக்கொள்ளுகிறேன்.

நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித் துக் கொள்ளுகிறேன்.

SRI S. C. SADAYAPPA MUDALIAR : கனம் உதவி சட்டசபைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் பேருரைக்கு வந்தனம் தெரிவித்து, சில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன். அவர் தன்னுடைய உரையிலே நமது நாட்டில் விவசாயிகளுக்கு செய்திருக்கும், செய்யப்போகும் நன்மைகளைப்பற்றி தெரிவித்திருக்கிறார். விவசாயிகள் தங் களுக்கு நிலம் உடைமையாக்கப்படவேண்டும் என்று எதிர்பார்த்துக்கொண் டிருக்கும் நேரத்திலே, நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவது என்பதை சர்க்கார் சீக்கிரம் செய்யும் என்ற ஒரு நல்ல அறிகுறி வாசகத்திலே அமைந்திருப்பதை ஏழை விவசாயிகள், உழைப்பாளிகள், வரவேற்கிறார்கள் என்பதை இந்தச் சபை முன்பு தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

நம் மாகாணத்திலே ஏழை நெசவாளர்களுக்கு குறைகள் பல இருந்தும், அதை கவர்னர் பெருமான் தன் உரையிலே சேர்க்கவில்லை என்பதை பல கனம் அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டினார்கள். கைத்தறி யாளர்கள் வாழ்க்கைக்குப் போதிய அளவு வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்ற நிலைமையை சர்க்கார் நன்றாக உணர்ந்து, அந்தக் குறைகளை முழுவதும் நீக்காவிட்டாலும் கூட, ஓரளவு நீக்கும் முறையில் ரிபேட் அளிக்க முன்வந்தார்கள். இப்பொழுது அந்த ரிபேட் தொகையைக் குறைத்துவிட்டார்கள். ஆகையால் திரும்பவும் அவர்கள் கஷ்ட மான நிலையில் இருக்கிறார்கள். அந்த ரிபேட் தொகையைக் குறைப்பதைத் தடுப்பதற்கு சர்க்கார் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம் மாகாணத்திலே சில மாதங்களாக சிறு குழப்பங்கள் ஏற்பட்டு மக்கள் உள்ளத்திலே ஒரு குழப்பமான நிலையை உண்டு பண்ணும் வகையிலே சில கட்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. குறிப் பாக சென்னையிலே நமது மதிப்பிற்குரிய தலைவர் வந்திருந்தபோது நடந்துகொண்ட விதம் மிகவும் வருத்தத்தை அளிக்கக்கூடிய விஷயம். கனம் மெம்பர் கோவிந்தசுவாமி அவர்கள் ''நீங்கள் ஒரு காலத்தில் கருப்புக்கொடி காட்டவில்லையா ? நாங்கள் காட்டுவது மாத்திரம் தவறுதலா ? சர்க்கார் ஏன் அதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது?'' என்று இந்தச் சபையிலே கேட்டார். நாங்கள் ஒரு காலத்திலே கருப்புக்கொடி காட்டியது வாஸ்தவம் தான். ஆனால் அது எதற்காக ? சுயராஜ்யம் அடையவேண்டும் என்பதற்காகவும், இன்று கவர்னர் பெருமான் பேருரையில் கூறியபடி நில உடைமை வரம்புச் சட்டம் கொண்டுவந்து அதன் பலனை விவசாயிகள் அனுபவிப்பதற்காக சுயராஜ்யம் வேண்டும் என்பதற்காகவும், கருப்புக் கொடி காட்டினோம். ஆனால் இன்று அவர்கள் கருப்புக்கொடி காட்டிய நிலவரம் வேறு, நிலைமை வேறு. அதற்கு அவர்கள் என்ன காரணம் சொல்லுகிறார்கள்? தமிழ் நாட்டுத் தலைவர்கள் சிலரை அவர் அவமரி யாதையாகப் பேசினார் என்ற காரணத்திற்காக என்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டுத் தலைவர்கள் ஒரு சிலரை அவர் அவமரியாதைப் படுத்தி யிருந்தால், அவர்கள் அதற்கு பதில் சொல்லுவார்கள். அதற்காக ஒரு கட்சியினர் எதற்கு வக்கீலாக மாறி குழப்பம் ஏற்படுத்தக்கூடிய வகையில் கருப்புக்கொடி காட்டவேண்டும்? சர்க்கார் அப்பொழுது திறமையாக நடந்துகொண்டது மட்டுமல்ல, என்றும் அப்படிப்பட்ட குழப்பம் நாட்டில் வளராமல் தடுத்து, சுயராஜ்யத்தின் பலனை மக்கள் அடையும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கவர்னர் பெருமான் உரையில் விவசாயிகளின் நிலைமையை உயர்த்துவதற்கு வேண்டிய முறைகளைப் பற்றி குறிப்பிட்டிருப்பதை நான் ஆதரிக்கிறேன்.

10th February 1958] [Sri S. C. Sadayappa Mudaliar]

அடுத்தபடியாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள நல்ல அம்சங்கள் எவை என்று பார்க்கும்பொழுது, கிராமங்களிலே அதிக முன்னேற்றம் காணப்படுகிறது. கிராமங்களிலே சிறு சேமிப்புத் திட்டம் நிர்ப்பந்தப்படுத்தி அமுலாக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறது என்று சில மெம்பர்கள் தெரிவித்தார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும் குடிதண்ணீர், ஆரம்பக் கல்வி முதலிய வசதிகளைப் பெற்றிருக்கக்கூடிய கிராமங்களில், பெரும் அளவில் இல்லாவிட்டாலும் தங்களால் இயன்ற அளவுக்கு, மக்கள் சர்க்கார் கொண்டுவந்திருக்கும் சிறு சேமிப்புத் திட்டத்தை ஆதரிக்கிறார்கள், அதை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு மக்கள் உதவி செய்கிறார்கள் என்பதை இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். சர்க்காரின் பேரில் நம்பிக்கை வைத்து, சர்க்கார் வரையறுத்துள்ள அளவுக்கு இந்தத் திட்டம் வெற்றியடைவதற்கு மக்கள் உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் நீர்ப்பாசன திட்டங்களினால் எந்த அளவும் நன்மை ஏற்படாமல் போனாலும்கூட, மின்சாரத்தினால் விவசாயிகள் நல்ல பலனை அடைந்து வருகிறார்கள். மின்சாரத்தினால் சில கிராமங்கள் நன்மை அடையக்கூடிய நிலைமையில் இருக்கின்றன என்று கவர்னர் பெருமான் உரையில் கூறியிருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய தொகுதியிலே கொஞ்சம் மனதிற்குக் கஷ்டம் தரக்கூடிய நிலையில் ஹரிஜனங்களின் நிலைமை இருக்கிறது என்பதை இந்தச் சபையிலே தெரிவிக்க விரும்புகிறேன். நமது உள் நாட்டு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இரு தரப்பினர்களையும் கூட்டி சமரசம் உண்டுபண்ணி விட்டு வந்தார்கள். இருந்தாலும், உடனடியாக சர்க்கார் அவர்களுக்குச் செய்யக்கூடிய பல நன்மைகள் இருக்கின்றன. அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு உடனடியாக பயிரிடுவதற்கு வேண்டிய நிலங்கள் கொடுக்கவேண்டும். போக்குவரத்து வசதி செய்துதர வேண்டும். இதுபோன்ற பல கஷ்டங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. ஆனால் கலவரம் நடந்தது எந்த முறையிலே என்றால், இந்தப் பிரச்னையை ஒட்டியோ அல்லது வேறு ஏதாவது விஷயங்களிலோ அம்மாதிரி ஜாதிப்பிரச்னைகள் கிளம்பி இருக்கின்றன. அம்மாதிரி இல்லாமல் அவர்கள் திருப்திகரமாக நடந்துகொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளை நல்ல முறையிலே எங்கள் ஜில்லா கலெக்டர் அவர்களும், டி.எஸ்.பி. அவர்களும் செய்துகொடுத்தால், இம்மாதிரி சிறு பிரச்னைகள் ஏற்படாமல் தடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கவர்னர் அவர்களுடைய பேருரையில் அடைந்துள்ள முன்னேற்றம் மக்களுக்குப் போதுமானது. இன்னும் பல செய்யவேண்டியதாக இருக்கின்றன. 1-00 p.m. பல ஆண்டுகளாக இந்த மாகாணத்தில் நெசவாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இந்தச் சர்க்கார் செய்துகொண்டு வரும் நன்மைகள் ஏராளமாக இருக்கின்றன. அதனால் மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கை தேர்தல்களின் மூலமாக நன்றாக தெரியப்படுத்தப்படுகிறது. அது ஒன்றே அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது என்பது தெரியவரும். இன்னும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக கிராம மக்கள் முன்னேற்றம் அடைவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது.

கடைசியாக மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உரையை நிகழ்த்தியதற்கு அவருக்கு வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*** Sri V. SUBBAIAH :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையை படித்ததில் இந்நாட்டிலுள்ள எண்பது சத விகிதமுள்ள விவசாயிகளைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. கிராமங்களில் வாழக்கூடிய விவசாயிகளைப்பற்றி, அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி, அவர்களுடைய நிலைமையைப்பற்றி, அவருடைய உரையில் ஒன்றுமே இல்லை. கிராமத்திலுள்ள பொருளாதார நிலைமையைப்பற்றி, அங்குள்ள கைத்தொழிலைப்பற்றி முக்கியத்துவம் கொடுத்து அங்குள்ள நிலைமையை உயர்த்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்

[Sri V. Subbaiah] [10th February 1958

பட்டிருக்கிறதா என்பதைப்பற்றிய விவரம் அவருடைய உரையில் இல்லே. வள்ளுவர் "உழவு" என்ற பகுதிக்குப் பத்து பாட்டுகள் எழுதியிருக்கிருர். அப்படித் தெரிந்திருந்தும் உழவர்களைப்பற்றி கவர்னர் அவர்கள் ஒன்றுமே குறிப்பிடாமல் இருப்பதற்கு வருத்தம் தெரிவிக்கவேண்டியதாக இருக்கிறது. அதைத் தெரிந்துகொண்டிருந்தால் அவர் உழவர்களைப்பற்றி ஏதாகிலும் சொல்லியிருப்பார். இந்நாட்டில் பெரும்பாலும் விவசாயிகள் விவசாயத்தைத்தான் நம்பியிருக்கிருர்கள். அப்படி விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் என்ன நன்மை செய்திருக்கிறது? கிராமங்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறது? இவைகளை நினைத்துப் பார்த்தால் சில ஆண்டுகளாக பல பகுதிகளில் சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்றும் தேசீய அபிவிருத்தித் திட்டம் என்றும் ஆரம்பித்து பல கிராமங்களில் ரஸ்தாக்களைப் போட்டுக்கொண்டும், பாடசாலேகளை அமைத்துக்கொண்டும், குடிதண்ணீர் வசதிகளைச் செய்துகொண்டும் இன்னும் பலவிதமான காரியங்களைச்செய்துகொண்டும் வருகிருர்கள். ஆனல் எங்கள் பகுதியாகிய திருநெல்வேலி ஜில்லா, கோவில்பட்டி தாலூகா, கோவில்பட்டி சப் தாலூகாவில் எந்தவிதமான அபிவிருத்தி வேலேயும் இதுவரையிலும் செய்யவில்லே என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விளத்திக்குளம் பகுதி கிராமங்களில் குடி தண்ணீருக்கு அங்குள்ள மக்கள் மழையைத்தான் நம்பிக் கொண்டிருக்கிருர்கள். மழை இல்லாவிட்டால் அங்குள்ள குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை எடுத்துத்தான் அவர்கள் சாப்பிடுகிருர்கள் என்ருல் அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதை எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லே.

எங்கள் சப் தாலூக்கா பகுதிக்கு பாடசாலே இல்லாமலேயே இருக்கிறது. மற்றும் அங்கு குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதால் நரம்புச் சிலந்தி என்று சொல்லக்கூடிய கொடிய நோய் பரவிக்கொண்டிருக்கிறது. நாட்டிற்கு சுதந்திரம் வந்து பதினேரு வருஷங்களாகியும் அங்குள்ள மக்கள் நரம்புச் சிலந்தியினல் பாதிக்கப்படுகிருர்கள் என்பதைக் கேட்க வருத்தமாக இருக்கிறது. இதைப் போக்குவது அரசாங்கத்தினுடைய கடமை.

அது மட்டுமல்ல, இன்றையதினம் அங்குள்ள விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் ஏதாகிலும் நன்மை செய்து வருகிறதா என்று பார்த்தால் விவசாயிகளுடைய நிலைமை மிகவும் மோசமாகிக்கொண்டு வருகிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானல் பூசாரம் குறைந்துபோய்விட்டது. வருஷா வருஷம் மகசூல் குறைந்துகொண்டே போகிறது. அதைப் பெருக்க வேண்டுமானல் உரம் வேண்டும். ஆனல் அரசாங்கம் சரியான்படி உரம் சப்ளை செய்வதில்லே. நல்ல முறையில் போதிய அளவில் உரத்தை சப்ளை செய்வதில்லே. விவசாயத்தைப் பெருக்கவேண்டுமானல் நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்து நடத்தவேண்டும். அப்படி இந்த அரசாங்கம் எடுத்து நடத்துவதாகத் தெரியவில்லே. பல குளங்கள் இருக்கின்றன, அவைகளை மராமத்து செய்யவில்லே. பல ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலேயில் உற்பத்தியாகி மேற்கே போய்க்கொண்டிருக்கின்றன. எங்கள் ஜில்லாவிற்கு சுமார் பத்து மைல் தூரத்தில் அவைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். அதற்கு சுமார் நாற்பதாயிரம் ரூபாய் செலவு செய்து பரிசோதனை நடந்திருந்தும் இது வரைக்கும் அதை எடுத்து நடத்துவதாகத் தெரியவில்லே. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அந்தத் திட்டம் இடம் பெறும் என்று எதிர் பார்த்தோம். அதிலும் அது இடம் பெறவில்லே. அந்தத் திட்டத்தை எடுத்து நடத்திக் கொடுத்தால் இந்த இரண்டு தாலூகாக்களோடு மட்டுமல்லாமல் கோவில்பட்டி, சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை முதலிய இடங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். மேற்குத்தொடர்ச்சி மலேயிலுள்ள ஜீவநதிகளாகிய கீரியாறு, பம்பையாறு முதலிய ஆறுகளைத் தடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தினல் ரொம்பவும் நன்மையாக இருக்கும். இவைகளில் அக்கறை எடுத்துக்கொள்ளாமல் அமைச்சர்கள் தங்களுடைய பகுதிகளிலேயே அக்கறை காட்டி வருகிருர்கள். எங்கு அவர்களுக்கு அக்கறை இருக்கிறதோ அங்குதான் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிருர்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் பல

வருஷங்களுக்கு முன்னதாகவே எடுத்து நடத்தவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷார் இருந்த காலம் முதற்கொண்டே இந்தத் திட் டத்தைப்பற்றிச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அப்படியிருந்தும் இதுவரை யிலும் அதைப்பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்ட தாகத் தெரியவில்லை. இனிமேலாகிலும் அதைப்பற்றி நடவடிக்கை எடுத் துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. எங்கள் பகுதியில் விவசாயிகளுக்கு கிணற்றிலிருந்து தண்ணீரை இறைப்பதற்கு என்று மின்சாரம் கொடுக்கப்படுகிறது. மின்சாரம் வழங்குவதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எங்கள் பகுதியில் அமுல் நடத்தப் படுகிற பாபநாச மின்சார ஸ்தாபனம் நல்ல முறையில் மின்சாரத்தை வழங்குவதில்லை. விவசாயிகளுக்கு வசதி அளிக்கும் முறையில் மின் சாரம் வழங்கப்படவில்லை. மின்சார வெட்டு ஏற்பட்டதன் காரணமாக விவசாயத்திற்கு என்று இரவு காலங்களில் ஒரு மணிக்கு அல்லது பனி ரெண்டு மணிக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு என்று மின்சாரம் கொடுக்கி றார்கள். இரவில் அந்த நேரத்தில் விவசாயிகள் எப்படித் தண்ணீர் பாய்ச்சுவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படி இல்லாமல் பகலிலேயே மின்சாரம் வழங்கினால் சௌகர்யமாக இருக்கும் என் பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பகலில் ஷிப்டு முறையில் மின்சாரம் வழங்கினாலும் சௌகர்யமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். மின்சாரம் வெட்டு என்று சொல்லும்போது அங்கு சினிமாக் களும், நடைபெற்று வருகின்றன. மற்றும் ரைஸ் மில்கள், ஆயில் மில்கள், மாவு மில்கள் முதலியவைகள் வேலை செய்கின்றன. பகலில் இவைகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படுவதில்லை. இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன் இன்றையதினம் விவசாயிகளுக்கு பெரும் பளுவாக இருக்கக் கூடியது ஒன்று இருக்கிறது. அதாவது மினிமம் சார்ஜ் கொடுக்கவேண்டும் என்று சொல்வது. அதை அவர்கள் தண்ட வரியாகக் கொடுக்கிறார்கள். மின்சாரமே கிடைக்காமல் இருக்கும்போது அக்ரிமெண்ட் என்று கையெழுத்து வாங்கி மின்சாரம் வழங்கும்போது "மினிமம் சார்ஜ்" கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிக் கட்டுவதாக இருந்தால் சுமார் 200 அல்லது 300 ரூபாய் கட்டவேண்டியதாக இருக்கிறது. இந்த முறை மாறவேண்டும். விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் ஏதோ சலுகைகள் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இப்படி யெல்லாம் தண்டமாகப் பணத்தை வசூலிக்கிறார்கள். அத்துடன் இரவு நேரங்களில் மின்சாரம் வழங்குவதையும் மாற்றியமைக்கவேண்டும். தொழிற்சாலைகளுக்கும், மற்ற ஸ்தாபனங்களுக்கும் மின்சாரம் வழங்கி அதற்குப் பணம் வாங்குவதைப் பார்த்தாலும் விவசாயிகளுக்கு நன்மை செய் வதாக இல்லை. அந்த ஸ்தாபனங்களுக்கு ஆறு அல்லது நாலு நயாபைசா என்று சொன்னால் விவசாயிகளுக்கு வழங்கும் மின்சாரத்திற்கு $1\frac{1}{2}$ அணா வசூலிக்கிறார்கள். இதனால்தான் மின்சாரம் வழங்குவது விவசாயி களுக்குப் பெரும் பளுவாக இருக்கிறது என்று சொல்லுகிறேன். "அன் கனெக்டட் மினிமம் சார்ஜஸ்" என்று வசூலிக்கப்படும் வழக்கத்தை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை மின்சாரம் விநியோகிக்கும் ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்று இடம் பெற வில்லை. நாம் இப்பொழுது விவசாயத்தை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படி விவ சாயத்தைப் பெருக்கவேண்டுமானால் அதற்கு அவசியமாக இருப்பது கால் நடைகள். இப்படிப்பட்ட கால்நடைச் செல்வங்கள் எப்படி பாதிக்கப்பட்டி ருக்கிறது என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். இப்பொ ழுது மற்ற இனங்களுக்கு எல்லாம் இன்ஷூரென்ஸ் என்ற திட்டம் இருக் கிறது. அதைப்போலவே விவசாயத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய கால்நடைச் செல்வங்களுக்கும் இன்ஷூரென்ஸ் திட்டத்தைக்கொண்டு வரவேண்டும். இதைப்போலவே பயிர்களுக்கும் இன்ஷூரென்ஸ் திட்டம் இருக்கவேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடியவற்றில், பருத்தி,

[Sri V. Subbaiah] [10th February 1958

வெங்காயம், கரும்பு, வாழை புகையிலை முதலியவைகளுக்கு மார்க்
கெட்டில் விலை நிர்ணயம் செய்யவேண்டும். விவசாயிகளுடைய உற்பத்திப்
பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பதால் அவர்கள்
எதிர்பார்க்கக்கூடிய அளவில் அவர்களுக்கு வருவாய் வருவதாக இல்லை.
இன்னும் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பல பொருள்களுக்கும்
பயிர்களுக்கும் விலை நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவரை செய்யவில்லை என்று
1–10 p.m. நினைக்கிறேன். அது செய்தாக வேண்டும். அப்படிச் விலை
நிர்ணய போர்டு ஒன்று அமைக்கவேண்டும். அதில் அரசாங்கப்
பிரதிநிதியும், வியாபாரப் பிரதிநிதியும், விவசாயப் பிரதிநிதியும் அமர்ந்
திருக்கவேண்டும். மூவரும் சேர்ந்த ஒரு நிர்ணய போர்டாக அமைத்து,
விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும்போது செலவு என்ன ஆகிறது,
மார்க்கெட் மதிப்பு என்ன, என்ன விலைக்கு விற்றால் விவசாயி லாபமாக
வாழமுடியும் என்று சிந்தித்து நல்ல முறையிலே விவசாய நிர்ணய போர்டு
ஒன்றை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். இதைச் செய்யாதவரையில், விவசாயிகளுக்கு அரசாங்கம்
எவ்வளவு கடனைக் கொடுத்தாலும் சரி, எவ்வளவு இனமாகக் கொடுத்
தாலும் சரி, அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவித முற்போக்கும் அடைய
முடியாத நிலைதான் இருக்கும். விவசாய விளைபொருள்களின் உற்பத்தி
விலை நிர்ணயம் இல்லாத வரையில் நாட்டிலே விவசாயிகள் முன்னேற முடி
யாது. பல்லாண்டுகளாக நாட்டில் நாம் பார்த்துவருகிற நிலையைத்தான்
நான் சொல்கிறேன்.

எங்கள் கோயில்பட்டிப் பிரதேசம் ஒரு வானம் பார்த்த பிரதேசம். கோயில்பட்டி பிரதேசம் கருங்கண்ணிப் பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய பிரதேசம். ஆலைகளில் 50, 60, 80-ம் நெம்பர் இழை நூல்களைத் தரக்கூடிய மிக உயர்ந்த தரம் கோயில்பட்டிப் பகுதிகளில் உற்பத்தி செய்யக்கூடிய கருங்கண்ணிப் பருத்தி. அங்கே உள்ள விவசாய மக்கள் விவசாயத்தில் இயந்திரத்தை விரும்பக்கூடியவர்கள். நவீன விவசாய முறைகளைக் கடைபிடிக்க ஆசைப்படுகிறவர்கள். இந்த நாட்டுக்கு கம்போடியா பருத்தி வந்தபோது, இந்த நாட்டிலே எந்த விவசாயியும் அதை ஏற்றுக்கொள்ளாத காலத்தில், " நாங்கள் ஏற்றுச் செய்கிறோம் " என்று கோயில்பட்டி விவசாய மக்கள் முதன் முதலிலே உற்பத்தி செய்ய முன்வந்தார்கள். பாரத நாட்டிலே எந்தப் பகுதியிலும் ஏற்றுக்கொள்ள முன்வராத அந்த நிலையிலே முன்வந்த பெருமை கோயில்பட்டி மக்களுக்கு உண்டு. அவர்கள் புதுமையை விரும்பக்கூடியவர்கள். அத்தகைய பெருமை வாய்ந்த அப் பிரதேச மக்கள் இன்று எப்படி இருக்கிறார்கள் ? நீர்ப்பாசன வசதி அற்று, மின்சார வசதி அற்று, அவதிப்படும் நிலைமை சொல்ல முடியாது. அரசாங்கத்தினுடைய கஷ்டங்களினாலும் சட்டங்களினாலும் இன்று அவர்கள் அவதிப்படுகிறார்கள். இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீக்குவதற்கு அரசாங்கம் தயாராக இருந்து, எதிர்காலத்திலே நல்ல முறையிலே விஞ்ஞான முறையிலே, புதிய முறையிலே விவசாயத்தை அவர்கள் செய்வதற்கு ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

Sri T. T. DANIEL : Deputy Speaker, Sir, the Governor's Address contains some glorious features. We are really glad to note in the Governor's Address that the question of fixing the limit on land holding has already been engaging the active consideration of the Government and that they propose to bring in an interim legislation fixing a provisional limit on land holdings and banning further accumulation of wealth beyond that limit so as to avoid unnecessary complication pending the finalisation of the enactment. While welcoming this measure, I would suggest to the Government that when they fix a ceiling on holdings, they should take into consideration not only the extent of the holding but also its annual income, the situation where it lies and also the

10th February 1958] [Sri T. T. Daniel]

value of the holding. The fixation of the limit on land holding based merely on the extent of the holdings will certainly be a hardship to the land-owners. I believe that in the proposed enactment there would be adequate provision for compensation to the land-owners for the land which will be taken out from their enjoyment. I would also suggest that the compensation should be at least not less than twenty times the annual return of the land. The land-owner, under modern conditions, can be allowed to have such extent of land which will yield an annual income of not less than Rs. 3,000 which, I believe, will be sufficient to meet his requirements in life. While fixing the ceiling on land holdings, incidentally other important questions may also arise, which the Government should not lose sight of. Land, as it is, is the nuclei around which the whole rural credit in our State revolves. If that is distributed, naturally the question arises whether the rural credit system will not be affected. We should also take into consideration whether disintegration of the land holdings will increase food production or reduce it in our State. On the eve of promulgating such an enactment, the Government should simultaneously constitute a network of rural banks throughout the length and breadth of the State to offer credit facilities to the poor landless persons into whose hands the lands will be thrushed in, for if they have no money, they are sure to abandon the lands with the result that these lands will lie fallow and this will ultimately result in lower food production. We should take a very great lesson of what has happened in Russia and China. In Russia and China when land was nationalised, the Governments in those countries forgot to offer credit facilities to the landless peasants with the result that they abandoned those holdings and food production in those countries was very much affected. As a result, the two Governments had to hunt for the original farmers and their assistance was sought for.

The Governor's Address also speaks about the language question. It is really a vital question which affects everyone of us. Much heat and a good deal of anxiety have been produced in the minds of our people. The Government cannot shut their eyes and they must look at the realities of the problem as a whole. The policy of the Government to declare Tamil as the official language of the State is really a wholesome decision. All the parties in the State do really accept that decision. The real fight or the real issue in the language question is whether Hindi, which is spoken by about 42 per cent of the people in the country, should be made the official language of the Union, or whether English, which is spoken by one per cent of the people, should be made the official language of the Union. The fight is really between Hindi and English. The votaries of the English language say that English should continue to be the official language of the country for the simple reason that it is the gateway of knowledge, that it has an important place in the international discussions and also because that it is spoken by the intelligentia of the country. I cannot agree with the votaries of the English language when they say that a common language will

[Sri T. T. Daniel] [10th February 1958

not be a unifying force in the country. Language does play its part and a common language is a unifying force in every country in the world.

Sir, we must look at the realities of the problem as a whole. We like to have a common language. Which is the most probable language to become the common language of the country? The protagonists of the Hindi language will serve their cause better if they remain quiet and do not exhibit any anxiety over this official language question. Heavens or planets will not fall upon our countrymen if the transition takes a longer time. The imposition of Hindi on the people of non-Hindi areas will certainly result in a revolt. They have got a legitimate right to oppose that imposition. It is their birthright too. The votaries of the Hindi language would serve their cause better if they come forward with the formula that they would also be prepared to study one of the South Indian languages to show their goodwill towards the people in the South. Nevertheless, we must also take into consideration the importance of the Hindi language. We will have to look at things from a realistic point of view. Sooner or later, Hindi will become the official language and if people in the South neglect to study Hindi, we do not know where our lot will be in the future administrative set-up of the country.

Sir, the Fair Rent Act and the Cultivating Tenants Protection Act are like hidden treasures for the tenants of this State. But, unfortunately, the benefits of these two enactments are not extended to the integrated area. Many a time we have urged on the Government to extend the operation of those Acts to that area as well and I hope that the Government will, during the course of the Budget session, bring in an enactment to extend the operation of these two Acts to the Kanyakumari area.

Sir, the decision of the Government to accept the Award of Sri Pataskar is really a wholesome decision. With that decision, we believe and hope that the two States will progress well under friendly atmosphere.

Regarding the utilisation of the waters of the rivers in the Parambikulam area, we hope that because of the friendly atmosphere that exists in the two States and under the noble guidance of our present Ministry, it will be possible to arrive at a mutually happy agreement.

There is a suggestion in the Governor's Address that the Government intend bringing a Bill for the administration of the incorporated and unincorporated Devaswoms and other Hindu religious and charitable institutions in the Kanyakumari area. I hope that while formulating the Bill, there would be adequate provisions in it, for constituting a separate Board for these Devaswoms as contemplated under the States Reorganization Act.

Regarding the question of integration, we are really very glad to note that the Government have given an assurance that the rights and privileges of the erstwhile Travancore-Cochin personnel would be guarded and protected. We have no misgivings

10th February 1958] [Sri T. T. Daniel]

about the recent Government Order passed in that direction for fulfilling that object. I would like to characterise that Order as the Magna Carta for these Officers. But, I regret to point out that some of the Heads of Departments feel rather reluctant to put that Government Order into effect. Forgetting the fundamentals and the spirit of that Order, things are going on.

Sir, the most important question that arises before our people is not the language issue. But, the red issue is as to how we should devise ways and means to provide food for the millions of poverty-stricken people in our country. I fully believe that every one will agree with me, every political party will agree that the noble task before us is to guarantee food for all the foodless people. It is the 'dharma' of the country, it is the task or it is the trust which has been imposed on us by the millions of the people who anxiously want food. That is why I say that food should be guaranteed to every one of them. In this we should all unite together, work hand in hand, shoulder to shoulder to make the millions realise this glorious ideal of life. I think sincerely that if there is any incarnation of God, certainly God will manifest Himself before the millions of the poverty-stricken people of our country only in the form of food.

*SRI A. V. P. ASAITHAMBI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் பேரிலே நன்றி தெரிவித்து காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசுகிறபோது அனைவருமே ஜனவரி மாதம் 6-ந் தேதி பண்டிதர் நேரு சென்னைக்கு வந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் கவர்னருடைய உரையில் அந்த முக்கியமான சம்பவத்தைபற்றிய குறிப்பு ஏதேனும் இருக்கிறதாவென்று பார்த்தால் இல்லை. இப்படிப்பட்ட முக்கியமான சம்பவத்தைப்பற்றி அந்த உரையில் காணப்படாதது பெரிய குறையாகும். இதுபோன்ற பல முக்கியமான விஷயங்களைப்பற்றிய குறிப்பு அவர் உரையில் இல்லாத காரணத்தினால்தான் நான் அந்த உரையை வரவேற்பதற்கில்லை. பாராட்டுவதற்கும் இல்லை. ஜனவரி மாதம் 6-ந் தேதி நேரு அவர்கள் இங்கே வந்த சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கருப்புக் கொடி காட்டுவதன்மூலம் அமைதியான வகையில் தங்கள் எதிர்ப்பை நேரு அவர்களுக்குத் தெரிவிக்கத் தீர்மானித்து இருந்தது. கருப்புக் கொடி காட்டுவது என்பது சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட ஒன்று என்பதை, மந்திரிமார்கள் முதற்கொண்டு ஒப்புக்கொண்டு பல கூட்டங்களில் பேசி இருக்கிறார்கள். அந்த நிலைமையில் இருக்கிறபோது சட்டபூர்வமாகவுள்ள ஒரு விஷயத்தை ஒரு கட்சி அனுசரிக்கிறபோது அதை நியாயமான முறையில் அனுமதித்திருக்கவேண்டியது ஆளுகின்ற கட்சியின் ஒரு கடமையாக இருந்திருக்கவேண்டும். அதைவிட்டு அக்கட்சியார் 3-ந் தேதி நடக்க இருந்த கூட்டத்திற்கே தடை விதித்ததன் காரணமாக, அதற்குப் பின்னால் நடந்த அசம்பாவிதமான செயல்களுக்கு எல்லாம் அவர்களே முழுப் பொறுப்பாளியாகிறார்கள். ஜனவரி மாதம் 3-ந் தேதி நடைபெற இருந்த கூட்டத்திற்கு அனுமதி கொடுத்திருப்பார்களேயானால் அந்த மாதிரியான அசம்பாவிதம் எதுவும் நடந்திருக்காது. அப்படியின்றி மந்திரி சபையில் இருக்கிறவர்களும், போலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து பொறுப்பு இல்லாமல் நடந்துகொண்டுவிட்ட காரணத்தினால்தான் அந்த நிலைமை ஏற்பட்டது. 3-ந் தேதி கூட்டத்திற்குத் தடைவிதித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. கூட்டத்தை அனுமதித்திருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் அந்தக் கூட்டத்தில் என்ன பேசி இருக்க முடியும் ? 1-20 p.m.

பண்டித நேரு அவர்கள் இந்த நாட்டில் இருக்கிற தலைவர்களை, இந்த நாட்டில் இருக்கிற மக்களைத் தவறாகப் பேசியிருக்கிறார்கள் அதை பலாத்காரமற்ற முறையில் ஆட்சேபிப்பதற்கு இந்த நாட்டு

[Sri A. V. P. Asaithambi] [10th February 1958

தலைவருக்கும், மக்களுக்கும் உரிமை இல்லையா? பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லாத ஒரு கட்சியாக எங்கள் கட்சி இருப்பதனால்தான் அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ள தீர்மானித்திருந்தார்கள். பலாத்காரத்தில் நம்பிக்கை இருக்கும் பட்சத்தில் ஆரம்பத்திலேயே வேறு வழியைக் கையாண்டு இருப்போம். இல்லாத காரணத்தினால் சட்டம் அனுமதிக்கிற வகையில் கருப்புக் கொடியைத் காட்டுவதற்குத் தீர்மானித்திருந்தோம். "பண்டித நேருவுக்குக் காட்டுவதா?" என்றால் பண்டித நேருவுக்கு என்று இந்த நாட்டில் தனிச் சட்டம் உண்டா? கிடையாது. பண்டித நேருவும் ஒரு ஆள்தான். நாமும் ஒரு ஆள்தான். அவருக்குரிய மரியாதை நமக்கும் உண்டு. நமக்குரிய மரியாதைதான் அவருக்கும் உண்டு. இந்த நிலைமையில் சட்டம் அனுமதிக்கிற முறையில் கருப்புக் கொடியைக் காட்டுவதற்கு இந்த அரசியலார் எங்கள் திராவிட முன்னேற்றக் கட்சியை அனுமதித்திருக்க வேண்டும். அதைவிட்டு கூட்டம் நடத்துவதற்கே லைசென்சு தர மறுத்தார்கள். "நாங்களும் முன்பு கருப்புக்கொடி காட்டியிருக்கிறோம். இப்போது சுதந்திரம் வந்துவிட்டது. நேருவுக்குக் காட்டுவதா?" என்றால் முன்பு அவர்கள் எப்படி சுயராஜ்யத்திற்காக கருப்புக்கொடி காட்டினார்களோ அப்படித்தான் நாங்களும் இப்போது சுயராஜ்யத்திற்காகக் கருப்புக்கொடி காட்டுகிறோம். இன்றைக்கு நம் நாடு வட நாட்டுக்கு அடிமையாக இருக்கிறது. அதனால்தான் தேசீய மொழி சம்பந்தமாக நம் நாட்டு முதல் மந்திரி காமராஜரும், சர்க்கார் கட்சித் தலைவர் சுப்பிரமணியமும்கூட எங்கோ நடக்கிற மகாநாட்டில் மொரார்ஜி தேசாயைக் கெஞ்சி "ஆங்கிலத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிற துரதிருஷ்டமான நிலைமை ஏற்பட்டது. இது இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டில் இருக்க முடியும் என்று கேட்கிறேன். இதைச் சுதந்திர நாடு என்று சொல்ல முடியுமா? வட நாட்டுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்த நாடு சுயராஜ்யம் பெறவேண்டும், நேருஜி போன்றவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கிடக்கும் இந்த நாடு விடுதலை பெறவேண்டும் என்பதற்காகப் படிப்படியாக திராவிட முன்னேற்றக் கழகம் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. எடுத்துக் கொண்டு வருகிறது. இனியும் எடுக்கும். வட நாட்டுக்கு அடிமைப்பட்டு நம் நாடு கிடப்பதனால்தான் நம் நாட்டுத் தலைவர் ஸ்ரீ ராஜ கோபாலாச்சாரியார் ஒன்று சொன்னால் "உனக்கு என் கவலை?" என்றாராம். பெரியார் அவர்களைப் பற்றி "உனக்கு என் கவலை" என்னும் கேட்கப்படுகிறது. தென்னாட்டுத் தலைவர்களை இப்படி இழிவுபடுத்திப் பேசிக் கொண்டு வருவதை எத்தனை நாள் அனுமதிப்பது? இப்போது தமிழர்களுடைய கடமை என்ன என்பதை சிலப்பதிகாரம் தெரிந்தவர்கள் மறக்கமாட்டார்கள். சேரனை இகழவில்லை கனகவிசயன், தமிழனை இகழ்ந்த குற்றத்திற்கு சேரன் அவன்பேரில் படையெடுத்துச் சென்று வடநாட்டு மன்னன் கனகவிசயனை வென்றதோடு நிற்கவில்லை. அவன் தலையில் கல்லைச் சுமந்துவரச் செய்து கண்ணகிக்கு கோயில் எழுப்பினன். கண்ணகி சேர நாட்டைச் சேர்ந்தவள் அல்ல. தமிழ் நாட்டுப் பெண்மணி. இன்றைக்கு வட நாட்டுக் ஆதிக்கத்திற்கு தென்னாடு தலை வணங்கக்கூடாது என்பது ஒன்றுதான் குறிக்கோள். ஆகவே இன்றைக்கு வட நாட்டார் ராஜகோபாலாச்சாரியைச் சொன்னாலும் சரி, சி.பி. யைச் சொன்னாலும் சரி, பெரியாரைச் சொன்னாலும் சரி, காமராஜரைப்பற்றியே நாளைக்குச் சொல்ல ஆரம்பித்தாலும் சரி, நாங்கள் சும்மா இருக்கப்போவதில்லை. வட நாட்டு ஆதிக்கியத்தை நிலைநாட்ட பண்டிதர் நேரு அவர்கள் எந்த நாட்டில் இருக்கக்கூடிய தலைவரை எந்த நாட்டுக்குப் போகச் சொல்வது என்று கேட்கிறேன். இது நம்முடைய நாடு. நம்முடைய நாட்டுக்கு வந்தவர் நம் நாட்டுத் தலைவர்களை மூட்டை முடிச்சுடன் வெளியே போகவேண்டுமென்று சொல்வதற்கு என்ன உரிமை இருக்கிறது?

Sri S. LAZAR : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் கனம் சபாநாயகர் அவர்களே, பண்டித நேரு அவர்கள் இந்தச் சபையில் ஒரு அங்கத்தினர் அல்ல. அவர் ஒரு சர்க்கார் சிப்பந்தியும் அல்ல. அப்பேர்ப்பட்டவரைபற்றி இந்தச் சபையில் குறைகூறிப் பேசுவது என்று சொன்னால் அது பொருத்தமானது ஆகாது. சட்டத்திற்குப் புறம்பானதும்,

10th February 1958] [Sri S. Lazar]

விரோதமானதும் ஆகும். இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி 1939-ம் ஆண்டில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்த ராஜ்யத்தின் முதல் மந்திரியாக இருந்தபோது ஒருவர் எதிர்க்கட்சியில் இருந்து ஒருவரைப்பற்றி குறிப்பிட்டுக் குறைகூறிப் பேசினார்கள். சபையில் அங்கத்தினராக இல்லாத ஒருவரைப்பற்றி இந்தச் சபையில் அப்படிப் பேசுவது கூடாது என்று ஸி.ஆர். அவர்கள் சொன்னார்கள். அன்றைய தினம் அப்படிப் பேசுவது சட்டத்திற்குப் புறம்பானது என்பதாகவும் சபையில் தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. இன்றையதினம் சபையில் பேசிகின்ற அங்கத்தினர் நேரு அவர்களைப்பற்றி குறிப்பிட்டுக் குறைகூறிப் பேசுவதும் சட்ட வரம்புக்கு அப்பாற்பட்டது என்ற காரணத்தினால் அதை அனுமதிக்கக்கூடாது என்பதாக நான் ஒரு ஆட்சேபத்தை எழுப்புகிறேன்.

DEPUTY SPEAKER : The point of order will be answered to-morrow morning.

The House will now adjourn now and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A

* 1. *Notification issued with G.O. Ms. No. 2730, Home, dated 18th October 1957, exempting from payment of registration fees, the Chevrolet car bearing serial No. C. 56, J. 174695 imported for personal use of the Agriculture Extension Training Advisor (Technical Co-operation Mission). [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act No. IV of 1939).]*

* 2. *Notification issued with G.O. Ms. No. 2792, Home, dated 26th October 1957, amending rule 56 of the Madras Suppression of Immoral Traffic Rules, 1952. [Laid on the table of the House under section 16 of the Madras Suppression of Immoral Traffic Act, 1930 (Madras Act V of 1930).]*

* 3. *Notification issued with G.O. Ms. No. 3044, Food and Agriculture, dated 28th September 1957, enforcing the provisions of the Madras Live-stock Improvement Act, 1940 (except section 1 thereof which has already come into force) in the areas comprising the Karur taluk of Tiruchirappalli district for a period of three years.*

* 4. *Notification issued with G.O. Ms. No. 3074, Food and Agriculture, dated 5th October 1957, enforcing the provisions of the Madras Live-stock Improvement Act, 1940 (except section 1 thereof which has already come into force) in the areas comprising the Chidambaram (East) and (West) Firkas of Chidambaram taluk in South Arcot district.*

[10th February 1958

[a] 5. *Notification issued with G.O. Ms. No. 3045, Food and Agriculture, dated 28th September 1957, enforcing the provisions of the Madras Live-stock Improvement Act,* 1940 *(except section* 1 *thereof which has already come into force) in the areas comprising the Palani taluk of Madurai district.*

[a] 6. *Notification issued with G.O. Ms. No. 3047, Food and Agriculture, dated 28th September 1957, enforcing the provisions of the Madras Live-stock Improvement Act,* 1940 *(except section* 1 *thereof which has already come into force) in the areas comprising the Firkas of Hosur, Thalli and Uthamapalli of Hosur taluk in the Salem district.*

[a] 7. *Notification issued with G.O. Ms. No. 3073, Food and Agriculture, dated 5th October 1955, enforcing the provisions of the Madras Live-stock Improvement Act,* 1940 *(except section* 1 *thereof which has already come into force) in the areas comprising the Palladam, Pongalur and Varapatti firkas of the Palladam taluk in Coimbatore district.*

[a] 8. *Notification issued with G.O. No. 3377, Revenue, dated 27th August 1957, amending certain rules of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules,* 1939. [*Laid on the table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act,* 1939.]

[a] 9. *Notification issued with G.O. Ms. No. 3227, Public (Services-A), dated 18th November 1957, amending the Madras Public Service Commission Regulations so as to exclude the post of Exhibition Officer for Organization of Peripatetic Exhibitions from the Commission's purview.* [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

[b] 10. *Notification issued with G.O. Ms. No. 3557, Revenue, dated 9th September 1957, exempting all sales of seeds by the Agricultural Department in the Agricultural Depots and the Agricultural Research Stations including those in the Community Development and National Extension Service Blocks from the tax payable under section* 3 (1) *of the Madras General Sales Tax Act,* 1939. [*Laid on the table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act,* 1939.]

[b] 11. *Notification issued with G.O. Press No. 4254, Revenue, dated 11th November 1957, amending rule* 3 *of the Madras Inams (Assessment) Rules,* 1957. [*Laid on the table of the House under section* 10 (3) *of the Madras Inams (Assessment) Act,* 1956 *(Madras Act XL of* 1956).]

[b] 12. *Notification issued with G.O. Ms. No. 3275, Industries, Labour and Co-operation, dated 8th October 1957, amending rules IV and VII of the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules.* [*Laid on the table of the House under section* 19 (16) *of the Madras State Aid to Industries Act,* 1922 *(Madras Act V of* 1923).]

10th February 1958]

[b] 13. *Notification issued with G.O. No.* 582, *L.A., dated* 9*th April* 1957, *amending the regulations regarding the classification, methods of recruitment, conditions of service, pay and allowances and discipline and conduct of Executive Officers of Panchayats.*

[b]14. *Notification issued with G.O. Ms. No.* 3487, *Industries, Labour and Co-operation, dated* 25*th October* 1957, *empowering Village Industries Officers to sanction loans up to Rs.* 2,000 *and permission to print personal security bonds at the Central Polytechnic, Madras, under section* 19 *of the Madras State Aid to Industries Act*, 1922. [*Laid on the table of the House under section* 19 (16) *of the Madras State Aid to Industries Act*, 1922.]

[c] 15. *Notification issued with G.O. No.* 1562, *Home, dated* 8*th June* 1957, *framing rules for the management of the Government Reception Homes under section* 44 *of the Madras Children Act*, 1920 (*Madras Act IV of* 1920).

[c]16. *Notification issued with G.O. No.* 1581, *Home, dated* 10*th June* 1957, *framing rules for the management of the Government Boys and Girls After-care Clubs, Madras, under section* 44 *of the Madras Children Act*, 1920 (*Madras Act IV of* 1920).

[c]17. *Notification issued with G.O. No.* 1133, *L.A., dated* 27*th July* 1957, *amending the rules relating to the grant of gratuities for officers and servants of panchayats under section* 34 (2) *and* 112 (1) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act X of* 1950).

[c]18. *Notification issued with G.O. Ms. No.* 3057, *Industries, Labour and Co-operation, dated* 16*th September* 1957, *amending Form No.* 15 *of the Madras Factory Rules*, 1950.

[c]19. *Notification issued with G.O. Ms. No.* 2987, *Home, dated* 18*th November* 1957, *amending rules* 11 *and* 12 *of the Madras Borstal Schools Rules under section* 4 *of the Madras Borstal Schools Act*, 1925 (*Madras Act V of* 1926).

[c]20. *Notification issued with G.O. Ms. No.* 3169, *Food and Agriculture, dated* 12*th October* 1957, *enforcing the provisions of the Madras Live-stock Improvement Act*, 1940 (*except section* 1 *thereof which has already come into force*), *in the areas comprising the Uthamapalayam firka of Periyakulam taluk in Madurai district.*

[c]21. *Notification issued with G.O. Ms. No.* 3162, *Food and Agriculture, dated* 12*th October* 1957, *enforcing the provisions of the Madras Live-stock Improvement Act*, 1940 (*except section* 1 *thereof which has already come into force*), *in the areas comprising the Firkas of Namakkal, Sendamangalam, Mohanur and Puduchatram of Namakkal taluk in Salem district.*

[10th February 1958

